
56

# சோஷலிஸ்ட் ஜவஹர்



அமரர் சக்திதாசன் சுப்ரமணியன்

**உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )**

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

***

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

**Universal (CC0 1.0) Public Domain Dedication**

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

***

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

# சோஷலிஸ்ட் ஜவஹர்

ஆசிரியர்கள் :

அமரர் சக்திதாசன் சுப்ரமணியன்

திருமதி ஐ. சக்திதாசன் சுப்ரமணியன்

வெளியீடு :

**நித்யானந்த ஜோதி நிலையம்**

சென்னை - 28

விற்பனை உரிமை :

நியூ செஞ்சுரி புக் ஹௌஸ் (P) Ltd.

சென்னை

விலை : 11 ரு. 50 பை

முதல் பதிப்பு - 1986

உரிமை : ஆசிரியர்க்கே.

அட்டையிலுள்ள ஆசிய ஜோதியின் படம் கொடுத்து உதவியவர்கள் NCBH சென்னை, அவர்களுக்கு எங்கள் நன்றி !

அச்சிட்டோர் :
மெர்க்குரி பிரிண்டர்ஸ், சென்னை - 4.

## பொருளடக்கம்


| அத்தியாயம் | | பக்கம் |
|---|---|---|
| | நூன்முகம் | 1 |
| 1 | சோஷலிச குருத்து ஜவஹர் | 3 |
| 2 | ஆபத்து, ஆபத்து, ஆபத்து | 4 |
| 3 | பிற்காலத்திற்கு அஸ்திவாரம் | 9 |
| 4 | அரசியல் வானிலே | 10 |
| 5 | 1919 | 12 |
| 6 | பெரிய நேருவும் இளைய நேருவும் | 13 |
| 7 | சத்தியாக்கிரக தினம் - படுகொலை | 16 |
| 8 | உறுதிமொழி தந்த நெஞ்சுறுதி | 20 |
| 9 | தீமையால் நன்மையே துன்பத்தால் இன்பமே | 23 |
| 10 | ஆனந்த பவனத்திலே ஆனந்தம் ஆங்கிலேயன் மனத்திலே ஐயம் | 26 |
| 11 | வேல்ஸ் இளவரசர் | 29 |
| 12 | ஆஹா ! என்ன அக்கறை | 33 |
| 13 | கையிலே விலங்கு பூட்டி | 37 |
| 14 | நீ பேசாமல் இரு | 40 |
| 15 | மாட்டு வண்டியாம், மாட்டு வண்டி | 43 |
| 16 | அடிமைப்பட்ட நாடுகள் மகாநாடு | 44 |
| 17 | பிளவு ஏற்படாததேன் | 46 |
| 18 | சைமனே ! திரும்பிப்போ | 49 |
| 19 | தந்தையா ? மகனா ? | 52 |
| 20 | காலமும் குறிக்கோளும் | 56 |
| 21 | கொந்தளிப்பு | 59 |
| 22 | உப்போ, உப்பு ! | 61 |
| 23 | இர்வின் பிரபுவின் திருவிளையாடல்கள் | 64 |
| | வீரத்தாய், தீரர் மனைவி | 66 |
| 24 | சமாதானமா, இராச தந்திரமா ? | 68 |
| 25 | வரிகொடா இயக்கம் | 73 |
| 26 | தண்டனையா ? | 77 |

அத்தியாயம் பக்கம்


27 முதல் வட்டமேஜை மகாநாடு 79
28 பெரிய நேருவின் வருத்தம் 80
29 முதல் வட்டமேஜை மகாநாட்டுக்குப் பின் 83
30 காந்தியடிகளும் இர்வினும் 85
31 ஒப்பந்தத்தின் உள்ளே ! 90
32 இரண்டாவது வட்டமேஜை மகாநாடு ஏன் ? 92
33 அவரும் காத்திருந்தார் சந்தர்ப்பமும் வந்ததே 95
34 கொட்டியது போர்முரசு 99
35 1932 நிகழ்ச்சிகள் 100
36 எல்லையே கிடையாதா ? 101
37 இயற்கை தந்த இன்பம் 104
38 வகுப்பு வாதம்; உண்ணாவிரதம் 107
39 நாய்க்குட்டியும் நேருவும் 110
40 தாய்க்காக 111
41 தள்ளு ஜவஹரை சிறையில் 113
42 இருண்ட சூழ்நிலை இடையே சிறு ஒளி 115
43 சர்வதேச அரங்கும் தேசீய நிலையும் 117
44 நடப்பும் கனவும் 119
45 தாயும் தாரமும் 122
46 என்ன கூறுவது ? எப்படி கூறமுடியும் 125
47 பம்பாய் காங்கிரஸ் மகாநாடு 127
48 சிறை மாற்றம் 129
49 துணை இழந்த அன்றில் 132
50 அழைப்பும் மறுப்பும் 135
51 இந்தியா – நிலைமை 137
52 தேர்தலும் விளைவும் 140
53 இழப்புக்கள், ஒன்றா, இரண்டா? 141
54 1939 143
55 தனி நபர் சத்தியாகிரகம் 145
56 1941—உம் 1942—உம் 147
57 சிம்லா மகாநாடு 149
58 வாழ்க இந்தியா! 150
பார்வை நூல்கள் 152

# நூன்முகம்

ஜவஹர்லால் நேரு — ஆசிய ஜோதி; மனித குல மாணிக்கம்; இத்தகைய ஒருவர் - எவ்வாறு தம் சொந்த முயற்சியால், போராடி, புரட்சி செய்து, வெற்றி வீரராக அனைவரின் புகழுக்கும் பாத்திரமானுர் என்பதே ஒரு பெரிய கதை.

செல்வந்தர், பெரிய வழக்கறிஞர், மோதிலால் நேருவின் ஒரே மகனாய் பிறந்தார் 'நன்னா'. இவரே ஜவஹர்லால். கூட்டு குடும்பத்தில் பெரியப்பா மகன்கள் பலருண்டு. ஆனால் நேரு அனைவருக்குமே இளையவர். மூத்தவருடன் பழக முடியாத வயது இடைவெளி, எனவே அவர் அனுபவித்தது தனிமை, தனிமை, தனிமை ! !

இந்த தனிமை ஏழாண்டுகளுக்கு பின் அகன்றது. எப்படி? அவர்தம் அருமைத் தங்கை விஜயலக்ஷ்மியின் பிறப்பால். பின்னர் பல ஆண்டுகள் இடைவெளிக்கும் பின் பிறந்தார் இளைய தங்கை, கிருஷ்ணா.

செல்வ குடும்பத்தின் ஒரே ஆண் வாரிசு - நேரு. இளைய வயதில் அவர் மனத்தில் தாய் ஸ்வரூபா ராணியும், பெரிய தாயாரும் சொல்லிய இராமாயண, மஹாபாரதக் கதைகள் ஆழ பதிந்தன.

முறுக்கு மீசை ; பரந்த நெற்றி; அறிவு சுடர் விடும் முகம்; தீர்மையான நாசி; தீர்க்கமான முடிவுக்கு எடுத்துக்காட்டான முகவாய்; எடுத்த காரியத்தில் வெற்றிக் கொடி நாட்டும் உதடுகள்; நல்ல திடகாத்திரமாக காட்சியளித்த இவரே மோதிலால் — நேருவின் தந்தை. தாய் ஸ்வரூபா ராணி —

சிறிய உருவம் படைத்தவர். ஆனால் திறமைமிக்க கணவனுக்கு எந்த விதத்திலும் புத்திக் கூர்மையில் குறைந்தவர் அல்ல. "மூர்த்தி சிறியதாயினும் கீர்த்தி பெரிது" என்ற முதுமொழிக்கு ஏற்ப அமைந்தவர் ஜவஹரின் தாய். தந்தையிடம் நேரு கொண்டது பயமும் பக்தியும். தாயிடம் அவருக்குக் கிடைத்தது பாசமும், அன்பும்.

இந்தச் சூழ்நிலையில் முயன்று போராடி முன்னுக்கு வரவேண்டிய அவசியம் நேருவுக்கு எப்படி ஏற்பட்டது? ஏன் ஏற்பட்டது, என்பதை விளக்குவதே இந்தச் சிறு நூலின் நோக்கம்.

இதில் சில பகுதிகளை ஏற்கெனவே என் கணவர் அமரர் திரு. சக்திதாசன் சுப்ரமணியன் எழுதி 'நவசக்தி'யில் வெளியிட்டார். ஆனால் ஏதோ தடங்கலால் அந்நூல் முற்று பெறவில்லை. எனவே உலகம் போற்றும் உத்தமர் ஜவஹரின் போராட்டப் பகுதியை அதாவது 1947 வரை உள்ள பகுதியை எழுத முயன்று உள்ளேன்.

அறிஞர்கள் ஆதரவு தர வேண்டுகிறேன்.

திருமதி. ஐ. சக்திதாசன் சுப்ரமணியன்

முதல் அத்தியாயம்

# சோஷலிச குருத்து ஜவஹர்

ஜவஹருடன் கூடவே பிறந்தது சோஷலிசக் கருத்துக்கள் எனலாம். பெரிய சீமானின் மகனல்லவா? மிக மிக அமர்க்களமாக கொண்டாடப்படும் நவம்பர் பதினான்காம் தேதி நேருவின் பிறந்த தினம்.

அன்று காலை அவரை தராசில் ஒரு தட்டில் நிறுத்துவர். மற்றொரு தட்டில் அவர் எடைக்கு ஏற்றபடி கோதுமை தானியத்தை கொட்டி நிறுத்துவர். பின் அதை குழந்தை நேரு அங்கு வரும் ஏழை எளியவர்க்கு அள்ளி அள்ளி கொடுப்பான். இதில் அவனுக்கு பெரு மகிழ்ச்சி.

புத்தாடை உடுத்தும்போது இல்லாத மகிழ்ச்சி இனிப்புகளை பலருடன் பகிர்ந்து உண்ணும்போது ஏற்பட்டது. அடிக்கடி பிறந்த நாள் வராதா, அனைவருக்கும் இப்படி வாரி வாரி வழங்கலாமே! என்று ஏங்குவான்.

* * *

தம் ஆறாம் வயதினிலே ஒரு நாள். தம் தந்தையின் அறைக்குள் சென்றார், இளைய நேரு. தந்தை எங்கோ வெளியே போயிருந்தார். மேஜை மீது பார்த்தார். இரண்டு அழகிய பேனாக்கள். 'அப்பாவுக்கு ஒன்று போதாதோ? இரண்டாவது எதற்கு?' என்று எண்ணியது சோஷலிஸ்ட் சிறுவனின் மனம். அவ்வளவு தான். ஒரு பேனா ஜவஹரின் பைக்குள் மறைந்தது. அவர் தம் அறைக்கும் சென்று விட்டது.

தந்தையார் வந்தார். அறையில் பேனா காணாததைக் கண்டார். வேலையாட்களை கடிந்தார். 'கடும் தண்டனை தருவேன்' என்று மிரட்டினார். பயன்? எதுமில்லை.

வீடு முழுவதும் தேடினார்கள். ஜவஹர் அறையை சோதித்தனர். கண்டெடுத்தனர் பேனாவை. நரசிம்மம் ஆனார் தந்தை. ஒரே மகன் என்றும் பாராது அடித்து நொறுக்கி விட்டார்.

ஓடி வந்தார் தாய்.

> 'பிடித்தொரு தந்தை தான் அடித்தால்
> தாய் அணைப்பள்'

என்ற வாக்கின்படி அணைத்தார் மகனை. தடவிக் கொடுத்தார். அடிபட்ட புண்களுக்கு மட்டுமா மருந்திட்டாள்? இல்லை, இல்லை, வேதனையுற்ற மனத்திற்குமே !

பிற்காலத்தில் இச்சிறுவன் சோஷலிஸ்ட்டாக வளர இதைக் காட்டிலும் சிறந்த அறிகுறி உண்டோ?

## இரண்டாம் அத்தியாயம்

# ஆபத்து, ஆபத்து, ஆபத்து.

நேருவுக்கு அப்போது ஏழு அல்லது எட்டு வயது தான் இருக்கும். அச்சிறுவனுக்கு குதிரை சவாரி செய்வதில் பிரியம் அதிகம். அப்போது அவர்கள் வீட்டிற்கு வந்தது ஓர் அழகிய அரபு குதிரைக் குட்டி.

பிறந்ததே நேருவுக்கு ஒரு புத்துணர்ச்சி. ஒரு மாலை. பெரிய நேரு ஆனந்த பவனத்தில் டென்னிஸ் விளையாட்டு வீரர்களுக்கு ஓர் விருந்து ஏற்பாடு செய்திருந்தார்.

திடீரென அவர்கள் முன்னே தன்னந்தனியாக வந்து நின்றது குதிரை. சவாரிக்குச் சென்ற ஜவஹர் எங்கே? எங்கே? வந்தவர் அனைவரும் ஒவ்வொரு பக்கம் சிறுவனைத் தேடிப் பறந்தனர். ஜவஹர் கிடைத்தார். எப்படி? வழியிலே!

அங்கிருந்து மெல்ல நடந்து வந்துக் கொண்டிருந்தார். பழக்கப்படாத அந்தக் குதிரை முரட்டுத்தனமாக ஜவஹரை கீழே தள்ளிவிட்டு, தனியே வீடு வந்து சேர்ந்துவிட்டிருந்தது.

ஜவஹரைக் கண்டவுடன் அனைவரும் மகிழ்ந்தனர். அவரை வெற்றி வீரனாக தூக்கி வந்தனர்.

*　　*　　*

இம்மாதிரி ஆபத்திலே அவர் சிக்கியது இது ஒரே ஒரு முறை அல்ல. இதேபோல் அவருக்கு ஏற்பட்ட நிகழ்ச்சிகள் இன்னும் சிலவுண்டு.

1909-ம் ஆண்டிலே இங்கிலாந்தில் படித்துக் கொண்டு இருந்தபோது ஐரோப்பா சென்றார். அப்போது நாடு சுற்றுவதற்காக நார்வேக்குச் சென்றார். இவருடன் ஆங்கிலேய சகா ஒருவரும் சென்றார். இருவரும் நார்வேயின் மலைச் சரிவுகளிலே சுற்றித் திரிந்து விட்டு ஹோட்டலுக்குப் போனார்கள். குளிப்பதற்கு வெந்நீர் கேட்டார்கள்.

''குளிப்பதா? அந்த வழக்கமே இங்கு கிடையாதே.''

''பின் என்ன செய்வது? உடம்பு அழுக்காயிருக்கிறது,''

''சிறிது தூரத்திலே சிற்றாறு ஒன்று ஓடுகிறது. அங்கே போய் வேண்டுமானால் குளிக்கலாம்.''

"சரி" என்று கூறிவிட்டு இருவரும் அந்த ஆற்றுக்குப் போனார்கள்.

உறை பனி மீது கால் வைத்து வழுக்கி விழுந்தார் ஜவஹர். சிலீர் என்றது. வேகமாக ஓடிய அந்தப் பெரு வெள்ளம் அவரை வேகமாக இழுத்துச் சென்றது. குளிரினால் ஜவஹரின் உடல் மரத்து, விறைத்தது. நல்ல வேளை. நண்பர் கரையோரம் போனார். ஜவஹரின் காலைப் பற்றி மெதுவாக இழுத்து கரை சேர்த்தரர்.

இன்னும் சிறிது தூரம் சென்றிருந்தால் என்ன நிகழ்ந்து இருக்கும்? பேராபத்து விளைந்திருக்கும். செங்குத்தான நீர்வீழ்ச்சி ஆங்கிருந்தது. அதிலே சிக்கியிருப்பார் ஜவஹர். நல்ல காலம். பாரதத்தின் அதிர்ஷ்டம்! ஜவஹர் தப்பினார்; இல்லை. காக்கப்பட்டார்.

*　　*　　*

1916-ஆம் ஆண்டு. வசந்த பஞ்சமி தினத்திலே ஜவஹருக்குக் கல்யாணம் டில்லியிலே நடைபெற்றது. டில்லியிலே ஒரு புதிய நகரையே அமைத்து விட்டார் மோதிலால் நேரு. அலகாபாத்திலிருந்து தனி இரயிலில் ஏராளமான நண்பர்களையும் உறவினர்களையும் அழைத்துச் சென்றார். 'நேரு கலியாண முகாம்' என்று அந்தப் புது நகருக்கு பெயரும் கொடுக்கப்பட்டது. ஒரே குதூகலம். மணப்பெண் கமலா, கௌவுல் குடும்பத்தைச் சேர்ந்தவர்.

கலியாணம் முடிந்த பிறகு ஜவஹர் தமது குடும்பத்துடன் காஷ்மீருக்குச் சென்றார். குடும்பத்தினரை ஓரிடத்தில் தங்கச் செய்து விட்டு, மலைச் சரிவுகளிலே சுற்றித் திரியத் தொடங்கினார் ஜவஹர்.

லதக் பிரதேசத்துக்குச் சென்றார். ஹோஜிலா கணவாயைத் தாண்டிச் சென்றார். அமரநாத் குகையைப்

பார்க்க ஆசை கொண்டார். மானஸரோவர் ஏரியைப் பார்க்க விரும்பினார். எனவே ஒரு சிறு கூட்டத்துடன் மலைச் சிகரங்களின் மீது ஏறினார். சுமார் 12 ஆயிரம் அடி உயரம் ஏறியிருப்பார். பனி சரிய ஆரம்பித்தது. அந்தச் சருக்கு பனி ஜவஹரை இழுத்துச் சென்றது. செங்குத்தான மலைச் சரிவிலிருந்து கீழே உருண்டிருக்க வேண்டும். நல்ல வேளை, அவர் இடுப்பிலே கட்டியிருந்த கயிற்றை தாங்கிப் பிடித்து ஜவஹரை மீட்டார்கள் உடன் சென்றவர்கள்.

அந்த கயிறு மாத்திரம் அவரைப் பிடித்து நிறுத்தி இராவிடில் என்ன ஆகியிருக்கும் ? அதல பாதாளத்தில் வீழ்ந்திருப்பார் ஜவாஹர். பனி மேலே மூடியிருக்கும். ஆனால் நாட்டின் நல்ல காலம், ஜவஹர் காக்கப்பட்டார்.

* * *

இதே போல் தான் நடந்தது. 1926-ம் ஆண்டு மார்ச்சு மாதம். ஐரோப்பாவில் கமலா நேருக்கு வைத்திய சிகிச்சை அளிப்பதற்காக சுவிட்ஜர்லாந்து சென்றார். அவர், அவர் மனைவி கமலா நேரு, இந்திரா ஆகிய மூவருமே கப்பலில் புறப்பட்டனர்.

கமலா நேருவின் உடல் நிலை குணமாவதற்கு குறைந்த பட்சம் ஆறு மாதமாகும் என்று எண்ணினார் ஜவஹர். ஆனால் வெகு விரைவிலே உடல் நிலை குணமாகிவிட்டது. பெரிதும் மன சாந்தி அடைந்தார் நேரு. மகிழ்ச்சியாக பிரான்ஸ், ஜெர்மனி முதலிய நாடுகளுக்கெல்லாம் சென்றார் ஜவஹர். அந்த நாடுகளின் நிலைமை அறிந்தார். பலரைச் சந்தித்தார் ; விவாதித்தார்.

சுவிட்ஜர்லாந்தின் இயற்கை வனப்பு அவரை பெரிதும் ஈர்த்தது. 'ஸ்கேடிங்' என்ற பனிச் சறுக்கு விளையாட்டிலே கலந்து கொண்டார்.

வானளாவிய மலைச் சிகரங்கள் அவரது உள்ளத்தைக் கவர்ந்தன. மலைச் சிகரம் ஒன்றன் மீது நண்பர்களுடன் ஏறிக் கொண்டிருந்தார். அப்போது நண்பர் ஒருவர் என்ன செய்தார்? ஜவஹரைப் பிடித்துத் தள்ளிவிட்டார்; விளையாட்டாகத் தான். ஆனால் அந்த விளையாட்டின் வினை யாது? மலைச் சரிவிலே சறுக்கி வீழ்ந்தார் ஜவஹர். இன்னும் சில அடிகளே உருண்டு சென்றிருந்தால், என்ன ஆகியிருக்கும்? செங்குத்தான பள்ளம். அதில் வீழ்ந்து இருப்பார். நல்ல காலம் எப்படியோ சமாளித்துக்கொண்டு எழுந்து விட்டார். உயிருக்கு வந்த ஆபத்து உடலியே சில காயங்களையே ஏற்படுத்தியது. பிழைத்தார் நேரு.

* * *

இது மட்டுமா? 1927 ஆண்டு பிப்ரவரி மாதத்தில் பிரஸ்ஸல்ஸ் நகருலே நடந்தது 'அடிமைப்பட்ட நாடுகளின் மகாநாடு'. அதில் இந்திய பிரதிநிதியாக கலந்துக் கொண்டார் ஜவஹர்.

இந்த மகாநாட்டில் ஒரு கூட்டம் பிரெஞ்சு நாட்டில் கோலோன் நகரில் நடந்தது இது முடிந்ததும் அடுத்த கூட்டம் டஸ்ஸல்டிரப் நகரில் நடந்தது. இங்கு அங்கத்தினர் அனைவரும் செல்லும்படி சொன்னதால் நேருவும் மற்றவரும் டஸ்ஸல் டிரப் சென்றனர். கூட்டம் முடிந்ததும் வெளியே வந்த அங்கத்தினர்களை போலீஸார் எதிர்கொண்டனர். ''பாஸ்போர்டை காட்டுங்கள்'' என்றனர்.

நேருவிடம் பாஸ்போர்ட் இருந்ததா? இல்லை. ஏன்? கோலோன் நகரிலிருந்து புறப்பட்ட போது டஸ்ஸல்டிரப் நகரில் சில மணி நேரம் தானே தங்க போகிறோம் என நினைத்து தாம் தங்கியிருந்த இடத்திலேயே வைத்துவிட்டு வந்துவிட்டார்.

அவர் மட்டுமா ''பாஸ்போர்ட்'' இல்லாதவர்? இவருடன் ஒரு ஆங்கிலேயேரும் அவர் தம் மனைவியும் இதே இக்கட்டில் மாட்டிக்கொண்டனர்.

மூவரையும் காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்றனர். ஆனால், அதே நிலையத்திலிருந்து ஒரு மணி நேரத்திற்குப் பின் காவல் நிலைய அதிகாரி இவர்களை விடுதலைச் செய்தார். அந்த ஒரு மணி நேரத்திற்குள் தொலைபேசி மூலம் இவர்களைப் பற்றிய உண்மைகளை ஊர்ஜிதப்படுத்திக்கொண்டார் போலும்!

## மூன்றாம் அத்தியாயம்

# பிற்காலத்திற்கு அஸ்திவாரம்

ஜவஹர் முதல் சில ஆண்டுகளிலே வீட்டிலேயே கல்வி பயின்றார் அவரை உருவாக்கியவருள் முதன்மையானவர் பிரட்டினன்ட் T. புரூக்ஸ் என்பவர். இவர் பிரம்ம ஞான சபையைச் சேர்ந்தவர். ஜவஹருக்கு இலக்கியத்திலும் நுண்ணிய ஆராய்ச்சியிலும் சுவை ஏற்படுத்தியவர் இவரே.

அதே போல் அவருக்கு இந்தியிலும், வடமொழியிலும் பயிற்சியளித்தார் ஒரு வடமொழி மேதை. உபநிஷதங்களும் பகவத் கீதையும் அவருக்கு மிகவும் பிடித்தவை.

ருஷ்ய ஜப்பானிய போர் காலத்தில் அவர் நிறைய பத்திரிகைகளை வாங்கிப் படித்தார். அவர் மனத்தில் தேசீயம் வளர இதுவே வித்திட்டது எனலாம்.

தமது பதினான்காம் வயதில் இங்கிலாந்து சென்றார். தாயும், தந்தையும், சகோதரியும் உடன் சென்றனர். ஹாரோ பள்ளியில் சேர்ந்தார்.

இரண்டு ஆண்டுகள் ஓடிவிட்டன. ஹாரோவை விட்டு ட்ரினிடி கல்லூரியில் சேர்ந்தார்.

அதன் பின் 1910 ஆண்டு கேம்பிரிட்ஜ் கல்லூரில் படிப்பு முடிந்தது. ஐ ஸி. எஸ். பரீட்சைக்கு செல்ல முதலில் விரும்பினார். பின்னர் தம் எண்ணத்தை மாற்றிக்கொண்டார். பாரிஸ்டர் பரீட்சைக்குப் படித்தார்.

1912-ஆம் ஆண்டிலே பாரிஸ்டர் பரீட்சையில் தேர்ச்சி பெற்றார். இந்தியா திரும்பினார் அலகாபாத் நீதி மன்றத்திலே பாரிஸ்டராகத் தொழில் தொடங்கினார்.

## நான்காம் அத்தியாயம்

# அரசியல் வானிலே

1912-ஆம் ஆண்டின் இறுதி. இந்திய அரசியல் வானம் மந்தமாயிருந்தது. திலகர் சிறை வைக்கப்பட்டிருந்தார். தீவிரவாதிகள் தலைவரின்றித் தத்தளித்துக்கொண்டு இருந்தார்கள். மிதவாதத் தலைவர்கள் மண்டோ மார்லி சீர்திருத்தத்தின் மூலம் கிடைத்த சில பதவி இன்பத்தில் மூழ்கியிருந்தார்கள்.

கடல் கடந்த இந்தியர்களைப் பற்றி அங்குமிங்கும் சில குரல்கள் ஒலித்துக் கொண்டிருந்தன. காங்கிரசில் மித வாதிகளே பலம் பெற்றிருந்தார்கள். அந்தக் காலத்தில் காங்கிரஸ் மகா சபையானது ஆண்டுக்கு ஒரு முறை கூடும்; தீர்மானங்களை நிறைவேற்றும் அவ்வளவில் கடமை முடிந்தது என்று சும்மா இருந்து விடும்.

1912 ஆம் ஆண்டு கிறிஸ்துமஸ் பண்டிகையின்போது பங்கிபூரிலே கூடியது காங்கிரஸ். அந்த காங்கிரசுக்கு ஒரு

பிரதிநிதியாகச் சென்றார் ஜவஹர். ஆங்கில முறையில் கோட்டும் சூட்டும் அணிந்தவர்கள் தான் அங்கே குழுமியிருந்தார்கள். அப்போதைய காங்கிரஸ் ஜவஹரின் உள்ளத்தைக் கவரவில்லை. எனவே அவர் அரசியலில் தீவிரமாக ஈடுபடவில்லை.

பாரிஸ்டராகத் தொழில் புரிவதிலேயே கவனம் செலுத்தினார். எப்போதாவது ஒரு சமயம் தென் ஆப்பிரிக்க இந்தியர் பிரச்னை வரும். பிஜித் தீவுக்கு இந்தியர்களை கொண்டு செல்வது பற்றிய பிரச்னை வரும். அப்போது மாத்திரம் ஜவஹர் மிகுந்த உற்சாகத்துடன் ஈடுபடுவார்.

**ஹோம் ரூல் கிளர்ச்சி :**

இந்நிலையில் லோகமான்ய திலகர் விடுதலை பெற்றார். அன்னிபெசன்ட் அம்மையார் ஹோம் ரூல் கிளர்ச்சி தொடங்கினார். அக்கிளர்ச்சிக்குத் திலகர் ஆதரவு அளித்தார். எனவே அதுவரை வகையறியாது தவித்துக் கொண்டிருந்த தீவிரவாதிகள் ஹோம் ரூல் கிளர்ச்சியில் ஈடுபட்டார்கள்

ஹோம் ரூல் கிளர்ச்சி ஜவஹரின் உள்ளத்தைக் கவர்ந்தது. ஹோம் ரூல் லீகில் சேர்ந்தார். இந்திய அரசியலிலே அன்னிபெசன்ட் முக்கிய இடம் பெறச் செய்தது ஹோம் ரூல் கிளர்ச்சி இந்திய அரசாங்கம் சும்மா இருக்குமா ? அன்னி பெசன்டைக் வீட்டு காவலில் வைத்தது.

1916 ம் ஆண்டு காங்கிரஸ் மகா சபை லட்சுமணபுரியில் கூடியது. அந்த மகாநாட்டிலே தான் முதன் முதலாக காந்திஜியைக் கண்டார் ஜவஹர்.

ஐந்தாம் அத்தியாயம்

# 1919

1919-ஆண்டு முதல் உலக மகா யுத்தம் முடிந்த சமயம். மாண்டேகு செம்ஸ்போர்டு சீர்திருத்தத்தை எதிர் நோக்கியிருந்தார்கள் இந்திய அரசியல் வாதிகள். அதே சமயத்தில் கிலாபத் பிரச்னையில் இந்திய முஸ்லீம்கள் சீறிக்கொண்டிருந்தார்கள்.

இந்த சமயத்திலே இந்திய அரசாங்கம் ஒரு சட்டம் நிறைவேற்றியது. ரௌலட் சட்டம் என்பது அதன் பெயர். இந்த சட்டம் மசோதாவாக வெளியிடப்பட்ட போதே இந்திய அரசியல்வாதிகள் இதைக் கண்டித்தார்கள். ஏன்?

ரௌலட் மசோதாவின்படி யாரை வேண்டுமானாலும் சந்தேகத்தின் பேரில் கைது செய்யலாம். இப்படி கைது செய்யப்பட்டவருக்கு நியாயம் கோர, உரிமை மறுக்கப்பட்டது. சுருக்கமாக நியாயமற்ற முறையில் ஆதாரமற்ற சந்தேகத்தின் பேரில் கூட மனித உரிமைகளை மறுத்து மக்களை கொடுமைப்படுத்த அரசாங்கத்திற்கு பிரத்யேக உரிமை இதன் மூலம் கொடுக்கப்பட்டது. இந்த மசோதா சட்டமாகிவிட்டால் அராஜகம் தலைவிரித்தாடும்; நீதி எங்கோ பயந்து பதுங்கிவிடும், நேர்மை ஒடுக்கி, அமுக்கி, ஒருங்கே, அழிக்கவும்படும். எனவே அரசியல்வாதிகள் எல்லோரும் இதை ஒருமுகமாக எதிர்த்தார்கள். ஆனால் இந்திய அரசாங்கம் என்ன செய்தது? விடாப்பிடியாக அதைச் சட்டமாகியது.

இனி என்ன செய்வது? ரௌலட் சட்டத்தை எதிர்க்கவேண்டும். தீவிரமாக எதிர்த்தே தீரவேண்டும். அதற்குக் கீழ்படிந்து நடக்கக் கூடாதென்று கூறினார்

மகாத்மா காந்தி. அப்போதைய காங்கிரஸ் இதை ஏற்றதா ? இல்லை. எனவே காந்திஜி என்ன செய்தார் ?

**சத்தியாக்கிரக சபை**

சத்தியாக்கிரக சபையைத் தொடங்கினார். ரௌலட் சட்டத்தை எதிர்ப்பவர் — அதாவது எதிர்த்து சத்தியாக்கிரகம் செய்ய முன் வருபவர்களை எல்லாம் ஒன்று சேர்த்தார் காந்திஜி.

இவர்கள் என்ன செய்வார்கள் ? குறிப்பிட்டதொரு தினத்திலே இந்திய மக்கள் தங்கள் உணர்ச்சிகளைத் தெரிவிப்பார்கள். எப்படி ? ஹர்த்தால், ஹர்த்தால் கடையடைப்பு — வேலை நிறுத்தம் என இப்படி.

இதற்கென ஒரு நாளும் குறிப்பிடப்பட்டது. 1919-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் ஆறாம் தேதி இந்தியா முழுவதும் ரௌலட் சட்ட எதிர்ப்பு நாள் என தீர்மானிக்கப்பட்டது.

## ஆறாம் அத்தியாயம்

# பெரிய நேருவும் இளைய நேருவும்

**தென்** ஆப்பிரிக்காவிலே காந்தி செய்த அரும் பெரும் செயல்களை இந்திய மக்கள் நன்கு அறிந்திருந்தனர், உடனே செயலில் ஈடுபட துடித்துக் கொண்டிருந்த இளைஞர் உலகம் காந்தியை எதிர்நோக்கி நின்றது. காந்தியின் சத்தியாக்கிரக சபா அவர்களை காந்தம் போல் ஈர்த்தது. ஜவஹரும் இதற்கு விதிவிலக்கல்ல. அவரது இளம் உள்ளமும் சத்தியாக்கிரக சபாவையே நாடியது.

காந்தியின் சத்தியாக்கிரக கொள்கையை ஏற்கவேயில்லை மிதவாதிகள் மாறாக எதிர்த்தார்கள். கண்டித்தார்கள். மிதவாதிகளில் ஒருவர் மோதிலால் நேரு. தந்தை எதிர்ப்புக் கட்சி; இளைய நேரு சத்தியாக்கிரக சபாவின் ஆதரவு கட்சி. எனவே சூழ்நிலை எப்படியிருந்தது ?

மோதிலால் நேருவின் வீட்டிலே ஒரே ரகளை; பூசல்; இடி முழக்கம்; புயல்; கொந்தளிப்பு எல்லாம். இது மோதிலால் நேரு வீட்டில் மட்டுமா ? இல்லை, இல்லை. ஒவ்வொரு பாரத நாட்டு இளைஞன் வீட்டிலும் மோதியது; பாய்ந்தது; எதிரொலித்தது.

மகாத்மாவின் புதிய சக்தி, இந்திய இளைஞன் ஒவ்வொருவனையும் பிடித்துக் குலுக்கியது; தட்டி எழுப்பியது; துள்ளி எழச் செய்தது.

" வா ! வெளியே ! " என்று இளைஞர் கூட்டத்தையே வெளியே இழுத்தது மகாத்மாவின் குரல். " அப்படியா ? போ வெளியே ! " என்று விரட்டியது பெற்றோர் குரல்.

மோதிலால் நேருவும் பாசம் மிகுந்த ஒரு தந்தை தானே ! அங்கும் அதே சூறாவளிதான். " சத்தியாக்கிரகமா செய்யப் போகிறாய் ? சத்தியாக்கிரகம் செய்கிறதாம், ஜெயிலுக்குப் போகிறதாம் " என்று உறுமினார் மகனைப் பார்த்து.

" என்ன பைத்தியக்காரத்தனம் ! இதனால் எல்லாம் வெள்ளைக்காரன் பயந்து பணிந்து விடுவானோ ?" என்று எள்ளி நகைத்தார் பெரிய நேரு. எதிரே நின்றார் இளைய நேரு.

"நான் சத்தியாக்கிரக சபாவில் சேரத்தான் போகிறேன் !" என்றார் திட்டவட்டமாக.

இளைஞனுடைய துணிவு முதியவரை சற்று கலக்கியது. "வேண்டாம் அப்பா, வேண்டாம்! சேராதே! ஜெயிலுக்குப் போகவேண்டிவரும்".

"வந்தால் என்ன? வரட்டுமே! ஜெயிலுக்குப் போகிறேன்!"

"ஜெயிலுக்குப் போகிறாயா! அப்பா! என் செல்வமே! நீயா ஜெயிலுக்குப் போக நினைக்கிறாய்? வேண்டாம் விட்டு விடு. அந்த எண்ணத்தை விட்டு விடு சத்தியாக்கிரகம் வேண்டாம்; நீ ஜெயிலுக்குப் போகவும் வேண்டாம்; நமது கௌரவம் என்ன? நம் அந்தஸ்து என்ன? நீ ஜெயிலுக்குப் போகிறதாவது? " என்று நயமாகவும் பயமாகவும் கூறினார் மோதிலால் நேரு.

இந்த விவாதம் ஒரு நாள் நடந்ததா? இரு நாட்கள் நடந்ததா? பல நாட்கள் தொடர்ந்து நடந்தது. குமுறினார் தந்தை மகனின் பிடிவாதத்தைப் பார்த்து. இறுதியாக, "சத்தியாக்கிரக சபாவில் நீ சேரக்கூடாது."

"சேருவேன்! சேர்ந்தே தீருவேன்!"

"விடமாட்டேன்" "முடியாது"

ஒரு நாள் மோதிலால் நேருவுக்கு கோபம் வந்துவிட்டது.

"போ போய் விடு! இனி இந்த வீட்டில் உனக்கு இடமில்லை வீட்டை விட்டுப் போ! போ வெளியே!" என்று கர்ஜித்தார்.

கோபத்தை கக்கிய பெரிய நேரு, எரிமலை குளிர்ந்தது போல், சட்டென் குளிர்ந்தார். இன்னும் என்ன செய்தார்? இரவு முழுவதும் தரையிலே படுத்துத் தூங்கினார் ஓர் இரவா? சில இரவுகளா? அல்ல, அல்ல! பல இரவுகள்! எதற்காக?

மகன் ஜெயிலுக்குப் போனால் தரையிலே படுத்துத் தூங்கவேண்டி வருமே. அப்படி தூங்கினால் எப்படியிருக்குமோ. நமது செல்வக் குமாரன் எப்படி தூங்குவான்? தூக்கம் தான் வருமா? உடம்பு நோகுமே! அது எப்படி யிருக்கும் என்று பார்ப்போம்!"

என்று சோதித்தறிய, பிள்ளைப் பாசத்தை என்றுமே வெளியே காட்டத பெரிய நேரு, தம்மை வாட்டி வதைத்துக் கொண்டார்.

ஏன்? பாசம் தலை தூக்கியதால்.

## ஏழாம் அத்தியாயம்

# சத்தியாக்கிரக தினம்—படுகொலை

ஏப்ரல் ஆறாம் தேதி எப்போது வரும் என்றும் மக்கள் எல்லோரும் ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருந்தனர். இளைஞர் செயல் புரிய துடிதுடித்துக் கொண்டியிருந்தனர்.

ஏப்ரல் ஆறு; பொழுது புலர்ந்தது. கடைகள் திறக்கப்படவில்லை. எங்குமே கடைகளெல்லாம் மூடியே கிடந்தன. ஒவ்வொரு நகரிலும் ஹர்த்தால் வெற்றி! பெரும் வெற்றி! பொது மக்களின் உற்சாகம் வெள்ள பெருக்கென ஓடியது.

பஞ்சாப் மாகாணத்திலே அமிர்தசரஸ் என்று ஒரு நகரம் அங்கும் ஹர்த்தால் மாபெரும் வெற்றி, கண்டது பஞ்சாப் மாகாண அரசாங்கம்; கொண்டது நடுக்கம். எனவே அடக்கு முறை ஆட்சியை கவிழ்த்து விட்டனர் இருவர். ஒருவர் டாக்டர் சத்தியபால்.

மற்றொருவர் டாக்டர் கிச்லு.

ஏப்ரல் 10ந் தேதி இந்த இருவரையும் அரசாங்கம் கைது செய்தது. கண்காணாத பிரதேசத்துக்குக் கொண்டு போய் விட்டது. இந்தச் செய்தி ஊர் முழுவதும் காட்டுத் தீயென பரவியது. கொதித்தெழுந்தனர் மக்கள். 'தலைவர்களை விடுதலை செய்வீர்' என்று முழங்கினர்.

## ஜாலியன் வாலாபாக் படுகொலை

ஏப்ரல் 13ந் தேதி பெரியதொரு கண்டன கூட்டம், அரசாங்கத்தின் நியாயமற்ற செயலைக் கண்டிக்கக் கூடியது. தலைவர்களை விடுவிக்க வேண்டும் என்று தெரிவிப்பதற்காக கூடியது. உடன் அரசாங்கம் என்ன செய்தது? தடை உத்தரவை பிறப்பித்தது. தடை உத்தரவைக் கண்டு மக்கள் அஞ்சுவரோ? இல்லை, இல்லை! ஆயிரக்கணக்கில் திரண்டு வந்தனர்.

ஊரின் நடுவே ஒரு மைதானம். ஜாலியன்வாலாபாக் என்பது அதன் பெயர். இந்த மைதானத்தைச் சுற்றி வீடுகள். மூன்று பக்கங்களிலும் மதில். உள்ளே செல்லவும், வெளியே வரவும் ஒரே வழி. அதுவும் சிறியதொரு வழி.

இங்கேதான் மக்கள் கூடியிருந்தார்கள். ஆயிரமா? ஐயாயிரமா? அல்ல; இருபதினாயிரம். ஆம். இருபது ஆயிரம் மக்கள்!

இராணுவ வீரர் 150 பேர் துப்பாக்கிகளுடன் வந்தனர். ஜெனரல் டயர் அவர்களுக்குத் தலைவன். இருந்த ஒரே வழியை அடைத்துக் கொண்டனர்.

"போய் விடுங்கள்! இல்லாவிட்டால் சுட்டுத் தள்ளுவேன்!" என்று அச்சுறுத்தினன் டயர்.

எங்கே போவது? எப்படி செல்வது? வழியில் அடைத்து நின்றதே இராணுவம்! ஒன்று! இரண்டு! மூன்று! நொடிகள் பறந்தன. அவ்வளவுதான்.

"சுடு!" என்றான் டயர். துப்பாக்கி முழக்கம் எங்கும் நிறைந்தது. குண்டுகள் 'வெடி வெடி' என வெடித்தன.

"ஐயோ! ஐயோ!" என்ற தீனக்குரல். எங்கும் ஓலம்! கூட்டத்தின் அழுகை வானைத் தொட்டது. ஆனால் டயரின் நெஞ்சைத் தொடவில்லையே! அந்தோ பரிதாபம்!

'பொத், பொத்' என்று சுருண்டு விழுந்த மக்கள் எத்தனை, எத்தனை பேர்! சுவர் மீது ஏறிக் குதித்து தப்பித்து ஓடலாம் என்று ஏறிய மக்களையாவது டயர் விட்டானோ? இல்லையே. குண்டுகளை அவர்கள் மீதும் அல்லவா கருணை இன்றி வீசினான்.

குண்டுபட்ட பறவை சிறகையடித்துக் கொண்டு கீழே வீழ்வது போல் வீழ்ந்த அப்பாவி மக்களின் எண்ணிக்கையைக் கண்டும் என்ன செய்தான்?

சுட்டான்; சுட்டான்; குண்டுகள் தீரும் வரை சுட்டான்; ஆத்திரம் தீரும் வரைச் சுட்டான் அந்தக் கிராதகன்.

நிரபராதியான மக்கள்; ஒரு பாவமும் அறியாத மக்கள், அவன் கொலை வெறிக்கு பலியாயினர். 379 பேர் மாண்டனர். 1200 பேர் படுகாயம் அடைந்தனர். அவன் கொலை வெறி இன்னும் அடங்கவில்லை. "துப்பாக்கியில் குண்டு இல்லையே" என்று ஏங்கினான். துப்பாக்கி இல்லாவிட்டால் என்ன? பிரம்பு இருக்கிறதே!

நாடு எங்கும் இராணுவச் சட்டம் பிரகடனம் செய்யப் பட்டது. கௌரவம் வாய்ந்த பிரமுகர்கள், கண்ணியம் மிக்கவர்கள் என்று பாராமல் நடுத் தெருவிலே நிற்க வைத்துப் பிரம்பால் அடித்தான். துணியில்லாமல் நடுத் தெருவில் மண்டியிட்டுத் தவழ்ந்து போகச் சொன்னான். இன்னும் எவ்வளவோ கொடுமைகள்!

அமிர்தசரஸ் அக்கிரமம், ஜாலியன்வாலாபாக் படு கொலை பாரத தேசத்தையே ஒரு குலுக்குக் குலுக்கியது.

தேசத் தலைவர் பலரும் அமிர்தசரசுக்கு விரைந்து சென்றார்கள். துன்பத்துக்கு இலக்கான மக்களுக்கு உதவி செய்வதற்கென்று ஒரு கமிட்டி அமைக்கப்பட்டது. பண்டித மதன் மோகன் மாளவியாவும் சுவாமி சிரத்தானந்தரும் அக்கமிட்டிக்குத் தலைமை தாங்கினர்.

ஜாலியன் வாலா பாக் படுகொலை பற்றி விசாரிக்க ஒரு கமிட்டியை நியமித்தது காங்கிரஸ். பண்டித மோதிலால் நேரு, தேசபந்து C.R. தாஸ் முதலியோர் அதிலே இடம் பெற்றனர். சி.ஆர். தாஸுக்கு உதவியாக ஜவஹர்லால் நேரு நியமிக்கப் பட்டார்.

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் மூர்க்கச் செயல்களை அப்போது தான் ஜவஹர் அறிந்தார். அவரது உள்ளமும் கொதித்தது. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தைப் பகைத்தது. அங்குலம் அங்குலமாக வெறுத்தது. ''இந்த ஏகாதிபத்தியத் திற்கு சாவு மணி அடித்தாலன்றி இந்திய மக்களுக்கு உய்யும் வழியில்லை'' என்று அறிந்தார்.

அவர் மாத்திரமா? அல்ல, அவரது தந்தையார் மோதிலால் நேருவும் மனம் மாறினார். பிரிட்டிஷ் நீதியின் மீது அவர் கொண்டிருந்த நம்பிக்கை தகர்ந்தது. வேருடன் சரிந்தது; வீழ்ந்தது. பிரிட்டன் மீதிருந்த பாசம் அறுந்தது. மகன் மீதிருந்த பாசம் ஓங்கியது.

அது மாத்திரமல்ல, மகாத்மா காந்தியுடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பு அப்போது தான் நேருவுக்கு ஏற்பட்டது. பெரிய நேருவும், இளைஞர் நேருவும் காந்தியால் கவரப் பெற்றனர்.

எட்டாம் அத்தியாயம்

# உறுதி மொழி தந்த நெஞ்சுறுதி

கோடை காலத்திலே மலை நகரங்களுக்குச் சென்று வசிப்பது வெள்ளையர் உண்டாக்கியதொரு பழக்கமாகும். அந்தக் காலத்திலே வெள்ளையர்களைப் போல் வாழ்வது தான் நாகரீகம் என்று கருதினார்கள் இந்தியப் பணக்காரர்கள். எனவே அவர்களும் மலைவாசங்களைத் தேடிச் செல்வது வழக்கமாக இருந்தது.

முசோரி என்பது முக்கியமானதொரு மலைநகரம். 1920ம் ஆண்டிலே மே மாதத்தில் ஜவஹரின் அன்னையாரும் மனைவியும் அந்த மலை நகருக்குச் சென்று வசித்தனர். காரணம் இவ்விருவரும் உடல் நலமின்றி இருந்தமையே.

சவாய் ஹோட்டல் என்பது ஒரு பெரிய ஹோட்டல். அதிலே தான் இவர்கள் தங்கியிருந்தார்கள். மனைவியையும் தாயையும் கவனிப்பதற்காகச் சென்றிருந்தார் ஜவஹர். ஒரு மாத காலம் அங்கே தங்கியிருந்தார்.

அதே ஹோட்டலில் ஆப்கானிய தூது கோஷ்டி ஒன்றும் தங்கியிருந்தது. இந்திய அரசாங்கத்துடன் ஒப்பந்தம் செய்துக் கொள்வதற்காக வந்திருந்தது அந்த தூது கோஷ்டி.

ஒரு நாள் முசோரி ஜில்லா போலீஸ் சூப்பிரண்டு வந்தார். ஜவஹரை கண்டு பேசினார். ''ஆப்கானிய தூது கோஷ்டியினர் உடன் எவ்விதத் தொடர்பும் கொள்ளலாகாது'' என்று அவர் தெரிவித்தார்.

''அப்படியா! ஆப்கானிய தூது கோஷ்டி ஒன்று இங்கே தங்கியிருப்பது தாங்கள் சொல்லவே எனக்குத் தெரிந்தது'' என்றார் ஜவஹர்.

"ஓர் உறுதி மொழி வேண்டும்" என்றார் போலீஸ் அதிகாரி.

என்ன உறுதி மொழி?

"ஆப்கன் தூது கோஷ்டியுடன் எவ்வித தொடர்பும் கொள்ள மாட்டேன் என்ற உறுதிமொழி."

"அவசியம் வேண்டுமோ?"

"ஆம்; எழுதி கொடுக்க வேண்டும்."

என்ன செய்வது? யோசித்தார் ஜவஹர். உறுதி மொழி எழுதிக் கொடுத்தால் முசோரியில் தங்கலாம். தாய் அருகில் இருக்கலாம். ஆனால் ..... உறுதி மொழி எழுதிக் கொடுப்பது ஜவஹரின் சுயமரியாதைக்குக் கேடு விளைவிப்பதாகும்; தன் மானத்தை இழப்பதாகும். தன்மானத்தை இழப்பதா? முடியாது, முடியாது, முடியவே முடியாது!

"எழுதிக் கொடுக்க முடியாது" என்றார் ஜவஹர்.

"அப்படியானால் தாங்கள் இந்த ஊரில் இருக்க முடியாது. 24 மணி நேரத்தில் முசோரியை விட்டு போய்விட வேண்டும். மீண்டும் வரக் கூடாது."

இந்த உத்தரவை பிறப்பித்தார் ஜில்லா போலீஸ் சூப்பிரண்டு. போலீஸ் உத்தரவுக்கு அடங்கி ஊரை விட்டுப் போவதா? அல்லது உத்தரவை மீறுவதா?

இவ்வாறு யோசித்தார் ஜவஹர். அப்போது சட்டம் மீறும் திட்டம் அமுலுக்கு வரவில்லை. எனவே போலீஸ் அதிகாரியின் உத்தரவுப்படி நடக்க முடிவு செய்தார் ஜவஹர். முசோரியை விட்டு புறப்பட்டார்; அலகாபாத் சேர்ந்தார்.

இந்த சம்பவம் ஜவஹரின் உள்ளத்திலே ஆழப் பதிந்தது. பிரிட்டிஷ் அதிகார வர்க்கத்தின் மீது கோபம் உண்டு பண்ணியது.

ஜவஹரின் தந்தை மோதிலால் நேரு இது பற்றி கேள்வியுற்றார்; கடும் கோபம் கொண்டார். கவர்னருக்கு ஒரு கடிதம் எழுதினார்.

"அந்த உத்தரவு அமுலில் இருந்தாலும் சரி, இல்லா விட்டாலும் சரி; என் குடும்பத்தாருக்கு உடம்பு சுகமில்லாது போனால் கட்டாயம் முசோரிக்குப் போவோம்!" என்று அந்தக் கடிதத்திலே குறிப்பிட்டிருந்தார்.

பதினைந்து நாட்கள் சென்றன. ஜவஹரும் அவரது தந்தையாரும் மீண்டும் முசோரிக்கு புறப்பட்டனர். அப்போது சர்க்காரிடம் இருந்து ஒரு தந்தி வந்தது. போலீஸ் அதிகாரியின் உத்திரவு ரத்து செய்யப்பட்டு விட்டதாக அதிலே கூறப்பட்டு இருந்தது.

தந்தையும் தனயனும் முசோரிக்குச் சென்றனர். அந்த ஹோட்டலில் என்ன கண்டனர்? எந்த ஆப்கனுடன் தொடர்பு கொள்ளக் கூடாதென்று சர்க்கார் உத்தரவு பிறப்பித்தனரோ அதே ஆப்கன் ஒருவர் இந்திராவைத் தூக்கி வைத்துக் கொண்டிருக்க கண்டனர்.

ஜவஹரிடம் போலீஸ் உறுதிமொழி கேட்டதும், அவர் அவ்வாறு உறுதியளிக்க மறுத்ததும், முசோரியை விட்டு போகுமாறு போலீஸ் அதிகாரி உத்தரவிட்டதும் பத்திரிகை களில் வெளி வந்தன. ஆப்கன் கோஷ்டியினரும் இதைப் படித்தனர். விளைவு?

அது முதல் தினமும் ஒரு கூடை பழம், ஒரு கூடை பூ இவ்விரண்டையும் நேரு குடும்பத்ினர்களுக்கு அனுப்பி வந்தனர்.

* * *

ஒன்பதாம் அத்தியாயம்

# தீமையால் நன்மையே துன்பத்தால் இன்பமே

இந்த உலகத்திலே நன்மையும் தீமையும் கலந்தே வருகின்றன. இன்பமும் துன்பமும் தொடர்ந்தே வருகின்றன.

முசோரி போலீஸ் சூப்பிரண்டு ஜவஹரை விரட்டியது மற்றொரு விதத்தில் நன்மையாகவே முடிந்தது.

ஜவஹர்லால் நேரு சீமானின் செல்வப் புதல்வர். எளிய வாழ்க்கை இன்னதென்றே அறியாதவர். ஆடம்பர வாழ்விலும் சுக போகங்களிலே ஊறியவர். பணக்கார சூழ்நிலையே அறிந்தவர்; வாழ்ந்தவர். மேற்கு நாட்டிலே படித்துப்பட்டம் பெற்றவர். மேற்கு நாட்டுக் கலாசாரத்துக்கு நெஞ்சைப் பறி கொடுத்தவர். இத்தகைய ஒருவர் உண்மை இந்தியாவைக் காணும் வாய்ப்பு அப்போது தான் ஏற்பட்டது. ஜில்லா போலீஸ் சூப்பிரண்டு முசோரியினின்றும் ஜவஹரை விரட்டியதும் நன்மைக்கே. அதாவது இந்திய நாட்டு விவசாயிகளின் பரிதாப நிலையை நேரில் காணும் வாய்ப்பைத் தந்தது.

*  *  *

அந்தக் காலத்திலே விவசாயி என்று சொன்னால் கண் முன் தோன்றியவன் எவன்? ஏழைக் குடியானவனா? அல்ல. நிலத்திலே உழுது பயிர் செய்தவனா? அல்ல, அல்ல! ஜமீன்தார்கள், பெரிய நிலச்சுவான்தார்கள், மிராசுதார்கள்; இவர்களே அக்கால விவசாயி எனப்பட்டோர். ஏழை உழவனைப் பற்றி எண்ணுவோர் எவருமிலர். நிலப்பிரச்னை என்று அவர்கள் பேசிய யாவும் இந்தப் பெரு நிலக்

கிழார்களின் பிரச்னையே; ஏழை உழவனின் பிரச்னையே அல்ல. ஏழை உழவனோ இந்த பெரு நிலக் கிழார்களின் பிடியில் அகப்பட்டுத் தத்தளித்தான்; திணறினான். அவனும் மனிதனே என்று கருதியவர் எவருமிலர்.

## இராமச்சந்திரர்

இந்த மாதிரியான சமயத்திலே விவாசாயிகளிடையே தொண்டு செய்து வந்தார் ஒருவர். அவரது பெயர் இராமச்சந்திரர். மகாராட்டிரத்தைச் சேர்ந்தவர். பிஜித் தீவு சென்று உழைத்து திரும்பியவர். துளசிதாசரின் ராமாயண சுலோகங்களை மனப்பாடம் செய்தவர். "ஜே! சீதாராம்!" என்ற கோஷத்தின் மூலம் ஆயிரக்கணக்கான விவசாயிகளை ஒன்று திரட்டும் ஆற்றல் பெற்றவர். எப்போதாவது ஒரு முறை விவசாயிகள் சிலரை அழைத்துக் கொண்டு நகர்ப் புறங்களுக்கு வருவார் இவர். பிரபல அரசியல் தலைவர் களிடையே அவர் தம் துன்பங்களை எடுத்துக் கூறுவார். திரும்பிப் போய் விடுவார்.

1920ம் ஆண்டு. ஜூன் மாதம். ஒரு நாள். சுமார் இருநூறு விவசாயிகளை அழைத்துக் கொண்டு அலகாபாத் வந்து சேர்ந்தார் இராமச்சந்திரர். அலகாபாத்திலிருந்து ஐம்பது மைல் தொலைவில் உள்ள பிரதாப நகர் என்னும் பகுதியில் இருந்து அந்த விவசாயிகள் வந்திருந்தார்கள். ஊருக்கு வெளியே யமுனை ஆற்றின் கரையிலே அவர்கள் தங்கி இருந்தார்கள். அவர்களைக் கண்டு பேசுமாறு ஜவஹர்லால் நேருவை அழைத்தார் இராமச்சந்திரர்.

அப்போது என்ன நடந்திருந்தது? போலீஸ் அதிகாரி ஜவஹரை முசோரிலிருந்து விரட்டி, அவர் அலகாபாத்துக்கு வந்திருந்தார். வேதனை, அவமானம், என்ற இரு உணர்ச்சிகள் அவரை வாட்டிய சமயம் இராமச்சந்திரரின் அழைப்பு சிறந்த மருந்தாக அமைந்தது. உடனே அவர் தம்

அழைப்பை ஏற்றுக் கொண்டு யமுனை ஆற்றின் கரைக்குச் சென்றார். அங்கிருந்த விவசாயிகளைக் கண்டார். அவர்கள் தோற்றம் அவர் உள்ளத்தைக் கவ்வியது; விவசாயிகளின் துன்பக் கதைகள் அவரை உலுக்கின. தங்கள் கிராமங்களுக்கு வந்து எல்லாவற்றையும் நேரில் காணவேண்டும் என்று மன்றாடினார்கள் விவசாயிகள். அவர்களது வேண்டுகோளுக்கு இணங்கினார் ஜவஹர். இரண்டு நாட்களுக்குப் பின் வருவதாகக் கூறினார். 'சரி' என்று விவசாயிகளும் திரும்பிச் சென்றார்கள்.

## பாரத தரிசனம்

இரண்டு நாட்களுக்குப்பின் நண்பர் சிலருடன் அந்த கிராமத்துக்குச் சென்றார் ஜவஹர். ஏழை விவசாயிகளின் வாழ்வை நேரில் கண்டார். அவர் தம் துன்பக் கதைகளைக் கேட்டார். ஜமீன்தார்கள், போலீஸ்காரர்கள், தாலுக்தார்கள் புரியும் அட்டூழியங்களைக் கேட்டார்; ஏழ்மையின் கோரத் தாண்டவத்தைக் கண்டார்; வறுமை பாரதத்தை தரிசித்தார்; உடன் பிறவா வறுமை தெய்வங்களைக் கண்டார்; மனங் கனிந்தார்; உள்ளங் கரைந்தார்.

"ஆகா! இவ்வளவு நாள் என்ன காரியம் செய்தோம்? என்ன காரியம் செய்தோம்? இங்கே இந்த ஏழை மக்கள் வறுமையிலே வாடித் தவிக்கிறார்கள், நாமோ அலகாபாத்திலே ஆனந்த பவனத்திலே சுகபோகத்திலே கேளிக்கைகளிலே வாழ்நாளைக் கழிக்கிறோம். என்ன அநியாயம்! என்ன அநியாயம்!" என்று துடித்தார்.

துக்கம் தொண்டையைக் கவ்வியது. வெட்கம் அவரை வாட்டியது. "பெருங்குற்றம் செய்து விட்டோம்" என வருந்தினார். புதியதோர் உணர்ச்சி! புதியதோர் ஆவேசம் அவரை ஆட்கொண்டது. அவரது மனம் மாறியது. மாற்றம்! மாற்றம்! புரட்சிகரமான மாற்றம்.

'அன்று முதல் இந்தியா என்றால் கந்தல் உடுத்திய இந்திய பட்டினிப் பட்டாளம் தான் என் கண் முன் நிற்கத் தொடங்கின'

சுயசரிதை-நேரு.

பத்தாம் அத்தியாயம்

# ஆனந்த பவனத்திலே ஆனந்தம் ஆங்கிலேயன் மனத்திலே ஐயம்.

தேசீயத்தின் எழுச்சி கண்டார்கள் வெள்ளையர்கள்; குடல் நடுக்கம் கொண்டார்கள். எந்த நேரத்தில் தங்களுக்கு ஆபத்து வருமோ என்று பயந்தார்கள்.

சாதாரண அப்பாவி 'இந்தியன் ஒருவன், வெள்ளையர் வசிக்கும் வீட்டு வழியே சென்றுக் கொண்டிருப்பான். அவ்வளவு தான். அவனைக் கண்ட உடனே வெள்ளையனுக்கு நடுக்கம் வந்துவிடும். எந்த நேரத்திலே இந்தியன் தன்மீது பாய்ந்து தாக்குவானோ என்று பயந்து சாவான். உடன் ரிவால்வரைக் கையிலே எடுத்துக்கொண்டு நிற்பான்.

ஒன்றுமறியா இந்தியனோ தன் வழியே போய்க் கொண்டு இருப்பான்.

தன் வீட்டிலே வேலை செய்த இந்தியர்களை வெள்ளையன் ஒரு போதும் நம்பியதில்லை. எப்போதும் சந்தேகக் கண்ணோட்டத்திலேயே இருப்பான்.

காந்தியின் அகிம்சைக் கொள்கையை அவர்கள் நம்ப வில்லை; சிறிதும் நம்பவில்லை, அது சுத்த ஏமாற்று வித்தை; வெறும் புரட்டு எனறெல்லாம் எண்ணினார்கள். அகிம்சை, அகிமசை என்று மேலுக்குக் கூறி விட்டு இரகசியமாக பெரிய தொரு ஆயுதப் புரட்சிக்குத் திட்டமிடுவதாகவே அவர்கள் கருதினார்கள். எனவே எநத நிமிஷத்திலும் அது வெடித்து விடும் என்று எதிர்பார்த்தார்கள்.

## ஸ்வரூபா திருமணம்

1921 ஆண்டு மே மாதம் 10ந் தேதி ஜவஹரின் தங்கை ஸ்வரூபா என்ற விஜயலட்சுமிக்கு கல்யாணம் அலகாபாத்தில் நடைபெற இருந்தது.

காங்கிரசின் பெரிய தலைவர் பலரும் கல்யாணத்துக்குக் வந்திருந்தனர். மூத்த தலைவர் பலரும் வந்திருந்த காரணத்தால் காரியக் கமிட்டி கூட்டமும் நடைபெற்றது. அகில இந்தியத் தலைவர் பலரும் அலகாபத்துக்கு வருகிற போது உள்ளூர் குட்டித் தலைவர்கள் சந்தாப்பத்தை நழுவ விடுவார்களா?

இந்தத் தலைவர்களின் வருகையை அரசியலுக்கு நன்கு பயன்படுத்திக் கொள்ள விரும்பினார்கள் அவர்கள். எனவே, அரசியல் மகாநாடு ஒன்றும அலகாபாத்திலே நடைபெற்றது.

கேட்க வேண்டுமா? ஒரே கோலாகலம்! எங்கும் எழுச்சி! எங்கும் கிளர்ச்சி! எங்கும் ஒரே உற்சாகம், ஆரவாரம்! தேசீயவாதிகள் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருந்தார்கள்.

சுற்றுப்புற கிராமங்களிலிருந்து ஏராளமான மக்கள் அலகாபாத் நகருக்கு வந்திருந்தனர். எங்கும் கூட்டம், கூட்டம், பெருங்கூட்டம்.

இது கண்டு நடுங்கினார்கள் அலகாபாத்திலே வாழ்ந்த வெள்ளையர். புரட்சி எப்போது வெடிக்குமோ என்று அஞ்சி செத்தனர். எந்த நேரத்திலே தங்கள் வீடுகளைத் தாக்குவார்களோ என்று பயந்தனர். தங்களை கொன்று குவித்து விடுவரோ என்று திகில் கொண்டனர். ரிவால்வர்களை எல்லாம் எடுத்துத் தயார் நிலையில் வைத்து கொண்டிருந்தனர்.

இப்படி திடீரென வெள்ளையர் நடுங்குவானேன்? வெள்ளையருக்கு ஏதாவது ஆபத்து நேர்ந்தால் உடனே கோட்டைக்குள் ஓடி ஒளிந்துக்கொள்ளும்படி அவசர செய்தி அனுப்பியதேன்? அவசர உபயோகத்திற்கு அலகாபாத் கோட்டையை ஒழித்துத் தயாராக வைப்பானேன்?

இந்த ஏற்பாடுகளுக்கெல்லாம் காரணம் பயம். திடீர் பயத்திற்குக் காரணம்?

1857 ம் ஆண்டிலே நடந்ததல்லவா முதல் சுதந்திரப் போர்? அது தொடங்கியதும் மே பத்தாம் நாள் தான். மீரட்டில் தான் தொடங்கியது. பழைய நினைவு, பயத்தைக் கிளறிவிட்டு இருந்தது.

அது மட்டுமா? கூடவே சந்தேகம் வெள்ளையரின் மனத்தைப் பிடித்து ஆட்டியது. அதே நாளை இப்போது கொண்டாட இந்தியர் முற்பட்டிருப்பதாகக் கருதியது 'சூடு பட்ட பூனை'. கலியாணம் என்ற காரணத்தைக் காட்டி எல்லாரும் திரண்டு வந்திருக்கின்றனர். இது சும்மா. உள் நோக்கம் வேறு. அது தான் புரட்சிக்குச் சதி; ஆம்; சதி திட்டம் தீட்டுகிறார்கள். இல்லாவிட்டால் மகாநாட்டை கூட்டுவார்களா?'' இப்படி எண்ணி எண்ணி, கலங்கி, திகில் பட்டது வெள்ளையர் கூட்டம்.

மோதிலால் நேரு அவர்களது அழைப்பிற்கிணங்கி அலகாபாத்துக்கு வந்தார் காந்திஜி. நீண்ட நேரம் பேசினார். சட்ட மறுப்புக் கொள்கையை விரிவாகக் கூறினார்.

பிறகு ஜவஹரிடமும் பேசினார். அவசரப்பட்டு ஏதும் செய்ய வேண்டாம் என்று இளைய நேருவுக்கு யோசனையும் கூறினார்.

இவையெல்லாம் வெள்ளையர் அறிவரோ? அகிம்சா போதகர் காந்தியின் தலைமையில் அல்லவா தேசியவாதிகள்

திரண்டிருக்கிறார்கள்? சதித் திட்டங்களுக்கு காந்தி அனுமதிப்பாரா? நிரபராதிகளான வெள்ளையர் சிலரைக் கொன்று குவிப்பதால் என்ன பயன்? சுயராஜ்யம் வந்து விடுமா?

இந்திய தேசீயவாதிகள் உயர்ந்த பண்புடன் நடந்துக் கொள்வார்கள் என்பதை அந்த வெள்ளையர் அறியவில்லை. பயம் அவர் தம் சிந்தையை மழுங்கச் செய்து விட்டது, பாவம்!

ஆனந்த பவனத்திலே மங்கல வாத்தியம் முழங்கின. அரசியல் மகாநாட்டிலே தேசீய கோஷங்கள் முழங்கின. ஆனால் அலகாபாத் வெள்ளையர் நெஞ்சோ திகிலில் துடித்துக்கொண்டே இருந்தது.

ஒத்துழையாமை இயக்கம் உச்ச கட்டத்தில் இருந்தபோது வேல்ஸ் இளவரசர் பகிஷ்காரம் நாடு முழுவதும் பரவிய பின்னரும் இப்படித் தான் பயந்தார்கள்.

## பதினோராம் அத்தியாயம்

# வேல்ஸ் இளவரசர்

1921-ல் வேல்ஸ் இளவரசர் இந்தியாவுக்கு நவம்பர் மாதத்தில் விஜயம் செய்வதாக இருந்தது. இதையொட்டி பிரமாதமான வரவேற்பு அவருக்கு அளிக்க அரசாங்கம் மும்முரமாக ஈடுபட்டது.

மகாத்மா என்ன செய்ய சொன்னார்? புதியதொரு போராட்டம்—எத்தகையது? அகிம்சை போராட்டம் பற்றி பட்டி தொட்டிகளிலெல்லாம் பிரசாரம் செய்தார்—அறப்போர்! பகிஷ்கார போர்! ஒத்துழையாமைப் போர்!

1920-ம் ஆண்டு தேர்தலை பகிஷ்காரம் செய்யவேண்டும்; அரசும் ஒத்துழைக்கக் கூடாதென்ற அவரது தாரக மந்திரம் முழு வெற்றி பெற்றது. இது மக்களிடையே காந்தியடிகளின் மதிப்பை அதிகரித்தது. 'கிராமத்திற்கு போ!' என்ற ஜவஹரின் குரலும், வேல்ஸ் இளவரசர் வரும் போது 'பகிஷ்காரம் செய்!' என்ற காந்திஜியின் குரலும் ஒன்று சேர்ந்து ஒலித்தன.

1920-ம் ஆண்டு கடைசியில் நாகபுரியில் காங்கிரஸ் கூடியபோது, கிஸான் இயக்கமே உருக்கொண்டாற்போல் தோன்றியது. 1921-ம் ஆண்டு மார்ச் மாதத்தில் 6-ந் தேதி சுல்தான்பூரில் விவசாயிகளை சந்திக்கக் கூடாதென்று இ பி. கோ. 144 தடை விதிக்கப்பட்டது. இளஞ்சிங்கம் தடையை மீறியது. அரசாங்கம் செய்வதின்னதென தெரியாது, திகைத்தது.

ஆனால் இப்படி கண்ணை மூடிக்கொண்டு அரசாங்கம் இருந்துவிடுமா? ஏற்ற சமயத்திற்காக பதுங்கும் நரியாக இருந்தது.

கதராடையே உடுத்தும் தேசீய வாதிகளைப் பிடிக்க ஒரு திட்டமிட்டது. இந்துஸ்தானியே பேசும் காங்கிரஸ்காரர்களை வலை வீசி பிடிக்க, இளவரசர் பகிஷ்காரம் உதவியது.

நவம்பர் பதினெழாம் தேதி; வேல்ஸ் இளவரசர் பம்பாய் வந்திறங்கினார். எங்கும் கிளர்ச்சி, கலகம்—தொடர்ந்து மூன்று நாட்களுக்கு தடைபெற்றது.

தேச பந்து தாஸ் நடக்கவிருக்கும் காங்கிரஸ் மகாநாட்டுக்கு வந்தார் தலைமை தாங்க. ஆனால் விலங்கு கையில் பூட்டப்பட்டது. மற்ற மாநிலங்களிலும் இதே நிலை, யார், எவர், சம்பந்தபட்டவரா என்றே கவனிக்காது· பார்த்தவரை யெல்லாம் விலங்கிட்டது வெள்ளை அரசாங்கம்.

பிரதேச காங்கிரஸ் கமிட்டி அங்கத்தினர்—55 பேரையும் ஒரு சமயத்தில் கைது செய்தது.

யார் யாரை கைது செய்யவேண்டுமென்ற ஜபிதாவில் முதலிலிருந்தது பெரிய நேருவின் பெயர் தான்.

டிசம்பர் 6 : ஆனந்த பவனம் மாலை சென்ற போது நேரு என்ன அறிந்தார்? போலீஸ்காரர் தம் தந்தையாரையும் தம்மையும் கைது செய்ய வந்ததை அறிந்தார்.

தந்தை சட்ட விரோத ஸ்தாபனமான காங்கிரஸில் இருந்தது தவறு; பெருங்குற்றம்.

மகன் கடையடைப்பு, ஹர்த்தால், துண்டு பிரசுரங்களை விநியோகித்தது—மன்னிக்க முடியாத குற்றம். அதாவது கைது செய்ய கற்பிக்கப்பட்ட குற்றங்கள்.

இதற்குக் கண் துடைப்பாக ஒரு போலி நீதி விசாரணை நாடகமும் அரங்கேற்றப்பட்டது.

இருவருக்கும் ஆறு மாத சிறைவாச தண்டனை. இலச்சுமணபுரியில், ஒரு கொட்டகையில் ஆரம்பித்தது நேருக்களின் முதல் சிறை வாசம்.

1921—22 ஆண்டுக்குள் ஜெயில்கள் நிரம்பி வழிந்தன. தாமாகவே சிறைக்குச் செல்ல 30,000 பேருக்கு மேல் முன் வந்தனர்.

ஒவ்வொரு நாளும் சிறை கொட்டகையை சுத்தம் செய்தார் ஜவஹர். சர்க்காவில் நூல் நூற்பார். தன் தந்தை, தன் துணிகளை வெளுப்பதில் ஆனந்தங் கொண்டார். வகுப்புகளும் நடத்தினார்.

1922-ம் ஆண்டில் சௌரி சௌராவில் மக்கள் உணர்ச்சி வசப்பட்டு, அகிம்சையை மறந்து, கொடூரமாக காவல் நிலையங்களையும் காவல்காரர்களையும் தீக்கிரையாக்கினர்.

கண்டார் காந்தி; பர்தோலி ஒத்துழையாமை இயக்கத்தை நடத்துவதில்லை என்று தீர்மானித்தார். திடீரென மார்ச் மாதம் மூன்றாம் தேதி இளைய நேரு விடுதலை செய்யப்பட்டார்.

விடுதலைக்கு அரசு கூறிய காரணம்? அவர் தவறுதலாக கைது செய்யப்பட்டு விட்டாராம்! எப்படி கதை!

சில நாட்கள் ஆனந்த பவனத்தில் தங்கிவிட்டு, மார்ச் 10ந் தேதி காந்திஜியின் ஆமதாபாத் ஆசிரமத்திற்குச் சென்றார். அடிகளை சந்தித்தாரா? இல்லை. அவர் அங்கு அடையுமுன்னரே காந்தியடிகள் கைது செய்யப்பட்டு சபர்மதி ஜெயிலுக்கு அழைத்துச் செல்லப்பட்டார். அவருக்கு 6 ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட்டது.

* * *

நேரு தலைவரில்லா காங்கிரஸ் ஸ்தாபனத்தை ஒழுங்கு படுத்த நினைத்தார். அண்ணலின் நிர்மாண திட்டங்களில் கவனம் செலுத்தினார். அன்னிய நாட்டு துணிகள் பகிஷ்காரத்தில் தீவிரமாக ஈடுபட்டார். பெரியதொரு பகிஷ்கார குழுவை தோற்றுவித்தார். அன்னிய துணிகள் வைத்திருந்த கடைக்காரர்களை அவைகளை இறக்குமதி செய்வதை நிறுத்தவேண்டும் என்று மறியல் செய்தார்.

அவ்வளவே! தன் வியாபார சந்தையிலே மண் விழுவதை கண்டது அரசு. எடுத்தது நடவடிக்கை. அது என்ன?

சட்ட விரோதமான நடவடிக்கைகளில் ஈடுபடுவதாக இளைய நேரு மீது குற்றம் சுமத்தியது. 6 வாரங்களுக்குப் பின் மீண்டும் அதே இலட்சுமணபுரி சிறைக்கு அனுப்பப் பட்டார்.

அதே சமயம் பெரிய நேரு நைனி சிறைக்கு மாற்றப் பட்டார். இங்கே ஜவஹர் படிப்பதிலே ஆழ்ந்தார் இந்த இரண்டாவது முறை, தம் முப்பத்து மூன்றாவது பிறந்த நாளை சிறையிலே முதன் முறையாகக் கொண்டாடினார். இம்முறை அவருக்கு 21 மாத சிறை தண்டனை.

1930 ம் ஆண்டு சனவரி முப்பத்தி ஒன்றாம் தேதி விடுதலை பெற்றார்.

## பன்னிரண்டாம் அத்தியாயம்

# ஆஹா ! என்ன அக்கறை !

1923-ம் ஆண்டு சனவரி 31, லட்சுமணபுரி சிறையில் இருந்து ஜவஹர் விடுதலை பெற்றபோது, தேசமெங்கும் சிறையிலே இருந்த தேசீயவாதிகள் பலர் அதே சமயத்தில் விடுதலை பெற்றனர்

சிறையிலிருந்து வெளிவந்த நேரு என்ன கண்டார்? முற்றும் மாறான காட்சி கண்டார். கிலாபத் கிளர்ச்சியின் போது இருந்த ஹிந்து-முஸ்லீம் ஒற்றுமை எங்கோ மறைந்து விட்டது. எங்கும் வகுப்புவாதம் தலை தூக்கி நின்றது. பொங்கி வந்த தேசீய வெள்ளம் எப்படியோ வடிந்துவிட்டது. தேசீய வாதிகளிடையே தோல்வி மனப்பான்மை காட்சி அளித்தது.

காங்கிரஸ்காரர்கள் சட்டசபை தேர்தல்களிலே போட்டி இடவேண்டும், சட்டசபைகளைக் கைப்பற்ற வேண்டும்; சுதந்திரப் போராட்டத்திற்கு சட்டசபைகளையும் உபயோகிக்க வேண்டும் என்று கூறினர் சிலர். தேசபந்து சித்தரஞ்சன் தாஸ் இவர்களிலே முக்கியமானவர். மோதிலால் நேரு இவருக்கு ஆதரவாக நின்றார்.

சட்டசபை பிரவேசம் கூடாது. நிர்மாணத் திட்டத்திலே தான் கருத்துச் செலுத்த வேண்டும். அதன் மூலம் அடுத்த போராட்டத்திற்கு நாட்டை தயார் செய்யவேண்டும் என்பது காந்தியின் கருத்து.

முன்னே கூறப்பட்டவர் மாறுதல் வேண்டுவோர் என்று அழைக்கப்பட்டனர். பின்னே கூறப்பட்டவர் மாறுதல் வேண்டாதார் என்று அழைக்கப்பட்டனர். இவ்விதம் இரு பிரிவாக பிரிந்து நின்றனர் காங்கிரஸ்காரர்.

ஜவஹரின் உள்ளம் எங்கு சென்றது? காந்தி பக்கமே சென்றது. இளைய நேருவையும் தம் பக்கம் இழுக்க முயன்றார் சி. ஆர். தாஸ். ஆனால் அம்முயற்சியில் அவர் வெற்றி பெறவில்லை. தோல்வியே அடைந்தார். இளைய நேரு காந்தியின் வலது கரமாகவே நின்றார்.

இந்த சமயத்திலே நாடெங்கும் முனிசிபல் தேர்தல்கள் நடைபெற்றன. இந்தத் தேர்தல்களிலே காங்கிரஸ்காரர்கள் கலந்துக் கொண்டார்கள், போட்டியிட்டார்கள். பலன் என்ன?

கல்கத்தா நகர மேயராக தேர்ந்தெடுக்கப்பட்டார் சி. ஆர். தாஸ். பம்பாய் கார்ப்பரேஷன் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார் வித்தல் பாய் படேல். ஆமதாபாத் முனிசிபல் தலைவரானார் வல்லபாய் படேல். அலகாபாத் முனிசிபல் தலைவரானார் ஜவஹர்லால் நேரு. இப்படியாக காங்கிரஸ்காரர் பலர் ஸ்தல ஸ்தாபனங்களிலே புகுந்தனர்; பதவிகளைக் கைப்பற்றினர்.

மாண்டேகு செம்ஸ்போர்டு சீர்த்திருத்தத்தின்படி நடைபெற்ற முதல் தேர்தலை காங்கிரஸ் பகிஷ்கரித்துவிட்டது. அதன் பயன் என்ன ஆயிற்று? மிதவாதிகளும், சந்தர்ப்ப வாதிகளும் உள்ளே புகுந்தார்கள். இரண்டு கைகளையும் கூப்பி இவர்களை வரவேற்றது பிரிட்டிஷ் அரசாங்கம்; இவர்களைப் பாராட்டியது; கௌரவித்தது. போராட்ட சமயத்திலே காங்கிரஸை நசுக்குவதற்காக இவர்களை நன்கு பயன்படுத்தியது.

அதன் பிறகு என்ன ஆயிற்று? பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் தனது சுய உருவைத் காட்டத் தொடங்கியது. மதிப்பு, மரியாதை எல்லாம் மாயமாய் மறைந்தன. இதனால் மனம் புண்பட்டனர் மிதவாதிகள். மந்திரி பதவியைத் துறந்தனர். சந்தர்ப்பவாதிகள் அட்டைபோல் ஒட்டிக்கொண்டனர். மந்திரி பதவி என்பது ஏலத்துக்கு வந்துவிட்டது. கடைச் சரக்காகி விட்டது. பிரிட்டிஷ் அரசாங்கம் வலை வீச தொடங்கியது.

தூண்டில்காரனுக்கு முள் மீது கண். அதே போல் பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கு ஜவஹர் மீது கண். பதவி மோகம் என்ற மாய வலையை ஜவஹர் மீது வீசத் தொடங்கியது.

ஸர். கிரிம்வுட் என்பவர் ஓர் ஆங்கிலேயர்; அலகாபாத் ஹைகோர்ட் நீதிபதி. பாரிஸ்டராக தொழில் புரிந்த காலத்திலே இவர் முன் ஒரே ஒரு முறை ஆஜராகியிருந்தார் ஜவஹர். நேரடியான தொடர்பு எதுவும் கிடையாது. இருந்தாலும் ஜவஹருக்கு ஒரு கடிதம் எழுதினார் கிரிம்வுட். தம்முடன் அடிக்கடி தொடர்பு கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

ஜவஹர்லால் நேரு முனிசிபல் சேர்மன் ஆன பிறகு என்ன செய்தார் கிரிம்வுட்? அடிக்கடி வரத் தொடங்கினார்.

வரி குறைப்பு வேண்டி வருவதாக ஒரு சாக்குச் சொல்லிக் கொண்டு வருவார். ஆனால் அவருடைய எண்ணம் வேறு.

ஒரு நாள் அதை மறைமுகமாகவுந் தெரிவித்தார். எப்படி? பல்வேறு விஷயங்களைப் பற்றி விவாதித்தார். மிதவாதிகளைப் பற்றி விவாதித்தார். மிதவாதிகளைப் பற்றி அலட்சியமாகப் பேசினார். அப்புறம் கொஞ்சங் கொஞ்சமாக நெருங்கி வந்தார்.

"உங்களுடைய அந்தஸ்து என்ன? படிப்பு என்ன? திறமை என்ன? செல்வாக்கு என்ன? ஒழுக்கம் என்ன? இலட்சியந்தான் என்ன? இப்படிப்பட்ட ஒருவர் இந்த மாகாணத்தின் கல்வி மந்திரியாக இருந்தால் எவ்வளவு நன்றாகயிருக்கும்? எவ்வளவு சேவை செய்யலாம்? கல்வி அல்லவா இன்றைய இந்தியாவின் மிக முக்கியமான தேவை!

'நீங்கள் மாத்திரம் சரி என்று தலையசைத்தால் போதும், மந்திரி பதவி நாளைக்கே உங்களைத் தேடி வரும். நீங்கள் செய்யும் காரியங்களில் அதிகாரிகள் குறிக்கிட மாட்டார்கள். நான் அவர்களிடம் ஏற்கெனவே இது பற்றி பேசினேன். அவர்கள் உறுதி கொடுத்திருக்கிறார்கள்." என்று கூறினார்.

ஜவஹர்லால் நேரு என்ன செய்தார்? அந்த வலையில் வீழ்ந்தாரா? இல்லை, இல்லை! பாரதியாரின் கவிதைக்கு ஓர் எடுத்துக்காட்டாக நின்றார்.

"வீர சுதந்திரம் வேண்டி நின்றார் பின்னர்
வேறொன்று கொள்வாரோ? — என்றும்
ஆரமுது உண்ணுதற்கு ஆசை கொண்டார்கள்
கள்ளில் அறிவை செலுத்துவாரோ?"

பதிமூன்றாம் அத்தியாயம்

# கையிலே விலங்கு பூட்டி, சங்கிலியால் பிணைத்து, தெரு வழியே இழுத்துச் சென்றார்கள்.

இப்பொழுது இந்தியாவிலேயே சமஸ்தானம் என்பதே இல்லை. அவற்றை எல்லாம் ஒழித்துக்கட்டி விட்டோம். ஆனால் பிரிட்டிஷார் ஆண்ட போது அப்படி இல்லை. சுமார் 560 சமஸ்தானங்கள் இருந்தன. அவற்றுள் ஒன்று நாபா. பஞ்சாபில் இருந்தது இது.

பஞ்சாபிலே இருந்த சீக்கிய சமஸ்தானங்கள் இரண்டு. ஒன்று பாடியாலா, மற்றொன்று நாபா. நாபா மன்னருக்கும் பாடியாலா மன்னருக்கும் சண்டை. நாபா மன்னரை பதவியில் இருந்து விரட்டி விட்டது வெள்ளையர் அரசாங்கம். நாபா சமஸ்தானத்தின் பொறுப்பு வெள்ளை அதிகாரி ஒருவரிடம் ஒப்புவிக்கப்பட்டது.

அகாலியர் சீக்கியருள் ஒரு வகுப்பினர்; வீர மரபினர்; இராணுவத்திலே சேவை செய்து திரும்பியவர்கள். நாபா மன்னருக்கு இழைக்கப்பட்ட அநீதியைக் கண்டனர். சீறி எழுந்தனர். மன்னரை மீண்டும் பதவியில் அமர்த்தவேண்டும் என்று கிளர்ச்சி செய்தார்கள்.

நாபாவிலும் கிளர்ச்சி நடந்தது. மற்றெல்லா இடங்களிலும் கிளர்ச்சி, கிளர்ச்சி, கிளர்ச்சி ! இந்த கிளர்ச்சிக்கு எரியூட்டுவது போல அமைந்தது மற்றொரு நிகழ்ச்சி.

ஜெய்டோ-நாபா சமஸ்தானத்தில் உள்ள ஓரிடம் இங்கேயிருந்தது ஒரு குருத்துவாரம். குருத்துவாரம் என்பது சீக்கியர் கோவில். ஜெய்டோ குருத்துவாரத்தில் அகாலியர் நுழையக்கூடாது; வழிபாடு செய்யக்கூடாது என்று உத்தரவு பிறப்பித்தார் நாபாவின் வெள்ளை அதிகாரி.

இந்த உத்தரவை மீறி சத்தியாக்கிரகம் செய்தனர் அகாலியர். நாபாவுக்கு வெளியேயிருந்து அகாலியர் ஜாதா வரும். போலீசார் அவர்களை நன்றாக உதைத்து நடுக் காட்டிலே கொண்டு போய் விடுவார்கள். இப்படி தொடர்ந்து நடந்துக் கொண்டே வந்தது.

சத்தியாக்கிரகம் செய்த அகாலியர்களோ மிக அமைதி ஆக இருந்தார்கள். சாத்வீகப் போர் செய்தார்கள். இவர் தம் கிளர்ச்சி தேச பக்தர்களின் கவனத்தைக் கவர்ந்தது.

இதை நேரிற் சென்று காண விரும்பினார் ஜவஹர்லால். எனவே நாபாவுக்குப் புறப்பட்டார். இவருடன் மற்றும் இருவர் சென்றனர். ஒருவர் ஸ்ரீ கே. சந்தானம் மற்றொருவர் ஸ்ரீ கித்வானி.

இம்மூவரும் ஜெய்டோ என்கிற இடத்தை அடைந்தனர். அந்த சமயத்திலே சீக்கியர் ஜாதா ஒன்று வந்துக் கொண்டு இருந்தது.

சமஸ்தான போலீஸ் அதிகாரி நேருவிடம் வந்தார். ஓர் உத்தரவைக் கொடுத்தார். என்ன உத்தரவு? நாபா சமஸ்தான எல்லைக்குள் நேரு நுழையக் கூடாது. அப்படி நுழைந்திருந்தால் உடனே வெளியே போய் விட வேண்டும்.' இதுதான் உத்தரவு. உத்தரவு பிறப்பித்தவர் நாபா நிர்வாக வெள்ளை அதிகாரி.

“நாங்கள் இங்கே போராட்டத்தில் கலந்துக் கொள்ள வரவில்லை. பார்த்து விட்டுப் போகவே வந்தோம், உடனே போய்விடவேண்டும் என்ருல் எப்படி போவது? அடுத்த ரயில் எப்போது வருகிறதோ அப்போது போய்விடுகிரோம் அதுவரை இங்கே தான் இருப்போம்!'' என்று பதில் அளித்தார் நேரு.

இது கேட்ட போலீஸ் அதிகாரிக்குப் பொறுக்கவில்லை. மூவரையும் கைது செய்தார். ஜெடோ நகரின் தெரு வழியே இம்மூவரையும் நடத்திச் சென்றார். எப்படி?

கையிலே விலங்கு. நேருவின் வலது கையுடன் சந்தானத்தின் இடது கையைப் பிணைத்து விலங்கு. அதைத் தொடர்ந்து நீண்டதொரு சங்கிலி. அந்த சங்கிலியைப் பிடித்து இழுத்துக் கொண்டு முன்னே சென்றான் ஒரு போலீஸ்காரன். அன்று இரவு முழுவதும் போலீஸ் லாக்கப்பில் இருந்தனர். அப்போதும் விலங்கை நீக்கவில்லை. படுப்பது எப்படி? தூங்குவது எவ்வாறு?

இரண்டு மூன்று நாட்களுக்குப் பிறகு விசாரணை நாடகம் தெடங்கியது. இரண்டு வாரம் தொடர்ந்து நடந்தது இந்த போலி நாடகம். தண்டனை — உண்மையாக வழங்கப்பட்டது.

நாபா அதிகாரி மற்றொரு உத்தரவைப் பிறப்பித்தார். “உங்கள் மீது விதிக்கப்பட்ட தண்டனையை ரத்து செய்து விட்டோம். இனி இந்த சமஸ்தானத்திற்குள் கால் வைக்கக் கூடாது. போங்கள்!'' என்று கண்டிருந்தது அந்த உத்தரவில்.

மூவரையும் இரயில் நிலையத்திற்கு அழைத்துக்கொண்டு வந்து, ரயில் வண்டியில் ஏற்றி அனுப்பினார் போலீஸ் அதிகாரி.

இந்திய சமஸ்தானங்கள் எப்படிப்பட்டவை, அவற்றின் நிர்வாகம் எப்படி என்பதை ஒருவாறு அறிந்துக்கொண்டார். சமஸ்தானங்களை ஒழித்துவிட அன்றே உறுதி கொண்டார். அது 1948ஆம் ஆண்டிலே நிறைவேறியது.

அரச பிரமுகர்களுக்குக் கொடுக்கப்பட்ட 'பிரிவி பர்ஸ்' என்ற தொகை அவர்தம் அருமை மகள் அன்னை இந்திரா நிறுத்தினார்.

ஒருங்கிணைந்த ஒரே பாரதம்; குட்டி குட்டி அரச பொம்மைகளை ஒழித்தப்பின், ஏற்பட்டது.

## பதினான்காம் அத்தியாயம்

## "நீ பேசாமல் இரு"

1924 ஆம் ஆண்டும், 1925 ஆம் ஆண்டிலும் காங்கிரசில் மக்கள் இயக்கம் என்று குறிப்பிடதக்கவை ஏதும் இல்லை.

ஜவஹர் 1926 ஆம் ஆண்டிலே அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் பொதுக் காரியதரிசியாகத் தேர்ந்தெடுக்கப் பட்டார்.

காங்கிரஸ் காரியதரிசிகளுக்கு சம்பளம் கொடுக்க வேண்டுமென்ற பேச்சு அப்போது எழுந்தது. ஜவஹர்லால் நேருவுக்கு இது விருப்பம்தான். உழைப்புக்கு ஊதியம் அளிக்காமல் எவருடைய உழைப்பையும் பெறலாகாது என்பது அவருடைய கருத்து. ஆனால் அந்த நாளிலே காங்கிரஸ் முதல்வர்களின் கருத்து வேறு விதமாக இருந்தது. பொது சேவைக்குப் பணம் வாங்குவதா? கூடாது என்பது

அவர்களுடைய கருத்து. அதை அகௌரமாகவும் கருதினார்கள்.

ஆனால் ஜவஹர் அப்படி நினைக்கவில்லை. சர்க்கார் உத்தியோகமும் பொது சேவை தானே! பொது மக்களின் வரிப் பணத்திலிருந்து தானே சர்க்கார் ஊழியர்களுக்குச் சம்பளம் கொடுக்கப்படுகிறது. அதை மாத்திரம் வாங்கலாமா? ஆகவே, இதில் கௌரவமும் இல்லை, அகௌரவமும் இல்லை. இது ஜவஹரின் கருத்து. எனவே சம்பளம் கொடுத்தால் பெற்றுக்கொள்ளத் தயாராக இருந்தார். ஜவஹருக்கு உதவியாக இன்னொரு காரியதரிசி இருந்தார். அவருக்குப் பணத் தேவை அதிகம். இருந்தாலும் கௌரவம் கருதி அவர் சம்பளம் பெற்றுக்கொள்ள மறுத்தார். எனவே ஜவஹருக்கும் சம்பளம் கிடைப்பது நின்று போயிற்று.

சம்பளம் பெற்றுக்கொண்டு காங்கிரஸ் சேவை செய்வதை பெரிய நேரு விரும்பவில்லை; எதிர்த்தார்.

ஜவஹருக்கோ வருமானம் எதுவுமில்லை. சொந்த செலவுக்காக அப்பாவை எதிர்பார்த்திருப்பது அவருக்குச் சிறிதும் பிடிக்கவில்லை. பெரிய பெரிய கம்பெனி முதலாளிகள் அவருக்கு ஏதாவது கௌரவ பதவி கொடுத்துச் செலவுக்கு வேண்டிய பணமும் கொடுப்பதாகச் சொன்னார்கள். ஆனால் ஜவஹருக்கு அதுவும் பிடிக்கவில்லை.

''என்னைக் காட்டி தங்கள் வியாபாரத்தைப் பெருக்கவே அவர்கள் இவ்வாறு கூறுகிறார்கள். எனவே அது வேண்டாம்'' என்று தீர்மானித்து விட்டார்.

மிகவும் தர்மசங்கடமான நிலைமை. இதை அப்பாவிடம் எப்படி சொல்வது? அவர் மனம் புண்பட்டுவிடுமே!' என தயங்கினார். இப்படி பல நாள் யோசித்தார். ஒரு நாள் மெதுவாக அப்பாவிடம் பேச்சுத் தொடங்கினார்.

# 42

‘‘வக்கீல் தொழிலைத் தொடங்கட்டுமா, அப்பா ?’’

‘‘ஏன் ?’’

‘‘சம்பாதிக்காமல் எத்தனை நாள் தங்களுக்குச் சுமையாக இருப்பது’’

‘‘எனக்கென்ன சுமை ?’’

‘‘இல்லை, என் சொந்தச் செலவுக்குக் கூட உங்களைத் தொந்தரவு செய்ய வேண்டிருக்கிறதே என்றுதான் !’’

‘‘பைத்தியம் ! தினமும் கோர்ட்டுக்குப் போய் உனது நேரம் முழுவயையும் அங்கே செலவிட்டு ஒரு வருஷத்தில் நீ சம்பாதிக்கக்கூடிய பணத்தை நான் நாலே நாளில் சம்பதித்துத் தருவேனே ! வருடம் முழுவதும் நீ ஹாய்யாகச் செலவு செய்யுலாமே. சந்தோஷமாகக் காங்கிரஸ் வேலையைக் கவனி. உனக்கும் உன் மனைவிக்கும் வேண்டிய பணத்தை தான் சம்பாதித்துக் கொடுக்கிறேன். ஒன்றும் வேண்டாம், சும்மா இரு !’’ என்று வாயடைத்து விட்டார் பெரியவர்.

தமது அருமை மைந்தன் அரசியல் வானில் ஜகஜ்ஜோதி ஆகப் பிரகாசத்துடன் எழுவதைக் கண்டார் ; மனம் பூரித்தார் ; மகிழ்ச்சி ; மகிழ்ச்சி ; பெரு மகிழ்ச்சி.

பதினைந்தாம் அத்தியாயம்

# மாட்டு வண்டியாம் மாட்டு வண்டி

மகனை கண்ணிமைப் போல் காத்து பேணி வந்த பெரிய நேருவுக்கு, மனவருத்தமும் தந்தது ஜவஹரின் செயல். அது என்ன ?

விவசாயிகளுடன் தொடர்பு கொண்ட காலம் முதல் ஜவஹரின் மனப்பான்மை ஒரேயடியாக மாறிவிட்டது. புரட்சிகரமான மனப்பான்மை.

விலையுயர்ந்த ஆடைகள் அணிவதை விட்டு விட்டார். ஏழை எளியவர் போலவே உடுத்தத் தொடங்கினார். ஏழை மக்களுடன் கலந்து நெருங்கி உறவு கொண்டார். அவர்கள் நடுவே அமர்ந்து அவர்கள் கொடுக்கும் எளிய உணவை வாங்கி ஆனந்தமாக உண்பார். அவர்களது இன்ப துன்பங்களைக் கேட்டு விசாரிப்பார். அவர் தம் வீடுகளுக்கு அடிக்கடி செல்வார்.

தமது செல்வ மைந்தன் சுகபோகங்களைத் துறந்து ஏழைகளுடன் பழகி வருவது பெரிய நேருவுக்கு வருத்தம் தந்தது. எனினும் மகனின் மகிழ்ச்சியே தமது மகிழ்ச்சியாகக் கருதி பேசாது இருந்தார்.

வண்டி ஒன்று வைத்து இருந்தார் ஜவஹர். மாட்டு வண்டி. அதிலே ஏறிக் கொள்வார். போக வேண்டிய இடங்களுக்கெல்லாம் செல்வார். ஏழை விவசாயிகளைப் போலவே தாமும் வாழவேண்டும் என்ற எண்ணத்தினால் இவ்வாறு செய்தார். பெரிய நேருவுக்கு இது சிறிதும் பிடிக்கவில்லை.

ஒரு நாள் மாலை பெரிய நேரு தோட்டத்திலே நாற்காலியில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தார். இன்னும்

பலர் ஏதேதோ பேசிக் கொண்டிருந்தனர். அப்போது ஜவஹரின் மாட்டு வண்டி தோட்டத்துக்குள் நுழைந்தது. மெதுவாக வண்டியை ஒருபுறம் நிறுத்தினார். மாட்டை அவிழ்த்துக் கட்டி விட்டு திரும்பினார். பெரிய நேரு சீறினார்.

“அப்பா! உன் வண்டியையும் மாட்டையும் வெளியிலேயே விட்டு விட்டு உள்ளே வா” என்றார்.

சீமான் வீட்டுப் பிள்ளை செல்கிறாராம் மாட்டு வண்டியில். மாட்டு வண்டியாம், மாட்டு வண்டி !

ஏன் ?

‘நமது பிள்ளை இவ்வளவு எளிய வாழ்வு வாழ்வதா?’ இதுதான் பெரிய நேருவின் சீற்றத்துக் காரணம் — அது மட்டுமா ? பிள்ளை மீதிருந்த பாசம் !

## பதினாறாம் அத்தியாயம்

# அடிமைப்பட்ட நாடுகள் மகாநாடு

1926 ஆம் ஆண்டு டிசம்பர் மாத இறுதியிலே ஜெர்மனி நாட்டிற்கு சென்றார் ஜவஹர். அங்கே பல நண்பர்களைச் சந்தித்தார். 1927-ம் ஆண்டு பிப்ரவரி மாதத்திலே பிரஸல்ஸ் நகரிலே ஒரு மகாநாடு நடைபெறப் போவதாக அறிந்தார். ‘அடிமைப்பட்ட நாடுகளின் மகாநாடு’ என்று அதற்குப் பெயர்.

மெக்சிகோ நாடும், கோமிண்டாங் சீனாவும் அந்த மகாநாட்டுக்கு வேண்டிய பண உதவி செய்தன. அந்த மகாநாட்டுக்குச் சென்றார் ஜவஹர். இந்திய தேசீய காங்கிரசின் பிரதிநிதியாக அதிலே கலந்து கொண்டார்.

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் எப்படி இந்தியாவை சுரண்டுகிறது என்பது பற்றி அம்மகாநாட்டிலே பேசினார் ஜவஹர். இந்திய தேசீயத்தின் குரல் சர்வ தேச அரங்கிலே முதன் முதலாக ஒலிக்கத் தொடங்கியது.

மகாநாட்டின் முடிவிலே லீக் ஒன்று ஏற்படுத்தப்பட்டது. 'ஏகாதிபத்திய எதிர்ப்பு லீக்' என்று அதற்கு பெயர். அதன் நிர்வாகக் கமிட்டி அங்கத்தினராக தேர்ந்தெடுக்கப்பட்டார் ஜவஹர். ஜார்ஜ் லான்ஸ்பரி, ஆல்பர்ட் ஐன்ஸ்டின், ரோமன் ரோலந்து மாடம் சன்யாட் சென் முதலியோரும் அந்தக் கமிட்டியில் இருந்தனர்.

ஆப்பிரிக்கா ஆசியா கண்டங்களில் உள்ள தேசீய இயக்கங்களுடன் நெருங்கிய தொடர்பு கொள்ள வேண்டும். அதற்கு வழி என்ன ? ஏகாதிபத்திய எதிர்ப்பு லீக் போல ஏதாவதொரு ஸ்தாபனமே வழி. எனவே ஏகாதிபத்திய எதிர்ப்பு லீகில் உற்சாகத்துடன் கலந்து கொண்டார் ஜவஹர்.

பிரஸல்ஸ் மகாநாடு முடிந்த உடனே இந்தியாவுக்குப் புறப்பட எண்ணியிருந்தார் ஜவஹர். ஆனால் அதற்குள் பெரிய நேரு ஐரோப்பா சென்று ஜவஹரைச் சந்தித்தார்.

பெரிய நேரு வந்துவிடவே இன்னும் சிலநாள் சுற்றலாம் என எண்ணினார் ஜவஹர். 'ருஷ்யாவுக்குப் போகலாம்' என்றார்.

"சரி" என்று புறப்பட்டார் பெரிய நேரு. எல்லோரும் ருஷ்யா சென்றனர். ருஷ்யாவில் சில தினங்கள் சுற்றிய பிறகு இந்தியா திரும்பினர்.

ஜவஹரின் அரசியல் கண்ணோட்டத்தில் இப்போது மாறுதல் ஏற்பட்டது. புரட்சிகரமான மாறுதல்! சோஷலிசம் சர்வ தேசீயம் ஆகிய பின்னணியிலே சுதந்திர இந்தியாவை உருவாக்க விரைந்து வந்தார்.

## பதினேழாம் அத்தியாயம்

# பிளவு ஏற்படாததேன் ?

காந்திக்கும் ஜவஹருக்கும் இடையே கருத்து வேற்றுமை நிலவியது உண்டு. ஆனால் அந்தக் கருத்து வேற்றுமை எல்லை மீறவில்லை. அளவு கடந்து போகவில்லை. பிளவு ஏற்படுத்தவில்லை. காரணம் என்ன? இவ்விரு மகா புருஷர்களுக்கிடையே நிலவிய அன்பு; பரஸ்பர நல்ல எண்ணம். எல்லாவற்றிற்கும் மேலாக நின்ற தேசபக்தி.

'நம் இருவருக்கும் இடையே கருத்து வேற்றுமை நிலவி வருகிறது. ஒற்றுமை காண்பது இயலாது போல் தோன்றுகிறது. அந்த அளவுக்கு வேற்றுமை. எனவே நீங்கள் பகிரங்கமாக என்னை எதிர்த்துக் கிளர்ச்சி செய்யலாம். எனது கொள்கைகளைக் கண்டிக்கலாம். நான் தவறான வழியில் சென்றால் அதைச் சுட்டிக் காட்டி திருத்த வேண்டியது உங்கள் கடமையாகும். ஆனால். இவ்வளவு விசுவாசமும் தீரமும் கொண்ட சகாவை இழக்கிறோமே என்று எண்ணும்போது துக்கம் வருகிறது. அதை மறைக்க என்னால் முடியவில்லை. லட்சியத்திற்குப் பாடுபடுகிறபோது சகாவை இழக்க நேரிடுகிறது லட்சியம் முக்கியமானால் சகாவை இழக்க வேண்டியதுதான். என்ன செய்வது.'

இவ்வாறு ஒரு கடிதம் எழுதினார் காந்தி. யாருக்கு? ஜவஹருக்கு. ஜவஹர் என்ன செய்தார்? காந்தியை எதிர்த்தாரா? இல்லை, இல்லை, மௌனமாக இருந்து விட்டார். காரணம்?

காங்கிரசில் பிளவு ஏற்படுவதை ஜவஹர் விரும்பவில்லை. அது மட்டுமா? மகாத்மாவின் பேரில் அவர் கொண்ட

பேரன்பு அவ்வாறு மௌனமாக இருக்கத் தூண்டியது. வேற்றுமைகளை கரைத்தது.

இந்த கருத்து வேற்றுமை எப்போது தலை தூக்கியது? 1927-ம் ஆண்டிலே ஐரோப்பாவுக்கு ஜவஹர் போய் வந்த பின்னர். கருத்து வேற்றுமை ஏன்? எதை ஒட்டி எழுந்தது? காங்கிரசின் லட்சியம் பற்றி.

காங்கிரசின் லட்சியம் என்ன? சுய ஆட்சி என்றனர் சிலர். டொமினியன் அந்தஸ்து என்றனர் மற்றும் சிலர். சுயராஜ்யமே காங்கிரசின் லட்சியம் என்றார் காந்தி.

மிதவாதிகளின் ஆதிக்கம் உச்ச நிலையில் இருந்தபோது காங்கிரசின் லட்சியம் சுய ஆட்சி; அதாவது வெள்ளைக்கார கவர்னர் ஜெனரல் தலைமையில் இந்தியர்கள் இந்த நாட்டை ஆள்வது. இது கிடைத்தாலே போதும்; இந்த குறிக்கோளே மிதவாதிகளின் லட்சியம்.

சுயராஜ்யம் என்றால் என்ன? டொமினியன் அந்தஸ்து கிடைத்தலே, அதுவும் சுயராஜ்யம் தான் என்பது காந்தியின் கட்சி.

இதுவே ரொம்ப மிதமிஞ்சிய கோரிக்கை — என்பது மிதவாதிகள் எண்ணம்; இந்த எண்ணமே பிற்போக்கானது என்று வாதித்தனர் தீவிரவாதிகள்; தீவிரவாதிகளான இளைஞர்கள்.

''பூர்ண சுதந்திரமே எங்கள் லட்சியம்'' என்று கர்ஜித்தது இளஞ்சிங்கம் ஜவஹர்.

1927 ஆம் வருடம் இறுதியிலே காங்கிரஸ் மகாநாடு சென்னையில் நடைபெற்றது. இம்மகாநாட்டுக்கு வந்து சேர்ந்தார் ஜவஹர். எங்கிருந்து? வெளிநாட்டு பிரயாணத்திலிருந்து.

"பூரண சுயராஜ்யமே — அதாவது பிரிட்டிஷ் தொடர்பை அறுத்துக் கொள்வதே நம் லட்சியம்" என்ற தீர்மானத்தைக் கொண்டு வந்தார் ஜவஹர். தீர்மானம் நிறைவேற்றப்பட்டு விட்டது. தீர்மானம் நிறைவேற்றப்பட்டபோது மகாத்மா இல்லை. பிறகுதான் இந்த விஷயம் அவருக்குத் தெரிந்தது. மகாத்மா மனம் நொந்தார்.

"மிகவும் வேகமாகச் செல்கிறீர்கள். மிக மிக வேகம். இவ்வளவு வேகம் உதவாது" என்றார். சில வாரங்கள் சென்றன. அப்போதுதான் கருத்து வேற்றுமை பற்றி கடிதம் எழுதினார் காந்தி.

காந்திக்குத் தெரியும் ஜவஹர் தமக்கு எதிராக எதுவும் செய்யத் துணியமாட்டார் என்று. அதனால்தான் அம்மாதிரி கடிதம் எழுதினார்.

சுதந்திரப் போராட்டத்துக்கு காந்தியின் தலைமை அவசியம் என்று கருதினார் ஜவஹர். அதனால் காந்தியை விட்டு பிரிய மனம் வரவில்லை ஜவஹருக்கு. இவ்வாறாக இந்த மனிதகுல மாணிக்கங்கள் இரண்டும் தம் தம் நிலையை நன்கு அறிந்ததால் பிளவு என்பது ஏற்படவேயில்லை.

இந்த ஆண்டும் காங்கிரஸ் காரியதரிசி ஆனார் ஜவஹர் இளைஞர் உலகம் அவரை வரவேற்றது. இதய பீடத்தில் ஏற்றி வைத்துக் கொண்டாடியது. இளைஞர் மகாநாடுகள் பல நடைபெற்றன. அவற்றிலே கலந்து கொண்டார் ஜவஹர். சுதந்திரம், சோஷலிசம், சர்வ தேசீயம் முதலியன பற்றி முழங்கினார்.

★

பதினெட்டாம் அத்தியாயம்

# சைமனே ! திரும்பிப்போ !

இந்தியாவுக்கு மேலும் சிறிது சீர்திருத்தங்கள் வழங்குவதற்காக ஒரு கமிஷனை நியமித்தது பிரிட்டிஷ் அரசாங்கம். அதற்குப் பெயர் சைமன் கமிஷன். எழுவர் கொண்ட கமிஷன் அது. அந்த எழுவரில் ·ஒருவர் அட்லி. சைமன் கமிஷனிலே இந்தியர் எவருமே இல்லை, எனவே இந்தக் கமிஷனை பகிஷ்கரிப்பதென்று முடிவு செய்தது காங்கிரஸ். இந்த முடிவு சென்னையிலே நடந்த காங்கிரஸில் எடுக்கப்பட்டது.

எப்படி செயல்படுவது என்றும் அப்போது தீர்மானிக்கப் பட்டது. சைமன் கமிஷன் எங்கே வந்தாலும் சரி, அங்கே அப்போது கடையடைப்புச் செய்து கறுப்புக் கொடி காட்ட வேண்டும். இவ்வாறு வழி வகுத்துக் கொடுத்தது காங்கிரஸ்.

லாகூருக்குச் சென்றது சைமன் கமிஷன். 'பாஞ்சால சிங்கம்' லாலா லஜபதிராய் தலைமையில் மக்கள் திரண்டு எழுந்தார்கள். சைமன் கமிஷன் எங்கே சென்றாலும். கறுப்பு கொடியே தென்பட்டது ஆத்திரம் கொண்டது அரசாங்கம். போலீசாரை ஏவியது. போலீசின் குண்டாந் தடிக்குப் பலியானார் லஜபதி ராய்.

1928ம் ஆண்டு நவம்பர் மாதம் லக்ஷ்மணபுரிக்கு வந்தது சைமன் கமிஷன். இப்போது ஜவஹரின் முறை.

கறுப்புக் கொடி வரவேற்பு அளிப்பதற்காக சிறந்த முறையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. பல தினங்கள்

முன்னதாகவே ஒத்திகைகள்! பொதுக் கூட்டங்கள்! ஊர்வலங்கள்! சண்டமாருத பிரசாரம்!

கண்டது சர்க்கார்; கொண்டது நடுக்கம், பிறப்பித்தது 144 தடை! தடை! ஊர்வலங்களுக்குத் தடை.

நவம்பர் 29ம் தேதி சைமன் கமிஷன் லக்ஷ்மணபுரி வரும் நாள். அதற்கு முன்தினம் ஒரு வரவேற்பு ஒத்திகை நடத்த விரும்பினார் ஜவஹர்,

ஆனால் 144 தடை! என்ன செய்வது? ஊர்வலத்துக் கேற்பட்ட தடையாயிற்றே! தொண்டர்கள் எல்லோரையும் வரிசையாக நிறுத்தினார். பதினாறு பேர் வீதம் பிரித்தார். இந்த அணிவகுப்பு 200 கஜத் தூரத்தில் வந்துக் கொண்டிருக்க வேண்டியது என்று ஏற்பாடு செய்தார், முதல் அணி ஜவஹரின் தலைமையில் புறப்பட்டது. இரண்டாவது கோவிந்த் வல்லப பந்தின் தலைமையில் புறப்பட்டது. ஜன நடமாட்டமே அதிகம் இல்லாத தெருவழியே இந்தப் படை சென்று கொண்டு இருந்தது.

அப்போது திடீரென்று குதிரைகளின் குளம்பு சத்தம் கேட்டது. ஆம், குதிரை மீது ஏறிய போலீஸ் கண்ணிமை பொழுதில் வந்தது. சாத்வீகமாகச் சென்று கொண்டிருந்த தொண்டர்கள் மீது குதிரையை ஏவியது, போலீஸ், அடி! உதை! மண்டைகள் உடைந்தன; ரத்தம் பெருக்கெடுத்து ஓடியது.

தொண்டர்கள் நாலா பக்கமும் சிதறி ஓடினார்கள் வீடுகளுக்குள் புகுந்தனர் சிலர். கடைகளுக்குள் ஓடினர் சிலர். அகப்பட்டவரை எல்லாம் அடித்து நொறுக்கியது குதிரைப் போலீஸ்.

ஜவஹர் மீது பாய்ந்தான் ஒருவன். ஓடி ஒளிய நினைத்தார் ஜவஹர். ஒரு கணம் தான்; அடுத்த விநாடி சுய கௌரவம் வந்து குறுக்கே நின்றது. 'ஓடுவதா? ஓடுவதா ? சிச்சீ! உயிர் அவ்வளவு வெல்லமா? கோழை! கோழை!' என்று சாடியது அவர் உள்ளம். தைரியம் பிறந்தது 'உம்' என்றார் உறுதியாக நின்றார். விழுந்தது பலமான அடி. அந்த நேரத்திலே அந்தச் சிறு உடல் அப்படியே நடுங்கியது. ஆனால் இம்மிகூட நகரவில்லை

சிறிது நேரம் சென்றது. முன்னே போய் நின்று கொண்டது குதிரை போலீஸ். ஊர்வலம் முன்னே செல்லாத படி வழியை அடைத்துக்கொண்டது.

சிதறி ஓடிய தொண்டர்கள் இதற்குள் வந்து சேர்ந்துவிட்டார்கள், மண்டையிலே காயம்! துணி முழுவதும் ரத்தக்கறை!

போலீஸுக்கு எதிர்ப்புறமாக எல்லோரும் உட்கார்ந்து விட்டனர். பெருங் கூட்டம் கூடிவிட்டது. பெரிய பெரிய அதிகாரிகள் எல்லோரும் வந்து விட்டனர். இருட்டிவிட்டது. முடிவில் சமரசம் ஏற்பட்டது. குதிரைப் போலீஸ் முன் செல்ல பின் சென்றது தொண்டர் படை.

நடந்த நிகழ்ச்சிகளை எல்லாம் தொலைபேசி மூலம் பெரிய நேருவுக்குத் தெரிவித்தார் ஜவஹர். பெரிய நேருவுக்குத் தூக்கம் வரவில்லை. லக்ஷ்மணபுரிக்குப் புறப்பட்டார். இரவு நேரம். அலகாபாத்திலிருந்து லக்ஷ்மணபுரி 145 மைல். விடியற்காலம் 5 மணிக்கு ஜவஹர் தங்கியிருந்த இடத்துக்கு வந்து சேர்ந்தார். பிள்ளையைக் கண்ணால் கண்ட பிறகுதான் பெரிய நேருவுக்கு ஆறுதல் ஏற்பட்டது.

அன்றைய தினம்தான் சைமன் கமிஷன் வரும் நாள். கோழி கூவுவதற்கு முன்பே மக்கள் விழித்துக் கொண்டனர். பெருங் கூட்டமாக வந்து விட்டார்கள். கறுப்புக் கொடி ஊர்வலம் ஆயிரக்கணக்கான தொண்டர்களுடன் புறப்பட்டது.

அன்று, இன்னும் மூர்க்கத்தனமாக நடந்துக்கொண்டது போலீஸ்! ஜவஹருக்கு நல்ல அடி! பந்துக்கும் நல்ல அடி, முதுகே நிமிர முடியவில்லை.

நல்ல வேளை! தொண்டர் சிலர் ஜவஹரைத் தூக்கிக் கொண்டு போய் பத்திரமான இடத்தில் சேர்த்தனர், இன்றேல் பேராபத்து நேர்ந்திருக்கும்.

## பத்தொன்பதாம் அத்தியாயம்

# தந்தையா ? மகனா ?

1929ஆம் வருடம் பாரத தேசத்திலே எங்கு பார்த்தாலும் அரசியல் உணர்ச்சி மேலோங்கி நின்றது. எங்கும் துடிதுடிப்பு! எங்கும் கிளர்ச்சி! எங்கும் ஆரவாரம்! இளைஞர் மகாநாடுகள்! உழவர் மகாநாடுகள்! தொழிலாளர் மகாநாடுகள் - இப்படி எங்கும் மகாநாடுகள்.

இந்திய மக்கள் எல்லோரும் விரும்பி ஏற்றுக்கொள்ளக் கூடிய ஓர் அரசியல் சட்டத்தை வகுப்பதில் முனைந்தார் பெரிய நேரு. இதற்கென்று ஒரு கமிட்டியும் நியமிக்கப்பட்டது ஸர். தேஜ் பகதூர் சப்ரூ போன்றவர்களும் அக்கமிட்டியில் இருந்தனர். இந்தக் கமிட்டி ஓர் அறிக்கை தயார் செய்தது.

லக்ஷ்மணபுரியிலே சர்வ கட்சி மகாநாடு ஒன்றை கூட்டி மேற்படி அறிக்கையைச் சமர்ப்பித்தார் மோதிலால் நேரு.

டொமினியன் அந்தஸ்தே இந்தியாவின் லட்சியம் என்ற அடிப்படையில் இந்த மகாநாடு கூட்டப்பட்டது. காங்கிரஸ் காரியதரிசி என்ற முறையில் இம்மகாநாட்டில் கலந்து கொண்டார் ஜவஹர்.

ஜமீன்தார்கள்! பெரிய பெரிய நிலப் பிரபுகள்! இவர்களுக்கெல்லாம் பாதுகாப்பு அளித்தது மோதிலால் நேருவின் திட்டம்

ஆக, அரசியல் கண்ணோட்டத்தில் பிற்போக்கு! பொருளாதார சமூகக் கண்ணோட்டத்திலும் பிற்போக்கு.

இளம் ஜவஹரோ சோஷலிஸ்ட்! புரட்சிக்குத் துடிதுடித்துக் கொண்டிருப்பவர்! பிரிட்டனுடன் எந்தவிதமான தொடர்பும் கூடாது; அறுத்து எறிய வேண்டும் என்ற நோக்கம் உடையவர். பரிபூரண சுதந்திரம் என்று முழங்குபவர். இத்தகைய ஒருவர் பெரிய நேருவின் திட்டத்தை எப்படி ஏற்றுக் கொள்வார் ?

எதிர்ப்பு! எதிர்ப்பு! வெகு தீவிரமாக எதிர்த்தார் ஜவஹர். பாரதத்தின் இளைஞர் கூட்டம் ஜவஹருக்குப் பக்கபலமாக நின்றது. வங்கத்தின் வாலிப சிங்கங்கள் சுபாஷ் போஸ் தலைமையில் ஜவஹரை ஆதரித்து நின்றனர்.

காங்கிரஸ் முதியோர் பலரும் நேருவை ஆதரித்தனர். இப்படியாகக் காங்கிரசுக்குள்ளே இரண்டு கட்சி. தந்தை கட்சி ஒன்று, மகன் கட்சி மற்றொன்று. இந்த இரண்டு கட்சியினரும் தத்தம் கொள்கையை விடாப்பிடியாகப் பிடித்துக்கொண்டிருந்தனர்.

இந்த இரு முகாம்களின் எதிரொலி ஜவஹரின் வீட்டிலும் ஒலிக்கத் தொடங்கியது. பெரிய நேருவுக்கும் இளைய நேருவுக்கும் இடையே உறவு அவ்வளவு சுமூகமாக இல்லை. பேச்சு வார்த்தைகள் காரசாரமாகவே இருந்தன. தினம் தினம் சூடேறிக் கொண்டே வந்தது.

1928ஆம் வருடத்தில் காங்கிரஸ் கல்கத்தாவில் நடைபெற இருந்தது. காங்கிரஸ் மகாநாட்டின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார் பெரிய நேரு.

"எனது திட்டத்தை ஏற்றுக் கொள்ளாவிட்டால் நான் மகாநாட்டுக்குத் தலைமை வகிக்கப் போவதில்லை" என்று கூறிவிட்டார் பெரிய நேரு. இந்தச் சிக்கலை எப்படித் தீர்ப்பது? அப்பாவா? பிள்ளையா?

அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டம், கல்கத்தாவிலே நடைபெற்றது. பெரிய நேருவும் இளைய நேருவும் வியூகம் வகுத்து நின்றனர். டிசம்பர் மாதம் 27ம் தேதி, ஒரு தீர்மானம் கொண்டு வந்தார் மகாத்மா காந்தி. என்ன தீர்மானம்?

பிரிட்டிஷ் அரசாங்கம் மோதிலால் நேருவின் திட்டத்தை ஏற்றுக்கொண்டு 1930ஆம் ஆண்டு இறுதிக்குள் இந்தியாவுக்கு டொமினியன் அந்தஸ்து வழங்க வேண்டும். இல்லாவிட்டால் காங்கிரஸ் பெரியதொரு சட்டமறுப்புப் போர் தொடங்கும்.

இதுதான் காந்தியடிகள் கொண்டு வந்த தீர்மானம். இதற்கு ஒரு திருத்தம் கொண்டு வந்தார் ஜவஹர்.

"ஒரே வருடத்தில் - அதாவது 1929க்குள் பூரண சுதந்திரம் கொடுக்க வேண்டும். இல்லாவிட்டால் சட்ட மறுப்புப் போர்!"

திருத்தச் சவால் எப்படி?

மிகவும் ஆவேசமாகப் பேசினார் இளையவர். இளைஞர்கள் ஆரவாரம் செய்தார்கள்; குதூகலித்தார்கள்; கைதட்டினார்கள், உற்சாக மூட்டினார்கள்.

பார்த்தார் காந்தி. சபையில் பெரும் பாகம் ஜவஹருக்கு ஆதரவாக நிற்பதை அறிந்தார். எனவே சமரச வழி காண விரும்பினார். தமது தீர்மானத்தை வாபஸ் பெற்றார். மறுநாள் புதியதொரு தீர்மானம் கொண்டு வந்தார். சமரசத் தீர்மானம். 'பெரிய நேருவின் திட்டத்தை ஏற்றுக்கொண்டு, ஒரு வருஷத்துக்குள் டொமினியன் அந்தஸ்து அளிக்கா விட்டால் சட்டமறுப்பு போர்!'; என்பதே இந்த சமரச தீர்மானம்.

டிசம்பர் 28ந் தேதி அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்திலே இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்தார் காந்தி.

பிரதிநிதிகளின் பார்வை எங்கு சென்றது? ஜவஹர் மீது. ஜவஹர் எங்கே? அங்கே இல்லை. சுபாஷ் போஸும் அங்கே இல்லை. எங்கே? எங்கே?

காந்தி எழுந்தார். "ஜவஹர் இங்கே இல்லை; எனது தீர்மானம் அவருக்குப் பிடிக்கவில்லை, அவர் உத்தம புருஷர் ; அனாவசியமாக பிளவு உண்டு பண்ண அவர் விரும்பவில்லை. எனவே வரவில்லை" என்றார்.

'கோழை' என்றனர் ஜவஹரை சிலர். காந்தியின் தீர்மானம் வெற்றி பெற்றது, ஏகமனதாக நிறைவேறியது. மோதிலாலின் மனம் குளிர்ந்தது.

காந்தியிடமும், தன் தந்தையிடமும் ஜவஹர் கொண்ட அன்பு, விட்டுக் கொடுக்கத் தூண்டியது.

"நான் பிடித்த முயலுக்கு மூன்றே கால்" என்பர் சிலர். இத்தகைய பிடிவாதம் என்றுமே ஜவஹரை ஆட்கொண்டதில்லை. அவர் ஓர் சிறந்த ஜனநாயகவாதி பிறர் எண்ணங்களுக்கு மதிப்புக் கொடுப்பவர். விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை மிக்கவர்; தந்தையா? மகனா? பிரச்னையை தாமே தீர்த்து வைத்தார்.

ஜவஹரை தழுவி மகிழ்ந்தார் காந்தி.

"தந்தையினும் களி கூரத்
தழுவினான் தகவுடையோர்
சிந்தையிலும் சென்னியிலும்
வீற்றிருக்கும் கீர்த்தியான்

கம்பன்

## இருபதாவது அத்தியாயம்

# காலமும் குறிக்கோளும்

இந்தியாவின் லட்சியம் எது? பூரண சுதந்திரமா? டொமினியன் அந்தஸ்தா? இதுவே அந்நாளில் முக்கியமான தொரு கேள்வி

'பூரண சுதந்திரமே!' என்று முழங்கியது இளைஞர் முகாம். 'டொமினியன் அந்தஸ்து கொடுத்தாலே போதும்' என்றது முதியவர் முகாம்.

இது பற்றிய வாதங்கள்! எதிர் வாதங்கள்! பொதுக் கூட்டங்கள்! நாடு முழுவதும் சுற்றினார் ஜவஹர்.

"நமது லட்சியம் பூரண சுதந்திரமே" என்று கர்ஜித்தார்.

சட்டசபையிலே அலுப்புத் தட்டிவிட்டது. மோதிலால் நேருவுக்கு அதிலே உற்சாகமே இல்லை. சட்டசபையிலே என்ன செய்ய முடிகிறது? சர்க்கார் கொண்டு வருகிற திட்டங்களை முறியடிக்கலாம்; எதிர்த்து ஓட்டு அளிக்கலாம்.''

'இதை ஒரு முறை செய்யலாம்; இரு முறை செய்யலாம். அதன் பிறகு? சாரமற்ற காரியமாகவல்லவா போய்விடுகிறது?'

இப்படி கூறத் தொடங்கினார் பெரிய நேரு.

இதே சமயம் நாட்டிலே முற்போக்கு சக்திகள் மிடுக்காக வளர்ந்தன. அமைதியான செயல்களைக் கண்டு துடித்தன; பொறுமை இழந்தன.

தொழிலாளர்கள் ஸ்தாபன ரீதியாக திரண்டு எழுந்தார்கள். பம்பாயில் ஆலைத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தனர். ஒரு இலட்சம் பேர் என்றால் சாமான்யமா? அதுவும் ஆறு மாத காலம் நிறுத்தத்தை நடத்தினர் என்றால் அவர்தம் நெஞ்சுறுதியை ஏற்காமல் இருக்க முடியுமா? வங்கத்திலே இதே வேலை நிறுத்தம் எதிரொலித்தது. இங்கும் இலட்சக் கணக்கான சணல் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தனர். தென் இந்திய ரயில்வே தொழிலாளரும் வேலை நிறுததம் செய்தனர். இப்படியாக உறுமி எழுந்தது, தொழிலாளர் சக்தி.

தொழிலாளர் எழுச்சி, பிரிட்டிஷ் அரசாங்கத்தைக் கலக்கியது; நடுக்குற செய்தது. 'இந்த இயக்கத்தை உடனே நசுக்க வேண்டும்'' என்று கருதியது. ஆபத்தை வளர விடுவது அசட்டுத் தனம் என கருதியது. தொழிலாளர் இயக்கத்தை பழி வாங்கச் சதி செய்தது. தொழிலாளர் தலைவர்களை சிறையில் தள்ளியது. வழக்கும் ஜோடித்தது.

இதற்குத் தான் ‘மீரட் சதி வழக்கு’ என்று பெயர். தொழிலாளர் இயக்க வரலாற்றிலே இது மிகவும் முக்கியமானது.

இந்த சமயத்திலே அகில இந்திய தொழிற் சங்கக் காங்கிரஸ் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார் ஜவஹர்.

மீரட் சதி வழக்கிலே கைது செய்யப்பட்டவர்கள் சார்பில் எதிர் வழக்காட முடிவு செய்தார். இதற்காக ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டது. இந்தக் கமிட்டியின் தலைவர் மோதிலால் நேரு. வழக்கு சுமார் மூன்று ஆண்டுகள் நடைபெற்றது

பெரிய வக்கீல் என்று பெயர் பெற்ற பலரை வேண்டினார் ஜவஹர் அரசாங்கத்தை எதிர்த்து வழக்கை நடத்த வருமாறு அழைத்தார்,

ஆனால் பெரிய வக்கீல்களில் பலர் என்ன செய்தனர்? பெருந் தொகை கேட்டனர். பணம் பிடுங்கிகளாக விளங்கினர். அவர்கள் வேண்டியது பீஸ்! பீஸ்! பீஸ்! இதுவே அவர்களது ஜபம். எவன் எக்கேடு கெட்டால் என்ன? பீஸ் இல்லாவிட்டால் வக்கீல்கள் வரமாட்டார்கள். எதிர் வழக்கு வக்கீலின்றி நடத்த முடியுமா?

எனவே பணம் திரட்டும் முயற்சியில் ஈடுபட்டார் ஜவஹர். வேண்டுகோள் விடுத்தார். உலக தொழிற் சங்க ஸ்தாபனங்கள் பல உதவின. ஓரளவு நிதி சேர்ந்தது. வழக்கும் நடந்தது. முடிவு என்ன? எல்லோரையும் சிறைக்குள்ளே தள்ளிவிட்டது அரசாங்கம்.

பிரிட்டிஷ் ஏகாதிபத்தின் ஆணி வேர் ஆட்டம் கொண்டிருந்த இந்த சமயத்திலே மற்றுமொரு நிகழ்ச்சி, அவர்களை திணறச் செய்தது.

## இருபத்தொன்றாம் அத்தியாயம்

# கொந்தளிப்பு

டில்லியிலே நடந்தது இது. தர்பார் நடந்து கொண்டு இருந்தது. திடீரென இரண்டு வெடிகுண்டுகள் வந்து விழுந்தன. எங்கே ? சபை நடுவே விழுந்தன ; வெடித்தன ; கட்டிடத்தையே அதிரச் செய்தன.

குண்டுகள் எங்கிருந்து விழுந்தன ? பார்வையாளர் பகுதியில் இருந்து ! வீசியவர் யார் ? இளைஞர் இருவர் ; வீர பாரதத்தின் இளம் செம்மல்கள் ; தேசிய திலகங்கள்; உயிரை திரணமாக மதித்த பேராளர்கள்.

ஒருவர் பகத்சிங், மற்றவர் எஸ். வி. கெ. டட்

அதே சமயத்திலே ஆட்சியாருக்கு மற்றொரு பேரிடி ! சைமன் கமிஷன் பகிஷ்காரத்தின்போது லாலா லஜபதிராயை குண்டாந் தடியால் தாக்கிய வெள்ளையன் பழி வாங்கப் பட்டான்.

நாட்டில் எங்கும் கொந்தளிப்பு ; உணர்ச்சி பெருக்கு, தேசீயத்தின் பெருவெள்ளம் சீற்றம் கொண்டு அழித்து விடுவேன் என்று பயமுறுத்தியது.

இந்த சமயத்திலே காங்கிரஸ் மகாநாட்டை எங்கே நடத்துவது ? இலாகூரில் என்று முடிவு செய்யப்பட்டது.

எனவே 1929ஆம் ஆண்டு காங்கிரஸ் மகாநாடு லாகூரிலே நடந்தது. மகாநாட்டு தலைவர் யார் ? மாகாண காங்கிரஸ் கமிட்டிகள் மொத்தம் 18. அவற்றுள் பத்து கமிட்டிகள் மகாத்மாவின் பெயரையே தேர்ந்தெடுத்தன.

ஐந்து கமிட்டிகள் வல்லபாய் பட்டேலை தேர்ந்தெடுத்தார்கள். மூன்று கமிட்டிகள் ஜவஹரை தேர்ந்தெடுத்தன.

மகாத்மா என்ன செய்தார், தலைமை தாங்க மறுத்தார். பலரும் வற்புறுத்த, வற்புறுத்த, அவர் தம் பிடிவாதமான மறுப்பு அதிகரித்தது.

போட்டியின்று விலகுமாறு பட்டேலை கூறினார் காந்தியண்ணல். பட்டேலும் இசைந்தார்.

" காங்கிரஸ் தலைவர் ஜவஹரே !" என்றார் மகாத்மா.

ஏன் என்ற காரணமும் கூறினார்.

" வருங்காலப் போராட்டத்தை நடத்த வேண்டியவர் இந்நாட்டு இளைஞரே. ஆதலின் இளைஞர் ஒருவர் காங்கிரஸ் தலைவராயிருத்தலே மிகப் பொருத்தம். தலைமை பீடத்தில் நான் இருப்பதும் ஜவஹர் இருப்பதும் ஒன்றே. இதுவரை முதியோர் தாங்கி வந்த பொறுப்பை இனி இளையவர் ஏற்பது முறையே. ஜவஹரின் தீரத்துக்கு இணை யேது ? தேசாபிமானத்தில் ஜவஹரை விட சிறந்தவர் எவர்? அவர் சிறிது அவசரக்காரர். அவ்வளவுதான். ஆனால் அவசரப்பட்டுக் காரியத்தை கெடுப்பவர் அல்லர். எனவே அவர் தலைமையில் தேசம் பத்திரமாகவே இருக்கும்.' என்று விளக்கினார்.

ஜவஹர் ராஷ்டிரபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அப்போது அவருக்கு வயது நாற்பது.

★

## இருபத்திரண்டாம் அத்தியாயம்

# உப்போ, உப்பு !

காந்தியடிகளின் சாத்வீக போரிலே அன்னிய துணி பகிஷ்காரம் ஒரு சிறந்த ஆயுதமாகக் கையாளப்பட்டு வந்தது, அதன்படி சர்க்கா ஒவ்வொரு வீட்டிலும் இன்னிசை பாடியது. முடங்கிக் கிடந்த கைத்தறிகள் தாளமிட்டு வேலை செய்தன ; அன்னிய துணி வாங்கி, அரசாங்கத்தை ஆதரிக்காதீர்கள் என்ற அண்ணலின் அறைக்கூவலுக்கு செவி சாய்த்தனர் பெருவாரியான மக்கள். ஆங்கிலேயர் உற்பத்தி செய்து, மாபெரும் சந்தையாக ஆக்கிய பாரதம் எழுந்தது. அவர்கள் துணிகளை கேட்பாரே இல்லை. சந்தை சுருங்கியது. ஆங்கில பள்ளிகள் கல்விக் கூடங்களை நிராகரியுங்கள், என்று அவர் சொன்னவுடனே கல்லூரிகளை நீங்கி, போராட்டத்தில் குதித்த இளைஞர் எவ்வளவு பேர் ! மாற்றான் அரசாங்கத்தில் அடிமை சேவகம் உங்களுக்குத் தேவையா ? என்ற கேள்விக்கு விடை அளிப்பது போல் அரசு பணிகளை உதறிய பெரும் பான்மை அரசு ஊழியர்களை மறக்க இயலுமா ?

சட்ட மறுப்பு என்பது மற்றொர் வலிய ஆயுதம். இதன் முதல் வடிவம்தான் தண்டி யாத்திரை. "உப்பு எங்கள் கடல் நீரிலிருந்து உற்பத்தி செய்யும்போது, பாமர ஏழை மக்களின் அத்தியாவசிய பொருளின் மீது வரி விதிப்பது அநியாயம். எனவே நாங்களே உப்பு காய்ச்சி எடுப்போம்" என்று கால் நடையாகச் சென்றார் அண்ணல்.

கடற்கரையில் கூட்டம் கூடியது. காலை ஆறு மணிக்கு உப்பு காய்ச்சுவதாக அறிவிக்கப்பட்டது. தொண்டர்கள் வட்டமாக அமர்ந்து கெட்டியாகக் கைகோர்த்துக்

கொண்டனர். உப்பு எடுக்கும் முயற்சியைக் கண்டு அரசாங்கம் வாளா இருக்குமா ? தன் அதிகாரத்தைப் பிரயோகித்தது. வட்டம் கலையவே இல்லை. அடிகள் சரமாரியாக விழுந்தன. அவை உடலைத் தாக்கினவே அன்றி உள்ளத்தின் உறுதியை மேன்மேலும் பலப்படுத்தின. இதை ஒட்டி என்ன நடந்தது ?

மே மாதம் ஐந்தாம் தேதி. இரவு மணி ஒன்று; தண்டியிலே ஒரு சிறு குடிசை. அதிலே அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தார் காந்தி. வந்து விட்டது போலீஸ் வண்டி. காந்தியைக் கைது செய்துக் கொண்டு, எரவாடா சிறைக்கு அழைத்துச் சென்றனர்.

பொழுது விடிந்தது. காந்தி கைது செய்யப்பட்ட சேதி காட்டுத் தீயாக பரவியது. பொங்கி எழுந்தது பாரதம் ! சர்க்காரின் செயலைக் கடுமையாகக் கண்டித்தது.

பம்பாய் வியாபாரிகள் ஹர்த்தால் செய்தார்கள் ; கடை அடைத்தார்கள். ஒரு வாரம் கடை திறக்கவே இல்லை. ஆலைத் தொழிலாளர்கள் ஐம்பதினாயிரம் பேர் வேலை செய்ய மறுத்தனர் ; வேலை நிறுத்தம் செய்தனர்.

அன்னிய துணியை மலைபோல் குவித்துத் தீக்கிரை இட்டனர் பலர். அன்னிய துணிக்கடைகளின் முன்னே காங்கிரஸ் தொண்டர்கள் சாத்வீக மறியல் செய்தார்கள்.

கடற்கரைப் பட்டினங்கள் பல ‘ உப்போ உப்பு ’ என உப்பு உற்பத்தி யாத்திரை தலங்களாயின. தேசத் தொண்டர் பலர் அணி வகுத்துச் சென்றனர்; உப்புக் காய்ச்சினர்.

கடற்கரைச் செல்ல இயலாதவர்களோ, கடைக்குச் சென்றனர் ; காசு கொடுத்து உப்பு வாங்கினர்; ஒரு

சட்டியில் இட்டு, தண்ணீரை ஊற்றினர். நடுத்தெருவிலே அடுப்பை வைத்துத் தீ மூட்டினர். உப்பை காய்ச்சினர். ஆனால் எங்கும் அகிம்சை; கட்டுபாடு இரண்டும் அனுஷ்டிக்கப்பட்டன. எவ்வளவு ஆத்திர மூட்டிய போதிலும், கட்டுப்பாட்டை மீறவேயில்லை.

எல்லைப்புற மாகாணம் பட்டாணியர் நிறைந்தது. வீரத்தின் இருப்பிடம்; தீரத்தின் உறைவிடம்; அஞ்சாமை வாழுமிடம்; போர் என்றால் உடல் பூரிக்கும் இடம்; அஹிம்சையே அறியாத இடம்.

அந்தப் பகுதி சுடர் விட்டு எரிய தொடங்கியது. குதாய் கித்மத்கார் என்ற செஞ்சட்டைப் படை தயாராயிற்று. அணி வகுத்து நின்றது. அகிம்சை போருக்குப் புறப்பட்டு விட்டது. யார் தலைமையில்? எல்லைப்புற காந்தி தலைமையில்.

ஏப்ரல் மாதம் 23ந் தேதி பிஷாவார் நகரில் மிக அமைதியாகச் சென்றது காங்கிரஸ் தொண்டர் படை. அது ஒரு காங்கிரஸ் தொண்டர் ஊர்வலம்.

அதன் மீது இராணுவத்தை ஏவியது பிரிட்டிஷ் அரசாங்கம். 'சுடு' என்று கட்டளையிட்டது. இராணுவ வீரர்கள் என்ன செய்தார்கள்? சுடவில்லை! கட்டளையைச் சட்டை செய்யவில்லை.

மீண்டும் 'சுடு' என்ற உத்தரவு மிகவும் கண்டிப்பாக பிறந்தது.

துப்பாக்கிகள் உயர்ந்து நின்றனவா? குண்டுகள் பாயாதனவா? இல்லை, இல்லை! இராணுவ வீரர்கள் சுட மறுத்து விட்டார்கள்.

அந்த தீர இராணுவ வீரர்கள் கார்வாலி இரஜிமெண்டை சேர்ந்தவர்கள். இவர்கள் இந்துக்கள்.

பிரிட்டிஷாரின் இராஜ தந்திரத்தை நன்கு உணர்ந்தவர்கள்.

இந்து இராணுவ வீரர்களை ஏவி முஸ்லீம்களைச் சுடுவார்கள். முஸ்லீம் இராணுவ வீரர்களை ஏவி இந்துக்களை சுடச் செய்து, இரு மதத்தினரிடையே வெறுப்பு, பகை, காழ்ப்பு இவைகளை உண்டு பண்ணுவதே அதன் உள் நோக்கம்.

நம் நாட்டு சுதந்திரத்திற்காக தங்கள் உயிர்களை அர்ப்பணித்து, தியாகம் செய்த கார்வாலி ரெஜிமெண்ட் இராணுவ வீரர்கள் வீரம் என்றும் வாழ்க ! தியாகம் என்றும் நிலைத்திருக்க !

## இருபத்திமூன்றாம் அத்தியாயம்

# இர்வின் பிரபுவின் திருவிளையாடல்கள்

அவசர சட்டங்களை அள்ளி வீசிக் கொண்டே இருந்தார் லார்டு இர்வின். நான்கு மாதங்களுக்குள் பத்து அவசர சட்டங்கள்.

காங்கிரஸ்காரர்கள் என்ன செய்தார்கள்? அவசர சட்டங்களை வர வர மீறத் தொடங்கினார்கள். போரிலே குதித்தார்கள். பிரிட்டிஷ் அரசாங்கம் மூர்க்கமாக தாக்கியது. குண்டாந்தடியடிகள் கணக்கில்லாமல் விழுந்தன. குதிரைப் போலீசை ஏவி மக்களை மிதிக்கச் செய்தது. துப்பாக்கியால் அனைவரையும் சுட்டது, சுட்டது, சுட்டுக் கொண்டே

இருந்தது. பல தொண்டர்களையும் தலைவர்களையும் சிறைக்குள் தள்ளியது. ஆந்த ஆண்டு இறுதிக்குள் அகில இந்தியாவிலுமாக ஒரு லட்சம் பேரை சிறைக்குள் தள்ளிவிட்டது.

நைனியிலே சிறைக் கம்பிகளுக்கு பின்னே இருந்த ஜவஹர் இந்த செய்திகளையெல்லாம் அறிந்தார்; மகிழ்ந்தார்; மனம் பூரித்தார், பெருமை கொண்டார்.

சிறையிலே ஜவஹர் இருந்த இடத்திற்கு என்ன பெயர் தெரியுமா? "குத்தா கர்." குத்தா என்றால் ஹிந்தியில் நாய், கர் என்றால் வீடு.

" சிறையிலே எனக்கு என்ன கஷ்டம்? ஒன்றுமில்லையே. நான் சௌகரியமாக இருக்கிறேன். ஆனால் எனது நாட்டு மக்களோ துப்பாக்கிக்கு இரையாகிறார்கள்; குண்டாந் தடியடி படுகிறார்கள். இப்படி நான் மட்டும் சுகமாக வாழ்வது முறையாகுமா?" என வருந்தினார் அவர்.

இரவு நேரத்திலே படுத்த வண்ணம் வானத்தைப் பார்த்துக் கொண்டே சிந்திப்பார். உறுதி கொள்வார்.

"எனது உடலை வருத்துவேன். ஏதாவது செய்வேன்."

சிறையிலே என்ன செய்ய முடியும்? சிறை அதிகாரிகளைக் கேட்டு ஒரு தறி வாங்கினார். தினமும் நெய்தார்.

தினந்தோறும் விடியற்காலை எழுந்திருப்பார். இரண்டு மணி நேரம் நூல் நூற்பார். இரண்டு மணி நேரம் தறி வேலைச் செய்வார். தமது அறையைச் சுத்தம் செய்வார். தமது வேட்டியை தாமே துவைப்பார். பிறகு ஏதாவது பத்திரிகை படிப்பார்.

இது தான் சிறை வாழ்க்கை.

## இருபத்திமூன்றாம் அத்தியாயம்

# வீரத்தாய்; தீரர் மனைவி

பிரிட்டிஷ் அரசாங்கம் ஜவஹரை கைது செய்ததும், என்ன நேர்ந்தது? தேசீய இயக்கம் வீறு கொண்டு எழுந்தது. வீட்டுக்குள்ளே இருந்த பெண்கள் வெளியே வந்து விட்டார்கள். அன்னிய துணிக்கடைகள் முன்நின்று பகிஷ்கரிக்கத் தொடங்கினார்கள். கள்ளுக் கடைகள் முன்பு சென்று மறியல் செய்தார்கள்.

ஜவஹரின் தாய் ஸ்வரூபா ராணி நேரு; வயது முதிர்ந்தவர்; என்ன செய்தார்? ஊர்வலங்களை நடத்தத் தொடங்கினார். அன்னிய துணி பகிஷ்காரத்திலே மும்முரமாக ஈடுபட்டார். உடல்நிலைப் பற்றி கவலை கொண்டாரா? இல்லை; சிறிதும் கவலைக் கொள்ளவில்லை!

வெய்யிலின் கடுமையைக் கண்டு அஞ்சியதோ அவர் உள்ளம்? குளிரில் எப்படிச் செல்வதென்று தயங்கினாரா? இல்லை; இல்லை; இல்லவே இல்லை.

ஒரு நாள் இரவு குளிர் நடுக்கியது. பெண் தொண்டர் பலருடன் மறியல் செய்து கொண்டிருந்தார் கமலா. அப்போது அவர் உடல் நிலையும் சரியாகயில்லை. காய்ச்சல்; சுரம் உள்ளத்தை அடக்கியதா? இல்லை; அதையும் பாராட்டாது தீரர் நேருவின் மனைவி மறியல் செய்தார்.

இதைக் கண்டார் நேருவின் குடும்ப நண்பர். அருகில் இருந்த கடைக்குச் சென்றார். கம்பளி ஒன்று வாங்கி வந்தார். கமலா நேருவிடம் கொடுத்தார்.

'கமலாஜி, தயவு செய்து இதை உபயோகியுங்கள்' என்று கெஞ்சினார்.

கமலா நேருவின் முதுகில் போர்த்தார். அந்த கம்பளியை நீக்கிக் கொண்டார்.

சிறிது நேரம் சென்றது. நண்பர் அந்தப் பக்கம் வந்தார்! கமலா கம்பளியை உபயோகிக்கவில்லையே என்று சுற்று முற்றும் பார்த்தார்.

பெண் தொண்டர்களிலே வயது சென்ற ஒருவருக்கு கமலா அந்தக் கம்பளியை போர்த்திருக்கக் கண்டார்.

ஜவஹரின் தாய் ஸ்வரூபராணி யாத்திரை ஊர்வலம் நடத்திச் சென்றார்கள். எதிர்பட்டது போலீஸ்; ஊர்வலம் மேலே செல்லாமல் தடுத்தது. குதிரை மீது ஏறிய போலீசார் அந்த தொண்டர்களை துரத்தினார்கள். குண்டாந்தடியால் அடித்தார்கள். குண்டாந்தடி அடி அந்த மூதாட்டியை பலமாக தாக்கியது. அங்கேயே மூர்ச்சையுற்று விழுந்தார்.

போலீஸ் நேர்ந்துவிட்டதும் ஜனங்கள் நாலா பக்கமும் சிதறி ஓடிவிட்டனர். ஆனால் அந்த மூதாட்டி ஜவஹரின் தாய் மட்டும் நடுத்தெருவிலே மூர்ச்சையாகக் கிடந்தார். நீண்ட நேரம் சென்றது. நண்பர் சிலர் விவரம் அறிந்து வந்தனர். மூர்ச்சையுற்ற அன்னையைத் தூக்கிச்சென்றனர்.

நைனி சிறையிலே இருந்தார் ஜவஹர். கமலா நேருவின் வீரச்செயலைக் கேள்வியுற்று மகிழ்ச்சியால் துள்ளினார்; பெருமையால் பூரித்தார்.

அதே சமயம் தன்னை ஈன்ற தாய்க்கு ஏற்பட்ட குண்டாந்தடி தாக்குதலையும் விளைவையும் அறிந்தார்; கடுங் கோபத்தால் முகம் சிவத்தது. குண்டாந்தடியால் தாக்கிய போலீஸாரை ஒழிக்க வேண்டும்; அதுவும் உடனே செய்ய வேண்டும் என்று துடித்தார். அவன்

முகத்திலே குத்துவதாக எண்ணிக்கொண்டு கைகளை மடக்கினார்; குத்து, குத்து என்று குத்தினார். எங்கே? சிறைக்கதவிலே.

அப்போது தான் தாம் சிறையில் இருப்பது அவருக்கு நினைவு வந்தது.

"இப்போது நாம் அலகாபாத்தில் இல்லையே!" என்று ஏங்கினார், வருந்தினார். மிகமிக வருந்தினார்.

அடுத்த நொடி! காந்தியின் உருவம் அவரது கண்முன் தோன்றியது. அவரது உபதேச மொழிகளை நினைத்தார். அகிம்சா மூர்த்தியின் நினைப்பு அலைபாய்ந்த மனத்தை அமைதியுறச்செய்தது.

## இருபத்திநான்காம் அத்தியாயம்

# சமாதானமா, இராசதந்திரமா?

ஜூன் மாதம் முப்பதாம் தேதி மோதிலால் நேரு கைது செய்யப்பட்டார், நைனி சிறைக்குக் கொண்டு வரப்பட்டார். பெரிய நேருவும் இளைய நேருவும் ஒருவரையொருவர் கண்டு மகிழ்ந்தனர். எட்டு நாட்களுக்குப் பிறகு, அதாவது ஜூலை மாதம் ஒன்பதாந் தேதி டில்லி சட்டசபை கூடியது. சட்டசபைத் தொடக்கத்திலே லார்டு இர்வின் பேசினார். அவரது பேச்சிலே சமரச தொனி காணப்பட்டது. அதை ஒரு குறிப்பாகக் கொண்டு லார்டு இர்வினைக் கண்டனர் இருவர். ஒருவர் ஸர் தேஜ் பகதூர் சப்ரு, மற்றொருவர் எம். ஆர். ஜயகர்.

இந்த இருவரும் எதற்காக இர்வினைக் கண்டனர்? காங்கிரசுடன் சமரசம் செய்து வைப்பதற்காக.

இம்முயற்சியைப் பெரிதும் வரவேற்றார் இர்வின். லண்டனில் நடைபெற இருந்தது வட்டமேஜை மகாநாடு. அதிலே காங்கிரஸ் கலந்துகொள்ள வேண்டும் என்பது இர்வினின் விருப்பம்.

இந்த விருப்பத்தின் அடிப்படையில் எழுந்தது சமாதான எண்ணம். எனவே சமாதான தூதர் இருவரும் எரவாடா சிறைக்கு விரைந்து சென்றனர், காந்தியை கண்டு பேச. சிறையிலே காந்தியைக் கண்டனர், பேசினர்; லார்டு இர்வினின் விருப்பத்தைத் தெரிவித்தனர்.

காந்தி என்ன சொன்னார்? "நான் என்ன சமரசம் வேண்டாம் என்றா சொன்னேன்? இல்லையே! சமரசமாக நடந்துகொள்ளவே விரும்பினேன். அதற்கு இணங்கவில்லை; சண்டை ஏற்பட்டது. எனது 11 பாயிண்டுகளுக்கு வைசிராய் இணங்கவேண்டும். டொமினியன் அந்தஸ்து வழங்க வேண்டும். அரசியல் கைதிகளை விடுவிக்க வேண்டும். அப்போதுதான் நான் சத்தியாகிரகத்தை நிறுத்துவேன். லண்டன் வட்டமேஜையிலும் கலந்து கொள்ளக்கூடும் என்பது என் கருத்து. ஆனால் காங்கிரஸ் தலைவர் ஜவஹர். அவர் என்ன சொல்கிறாரோ அதுவே முடிவாகும்.'

இதைக் கேட்டனர் சமாதான பிரியர்.

" அப்படியானால் சரி; 'நேருவையும் போய் பார்க்கிறோம் உங்கள் கருத்தை எழுதிக் கொடுங்கள் என்றனர்.'

காந்தி நேருவுக்கு ஒரு கடிதம் எழுதிக் கொடுத்தார். கடிதத்தைப் பெற்றுக் கொண்டு புறப்பட்டார்கள் சமாதான தூதர்கள்.

ஜூலை மாதம் 27ந் தேதி சமாதான தூதர் இருவரும் நைனி சிறைக்குச் சென்றனர். பெரிய நேருவையும், இளைய நேருவையும் கண்டனர்; காந்தியின் கடிதத்தைக் கொடுத்தனர். பேசினர்; இரண்டு நாட்கள் பேசினர்.

காந்தியைக் கண்டு பேசாமலோ காரிய கமிட்டியைக் கலந்து யோசிக்காமலோ எதுவும் சொல்ல முடியாது என்று தீர்மானமாகக் கூறிவிட்டனர் இரண்டு நேருக்களும்.

"சரி; அதற்கு வேண்டிய ஏற்பாடு செய்கிறோம்." என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டார்கள் சமரச தூதர்கள்.

"காந்தியை வேண்டுமானால் பார்க்கட்டும், காரியக் கமிட்டி அங்கத்தினரையும் பார்ப்பது இயலாது" என்றார் இர்வின்.

"காந்தியைப் பார்க்க அனுமதி அளியுங்கள்" என்று வேண்டினர் சமரசத் தூதர்கள்

அனுமதி அளித்தார் இர்வின்.

ஆகஸ்டு மாதம் எட்டாந் தேதி வைசிராயின் அனுமதியைப் பெற்றுக் கொண்டு வந்தார்கள் இருவரும். நேருக்களைச் சிறையில் கண்டனர்.

இரண்டு நாட்களுக்குப் பின் இரு நேருக்களும், சப்ரு ஜெயகர் ஆகியோரும் எரவாடாவுக்கு புறப்பட்டனர். அலகாபாத்திலிருந்து பிரத்யேக இரயிலில் சென்றார்கள். வெகு வேகமாகச் சென்றது இரயில்.

இந்தச் செய்தி எப்படியோ மக்களுக்கு எட்டிவிட்டது. வழி எங்கும் மக்கள் கூடி நின்றார்கள். வாழ்த்தி அனுப்பினார்கள்.

மறுநாள் இரவு கிர்கி ஸ்டேஷனில் நின்றது ரயில். பெரிய நேருவும் ஜவஹரும் கிர்க்கியிலிருந்து எரவாடா சிறைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

உடனே காந்தியைப் பார்த்துப் பேச எண்ணினார் நேரு. ஆனால் அவர் எண்ணிய விதம் நடக்கவில்லை. வேறு ஓர் அறையிலே இருவரையும் இருக்கச் செய்தனர். அன்றிரவு முழுவதும் அந்த அறையிலேயே இருந்தனர். அடுத்த நாள் 12ஆம் தேதி ஆகஸ்டும் அந்த அறையிலேயே தான் இருந்தனர். ஆனால் அதே சிறையில் இருந்த காந்தியைப் பார்க்க முடியவில்லை.

மோதிலால் நேருவுக்கு கோபம் வந்துவிட்டது.

"இங்கே வந்து இரண்டு நாட்களாகிவிட்டன. இன்னமும் காந்தியைக் காண முடியவில்லையே, ஏன்? இதில் ஏதோ மர்மம் இருக்கவேண்டும்" என ஊகித்தார்.

ஜெயில் அதிகாரியிடம் சில கேள்விகள் கேட்டார்; உண்மை வெளிப்பட்டது.

சப்ரூ, ஜெயகர் ஆகிய இருவரும் இல்லாமல் இவர்கள் காந்தியைப் பார்க்கக் கூடாது" என்று அரசாங்கம் உத்தரவிட்டிருந்ததை அறிந்தார்.

பெரிய நேரு உறுமினார் "அவர்கள் வரட்டும்." என்று கோபத்துடன் காத்திருந்தார்.

சப்ரூவும், ஜெயகரும் அன்றே வந்தனர். காந்தியின் அறையில் தங்கினர்.

" அவர்கள் எங்கே?", என்று கேட்டார்கள்.

" இதோ அழைத்து வருகிறோம் என்று கூறி ஓடினார் சிறை அதிகாரி; நேருவின் அறைக்குச் சென்றார்."

"காந்தியைப் பார்க்க போகலாம், வாருங்கள்" அழைத்தார்.

" காந்தியுடன் வேறு யார் இருக்கிறார் ?" இது மோதிலால் நேருவின் கேள்வி.

" சப்ருஜி இருக்கிறார். ஜெயகர்ஜி இருக்கிறார் " இது தான் கிடைத்த பதில்.

" அப்படியா ? நாங்கள் வரமாட்டோம்."

" கோபித்துக் கொள்ளக்கூடாது. என்ன வேண்டும் என்று சொல்லுங்கள். செய்கிறோம் " என்றார் ஜெயிலர்.

" முதலில் அந்த இருவரையும் வெளியே இருக்கச் சொல்லுங்கள். காந்தியுடன் நாங்கள் தனியே பேசவேண்டும் !" என்றார் மோதிலால்.

சிறை அதிகாரி ஓடினார் சமாதானத் தூதர்களிடம்; விஷயத்தை தெரிவித்தார். " சரி அழைத்து வாருங்கள் !" என்று கூறினார்கள் அவர்கள். வெளி வந்து உட்கார்ந்து விட்டார்கள் சப்ருவும் ஜெயகரும்.

பெரிய நேருவும் இளைய நேருவும் வந்தார்கள். காந்தியுடன் கலந்தலோசித்தனர் பிறகு சமாதானத் தூதர் இருவரையும் உள்ளே அழைத்தார்கள்.

விவாதம் நடந்தது. இரண்டு நாட்கள் தொடர்ந்து நடந்தது. முடிவு ? ஒன்றுமில்லை! காங்கிரஸ் கோரிக்கைக்கு இர்வின் இணங்கவில்லை. பேச்சு வார்த்தை முறிந்தது.

பெரிய நேருவும், இளைய நேருவும் திரும்பினர் நைனி சிறைக்கு மீண்டும். மோதிலால் நேருவின் உடல் நிலை கெட்டது. எனவே செப்டம்பர் மாதம் எட்டாம் தேதி அவரை விடுவித்தது அரசாங்கம்.

அக்டோபர் மாதம் 11ம் தேதி இளைய நேருவும் விடுதலை பெற்றார்.

## இருபத்தி ஐந்தாம் அத்தியாயம்

# வரி கொடா இயக்கம்

சிறையினின்று வெளிவந்த ஜவஹர் கண்டதென்ன? நாட்டிலே எங்கும் சோர்வு நிலவக் கண்டார்; சத்தியாகிரகத்தின் வேகம் மிகவும் குறைந்ததைக் கண்டார்.

அன்று கூட்டங் கூட்டமாக உற்சாகத்துடன் சென்ற மக்கள் எங்கே? இப்போது ஏன் சோர்வு கவ்வியது? ஹர்த்தால், ஊர்வலங்கள், பொதுக் கூட்டங்கள் இவைகளில் மக்களுக்கு அலுப்பு ஏற்பட்டதேன்? இயக்கத்தை இனி தொடர்ந்து நடத்த முடியுமா? எப்படி? எப்படி?

அதற்கு வழி ஒன்றே. போர்க்களத்தை மாற்றினால்தான் சத்தியாகிரகத்திற்கு உயிரோட்டம் ஏற்படும். இதுவரை நகரங்களே சத்தியாகிரக மையங்களாக இருந்தன. இனி கிராமங்களே போர்க்களமாதல் வேண்டும். இதுவே ஜவஹரின் எண்ணம். இந்த எண்ணம் உருவாகும் வகையிலே ஈடுபட்டார்.

கிராமத்தில் மக்கள் நிலை எவ்வாறிருந்தது. கஷ்டம்! கஷ்டம், மிகுந்த கஷ்டம்; பொருளாதார மந்தம். போதாதற்கு வரிவசூல் கெடுபிடி. தவித்தார்கள் மக்கள்.

"வரி கொடுக்காதே!"

என்று சொன்னால் போதும் பஞ்சுப் பொதியிலே தீ வைத்தது போல் பிடித்துக் கொள்ளும்,

இதை அறிந்தார் ஜவஹர். வரி கொடா இயக்கம் தொடங்க விரும்பினார்.

இயக்கத்தை எப்படி தொடங்குவது ? காங்கிரசின் அனுமதி வேண்டுமோ ! மாகாண காங்கிரசின் நிர்வாகக் கமிட்டியைக் கூட்டினார். வரி கொடா இயக்கம் பற்றி ஆலோசித்தார். "நிலைமை எங்கே சாதகமாக இருக்கிறதோ அங்கே வரிகொடா இயக்கம் நடத்தலாம்" என்றது கமிட்டி.

அலகாபாத் ஜில்லாவிலே சூழ்நிலை மிகச் சாதகமாக இருந்தது. எனவே அங்கு இயக்கத்தைத் தொடங்க விரும்பினார் நேரு.

தொடங்குவது எப்படி ? இதைப்பற்றி யோசித்து ஒரு முடிவுக்கும் வந்தார். முதலில் அலகாபாத் ஜில்லாவிலுள்ள விவசாயிகளை ஒருங்கு திரட்டவேண்டும். வரி கொடா இயக்கம் பற்றி அவர்களுக்குச் சொல்லவேண்டும்.

எனவே, அலகாபாத் ஜில்லா விவசாயிகள் மகாநாடு ஒன்று கூட்ட ஏற்பாடு செய்தார். பின் முசோரிக்குச் சென்றார் பெரிய நேருவை காண. அவருடன் கமலாவும் சென்றார். இளைய நேருவைக் கண்டு மகிழ்ந்தார் பெரிய நேரு.

நான்கு நாட்கள் தந்தையுடன் இருந்தார் ஜவஹர். ஆனந்தமாகப் பொழுது போக்கினார். விளையாட்டு ! விளையாட்டு ; என்ன விளையாட்டு தெரியுமா ? காங்கிரஸ் விளையாட்டு.

ஜவஹரின் குழந்தை இந்திரா, விஜயலட்சுமியின் குழந்தை எல்லோரையும் வரிசையாக நிறுத்துவார் ஜவஹர். கையிலே தேசியகொடியைக் கொடுப்பார். ஊர்வலமாக வரச் சொல்வார். குழந்தைகள் கொடி பிடித்துக் கொண்டு வீட்டைச் சுற்றி வரும். 'ஜண்டா ஊஞ்சா ரஹேஹமாரா' என்ற பாட்டைப் பாடிக்கொண்டு ஜவஹர் அந்த ஊர்வலத்தின்

பின்னே சொல்வார், இது தான் விளையாட்டு. இதிலே ரொம்ப மகிழ்ச்சி அவருக்கு. முசோரியில் இதுவே பெரு மகிழ்ச்சி தரும் பொழுதுபோக்காக அமைந்தது.

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் முதல் நம்பர் எதிரி ஜவஹர். அவர் வெளியே இருந்தால் பிரிட்டிஷ் அரசாங்கத்துக்குத் தூக்கம் வருமா? ஹோம் டிபார்ட்மெண்ட் காரியதரிசி கடிதம் எழுதினார் ஐக்கிய மாகாண அரசாங்கத்துக்கு. அதுவும் மிகவும் அந்தரங்கமான கடிதம். அந்த கடிதம் என்ன கூறியது. ?

"ஜவஹர்லாலை பத்திரமாக வைத்துக் கொள்ள வேண்டும். சிறிது தொலைவில் வைப்பது நல்லது. நல்ல சந்தர்ப்பத்தை நழுவ விடலாகாது. கிடைக்கும் முதல் சந்தர்ப்பத்தை உபயோகித்து அந்தக் காரியம் செய்து விட வேண்டும்.'

அந்தரங்க கடிதம் வந்தபின் ஐக்கிய மாகாண அரசாங்கம் மீசை முறுக்கிற்று. 'முதல் சந்தர்ப்பம்' எப்போது கிடைக்கும் என எதிர்பார்த்துக்கொண்டு இருந்தது, கண்ணி விரித்து விட்டு பறவையை எதிர்பார்த்து இருக்கும் வேடன் போல.

அக்டோபர் 17ம் தேதி.

"அப்பா! நான் அலகாபாத் போகிறேன்" என்றார் ஜவஹர் தந்தையிடம்.

"என்னப்பா அவசரம்?"

"19ந் தேதி ஒரு மகாநாடு"

"சரி, புறப்படு. நாளை நானும் வந்து விடுகிறேன்."

"நமக்கோ உடம்பு சுகமில்லை. எந்த சமயம் என்ன நேருமோ? யார் கண்டார்கள்? பிரிட்டிஷ் அரசாங்கம் நமது

பிள்ளையை எவ்வளவு நாள் வெளியே விட்டு வைக்கப் போகிறது? ரொம்ப நாள் ஜவஹரை வெளியிலே நிச்சயம் விட்டு வைக்காது. எந்த சமயத்தில் சிறைக்குக் கொண்டு போய்விடுமோ? அது வரையிலாவது பிள்ளையுடன் இருப்போமே!''

இவ்வாறு எண்ணியே அவ்வாறு கூறினார் பெரிய நேரு. அதன்படி மறுநாளே அலகாபாத்துக்கு புறப்பட்டார்.

ஜவஹரும் கமலாவும் முசோரியிருந்து ஆனந்தமாக வந்துக் கொண்டு இருந்தபோது, டேராடூனிலே வழி மறித்தது போலீஸ். வாய்ப் பூட்டுச் சட்டம் போட்டது. லக்ஷ்மணபுரிக்கு வந்தார்கள். அங்கும் டேராடூன் போலவே நடந்தது.

பதினெட்டாம் தேதி இரவு. ஜவஹரும் கமலாவும் அலகாபாத் வந்து சேர்ந்தனர்.

மறுநாள் தான் விவசாயிகள் மகாநாடு. மிகப்பிரமாதமான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. காலையில் வந்தது போலீஸ். மீண்டும் வாய்ப்பூட்டு உத்தரவை வழங்கியது. யாருக்கு? ஜவஹருக்கு.

ஜவஹர் என்ன செய்தார்?

மகாநாட்டிக்குச் சென்றார். வீர முழக்கம் செய்தார். வரி கொடா இயக்கம் தொடங்க முடிவு செய்தது மகாநாடு.

இரவு மணி பத்து. ஜவஹரும் கமலாவும் காரில் வீடு நோக்கி வந்துக்கொண்டு இருந்தனர். தெருக் கோடியிலேயே காத்திருந்தது போலீஸ்.

காரை நிறுத்தியது; ஜவஹரைக் கைது செய்தது; ஜீப்பில் ஏற்றிக் கொண்டது; விரைந்து சென்றது.

கமலா மாத்திரம் வீடு திரும்பினார். வீட்டிலே பெரிய நேரு இருந்தார்.

"ஜவஹர் எங்கே அம்மா?" என்றார் மருமகளிடம்.

"ஜெயில்" ஒரே வார்த்தையில் சுருக்கமாக வந்தது பதில்

'சுருக்'கென்று பாய்ந்தது அந்தச் சொல். அப்படியே படுக்கையில் சாய்ந்தார் பெரியவர். குண்டு பட்டு விழுந்த கிழச் சிங்கம் போல் தவித்தார்; துடித்தார்; கண்ணீர் வடித்தார்.

## இருபத்தாறாம் அத்தியாயம்

# தண்டனையா? பார்த்து விடுகிறேன் ஒரு கை;

இரண்டு வருடம் கடுங்காவல், எழு நூறு ரூபாய் அபராதம்; அபராதம் கட்டத் தவறினால் மேலும் ஐந்து மாதம் கடுங்காவல். இதுதான் இம்முறை ஜவஹருக்கு விதிக்கப்பட்ட தண்டனை.

அபராதம் கட்ட மறுத்தார் ஜவஹர். தண்டனையை ஏற்றார். சிறை புகுந்தார். ஐந்தாவது முறையாக அவருக்குச் சிறைவாசம்.

மகன் சிறை சென்றது கண்டு மனம் கொதித்தார் மோதிலால் நேரு. அடிப்பட்ட கிழச்சிங்கம் போல கர்ஜித்தார். "தண்டனையா! பார்த்து விடுகிறேன். இந்த அரசாங்கத்தை ஒரு கை! இனி நான் சும்மா இருக்கப் போவதில்லை. எனக்கு வியாதியுமில்லை; ஒன்றுமில்லை; என் உடம்பு

குணமாகிவிட்டது. உம்! பார்த்து விடுகிறேன் ஒரு கை'' என்று சீறினார். காங்கிரஸ் கமிட்டிகளுக்கெல்லாம் சுற்றறிக்கை அனுப்பினார்.

''நவம்பர் மாதம் 14ந் தேதி ஜவஹரின் பிறந்தநாள்; அந்த நாளைக் கொண்டாடுங்கள். ஜவஹர் தினமாகக் கொண்டாடுங்கள். பொதுக் கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்யுங்கள். சொற்பொழிவு நிகழ்த்துங்கள். என்ன சொற்பொழிவு ? எந்த சொற்பொழிவுக்காக ஜவஹர் தண்டிக்கப்பட்டாரோ அதே சொற்பொழிவை அந்தக் கூட்டங்களிலே நிகழ்த்துங்கள். இந்த அரசாங்கம் என்ன செய்கிறது என்று பார்க்கிறேன்.''

சுற்றறிக்கையைக் கண்டவுடன் பெரிய நேருவின் வேண்டுகோளை ஏற்றுக் கொண்டது நாடு. நாடு முழுவதும் ஜவஹர் தினம் கொண்டாடப்பட்டது. நாடெங்கும் ஊர்வலங்கள், பொதுக் கூட்டங்கள் சொற்பொழிவுகள்.

அரசாங்கம் என்ன செய்தது ? குண்டாந்தடியால் அடித்தது; ஊர்வலங்கள் மீது குதிரைப் படையை ஏவியது. பலரைக் கைது செய்தது.

அன்று ஒரு நாள் மட்டும் ஐயாயிரம் பேர் சிறை சென்றனர்.

ஜவஹர் தினம் இவ்வாறு தனிச் சிறப்புடன் கொண்டாட பட்டது.

அலகாபாத் ஜில்லாவிலே வரி கொடா இயக்கம் ஆரம்பமாயிற்று. காட்டுத் தீப் போல் பரவியது. இந்த இயக்கம் ஐக்கிய மாகாணம் முழுவதும் பற்றி எரிந்தது.

அடக்கு முறையைக் கட்டவிழ்த்து விட்டது அரசாங்கம். எங்கே? சிறைக்குள்ளே அரசியல் கைதிகளைக் கொடுமையாக நடத்தியது. பிரம்பால் அடித்தது.

அது கண்டார் ஜவஹர்; சீறினார்; உண்ணாவிரதம் தொடங்கினார்; மூன்று நாள் உண்ணாவிரதம்.

சிறையிலே ஜவஹர் உண்ணாவிரதமிருக்கும் செய்தி எங்கும் பரவியது. செல்வக் குமரனைக் காண வந்தார் பெரிய நேரு.

தந்தையைக் கண்டார் இளைய நேரு. மனம் பதறினார். ஏன் ?

அஞ்சா நெஞ்சம் கொண்ட மோதிலால் — கம்பீரமான வீரத்திருவுருவத்துடன் விளங்கிய மோதிலால் — மெலிந்து, முகம் சுருங்கி, கண்கள் ஒளியிழந்து, தளர்நடையுடன் காணப்பட்டார்.

"அப்பா! உடம்பை ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்ளுங்கள்" என்றார் இளைய நேரு. அவரது கண்கள் நீர் சொரிந்தன. தந்தையின் உடல் நிலை அவரை வாட்டி வதைத்தது.

## இருபத்தி ஏழாம் அத்தியாயம்

# முதல் வட்ட மேஜை மகாநாடு

1930 நவம்பர் மாதம் பன்னிரண்டாம் தேதி லண்டனிலே வட்ட மேஜை மகாநாடு கூடிற்று. எண்பத்து ஒன்பது பிரதிநிதிகள் கூடினார்கள்.

இங்கிலாந்தில் உள்ள கட்சிகளின் பிரதிநிதிகள் பதினாறு பேர். இந்திய சமஸ்தானங்களின் பிரதிநிதிகள் பதினாறு பேர். பிரிட்டிஷ் இந்தியாவின் பிரதிநிதிகள் ஐம்பத்து ஏழு பேர்.

இவ்வளவு பேரும் கூடி பேசினார்கள். பேசினால் போதுமா? இந்தியாவின் சார்பில் பேசக் கூடிய ஒரே கட்சி காங்கிரஸ். வட்ட மேஜை மகாநாட்டில் காங்கிரஸ் பிரதிநிதிகள் யாருமே கலந்துக் கொள்ளவேயில்லையே? நாட்டின் நலத்தை, தேவையை மற்றவர் பேசினால், பூர்ணமானதாக இருக்குமா?

பிரிட்டிஷ் பிரதம மந்திரி ராம்சே மாக்டனால்டு இதைக் கண்டார். மகாநாட்டில் காங்கிரஸ் கலந்து கொள்ள வேண்டுமென விரும்பினார். சட்ட மறுப்புப்போரை காங்கிரஸ் இதை அறிந்தால் நிறுத்தி விடும் என்று எதிர்பார்த்தார். எனவே அதற்கான சூழ்நிலையை உருவாக்க முனைந்தார்.

1931வது ஆண்டு ஜனவரி மாதம் 26ந் தேதி காங்கிரஸ் தலைவர் பலரும் விடுதலை செய்யப்பட்டனர். ஜவஹரும் சிறையிலிருந்து வெளி வந்தார்.

## இருபத்தி எட்டாம் அத்தியாயம்

# பெரிய நேருவின் வருத்தம்

"பெரிய நேருவின் உடல்நிலை கவலை தரும் நிலையிலிருக்கிறது" என்ற செய்தி கேட்டார் ஜவஹர். உடனே அலகாபாத் ஓடினார். ஆனந்தபவனத்துள் நுழைந்தார். அங்கு என்ன கண்டார்? தந்தையை படுக்கையில் கண்டார்; மனம் பதைத்தார். சில நொடிகள் அப்படியே திகைத்து நின்றார். பிறகு ஓடினார் தந்தை அருகே.

"அப்பா" என்று அழைத்தார். தந்தையைக் கட்டிக் கொண்டார். கண்ணீர் சொரிந்தார்.

அருமை மகனைக் கண்டார். பெரிய நேரு. அப்படியே அணைத்துக் கொண்டார். நீண்ட நேரம் தந்தையின் பிடியிலேயே இருந்தார் நேரு. பின்னர் ஒருவாறு விடுவித்துக் கொண்டார்.

சிறையிலிருந்து வெளிவந்த உடனே காந்தியும் அலகாபாத்துக்குப் புறப்பட்டார். அன்றிரவே அலகாபாத் வந்து சேர்ந்தார்.

இரவு முழுவதும் தூங்கவே இல்லை; பெரிய நேரு விழித்துக்கொண்டே வழி பார்த்திருந்தார். யாருக்காக? காந்திக்காக - அண்ணலை வரவேற்பதற்காக.

காந்தி வந்தார். பெரிய நேருவைப் பார்த்தார். சில நிமிடங்கள் வரை மௌனம்; பேச்சே இல்லை. அப்படியே வைத்த விழி வாங்காமல் பெரிய நேருவை பார்த்துக் கொண்டிருந்தார்.

"சுயராஜ்யம் பெறப்போகிறோம். நீங்கள் இந்தக் கண்டத்திலிருந்து பிழைத்து விட்டால் அதைப் பார்க்கப் போகிறீர்கள்" என்றார் காந்தியடிகள்.

'சுயராஜ்யம் வரப்போவது நிச்சயம். நீங்கள் வெற்றி பெற்றுவிட்டீர்கள். ஆனால் நான் அதுவரை இருக்க மாட்டேன். சீக்கிரம் போய்விடுவேன்" என்றார் பெரிய நேரு

"ஆனால் எனக்கு ஒரே ஒரு வருத்தம் தான். சுதந்திர இந்தியாவில் நாம் சாகவில்லையே என்ற வருத்தம் ஒன்று தான். வேறு ஒன்றுமில்லை!" என்றார்.

காங்கிரஸ் தலைவர் பலரும் அலகாபாத்தில் கூடி விட்டனர். மோதிலால் நேருவின் மாளிகையில் ஒரே கூட்டம். நண்பர்களும் உறவினர்களும் கூடியிருந்தார்கள்.

பிப்ரவரி மாதம் நான்காம் தேதி, பெரிய நேருவைக் காரில் எடுத்துச் சென்றார்கள் லட்சுமணபுரிக்கு. ஏன்? எக்ஸ்-ரே சிகிச்சைக்காக.

லட்சுமணபுரியிலே தந்தை அருகே இருந்தார் ஜவஹர். அவரது தாயும் அருகே இருந்தார். டாக்டர்கள் சூழ்ந்து இருந்தார்கள்.

இரவு முழுவதும் யமனுடன் போராடினார் மோதிலால் நேரு. மறு நாள் விடியற்காலம், அதாவது பிப்ரவரி ஆறாம் தேதி. அமைதி நிலவியது; கண்களை மூடினார் பெரிய நேரு; திறக்கவே இல்லை.

"அப்பா தூங்குகிறார், அம்மா" என்றார் ஜவஹர்.

"மீளாத தூக்கம் அப்பா! மீளாத தூக்கம்!" என்று அலறினார் அன்னை.

அப்போது தான் அறிந்தார் ஜவஹர் தந்தை இறந்து விட்டார் என்பதை.

மூவர்ணக் கொடியை அவரது உடலில் சுற்றினார்கள். காரிலே ஏற்றிக்கொண்டு புறப்பட்டார்கள் அலகாபாத்துக்கு.

கோழி கூவிற்று. மோதிலால் இறந்த செய்தி அறிந்தார்கள் மக்கள்; அலையென திரண்டனர், மறைந்த தலைவருக்கு அஞ்சலி செய்ய.

அன்று மாலை இறுதி ஊர்வலம் ஆனந்த பவனத்தில் இருந்து புறப்பட்டது. மெதுவாக கங்கைக் கரையை சேர்ந்தது. இரவு மணி ஒன்பது. மோதிலால் சடலம் தகனம் செய்யப்பட்டது.

உத்தமரைப் பெற்ற உத்தமர் இயற்கையுடன் கலந்தார்.

## இருபத்தி ஒன்பதாம் அத்தியாயம்

# முதல் வட்டமேஜை மகாநாட்டுக்குப் பின்

லண்டன் வட்டமேஜை மகாநாட்டுக்குச் சென்ற இந்திய மிதவாதத் தலைவர்கள் மூவர். ஒருவர் ஸர். தேஜ் பகதூர் சப்ரூ; இன்னொருவர் ஜயகர்; மற்றொருவர் மகாகனம் ஸ்ரீனிவாச சாஸ்திரியர். மகாநாடு முடிந்தது. மூவரும் இந்தியா திரும்பினர். பம்பாய் துறைமுகத்திலே வந்து இறங்கினர்.

அவர்கள் கண்டதென்ன ? பம்பாய் நகரமே துயரில் மூழ்கியிருந்தது கண்டனர்.

ஏன் ? அன்றே மோதிலால் நேரு அமரரான நாள். பெரிய நேரு இவ்வுடலை விடுத்த நாள்; பண்டிதரை ஊனக் கண்கள் பறிகொடுத்த நாள்.

கண்ணீர் வடித்தது பம்பாய்; எங்கும் சோகம்; சோகம்; சோகம்! கடைகள் மூடிக் கிடந்தன.

மிதவாதத் தலைவர்கள் மூவரும் அலகாபாத்துக்கு விரைந்தார்கள்; இளைய நேருவைக் கண்டார்கள். கட்டி அணைத்தார்கள்; கண்ணீர் சொரிந்தார்கள். பிறகு ?

லண்டன் வட்டமேஜை மகாநாட்டிலே நடந்தவற்றை எல்லாம் கூறினார்கள்; சண்டையை நிறுத்தச் சொன்னார்கள். சமரசம் பேசச் சொன்னார்கள், இர்வினைப் பார்க்கச் சொன்னார்கள். கடிதம் எழுதி, இரண்டாவது வட்டமேஜை மகாநாட்டிலே கலந்து கொள்ளச் சொன்னார்கள்.

இவர் தம் பேச்சைக் கேட்டார் இளைய நேரு. புண்பட்ட நெஞ்சில் மேலும் வேல் கொண்டு குத்துவது போலிருந்தது அவருக்கு; ஆத்திரம் கொண்டார்; துடித்தார்.

பிப்ரவரி மாதம் பதினாராந் தேதி லார்ட் இர்வினுக்கும் கடிதம் எழுதினார் காந்தி, "மனம் திறந்து பேசுவோம்" என்றார். லார்டு இர்வினும் இணங்கினார். 'வருக' என்றார். லார்டு இர்வினின் இணக்கம் தந்தி மூலம் காந்திக்கு அறிவிக்கப்பட்டது. பிப்ரவரி மாதம் பதினாறாம் தேதி டில்லிக்குப் புறப்பட்டார் காந்தி.

அடுத்த நாள் பகல் இரண்டு மணி. காந்தி இர்வின் பேச்சு தொடங்கியது; சரித்திரப் பிரசித்தி பெற்ற சமரச பேச்சு ஆரம்பமாகியது டில்லியில் வைசிராய் மாளிகையிலே.

"ஏன் இந்த பேச்சு? எதற்காக இந்த சமரசம்? இதற்குத் தானா இவ்வளவு பேர் சிறை சென்றோம்; தடியடி பட்டோம்? பெரியதொரு போராட்டத்தை நடத்தினோம். மாபெரும் தியாகமெல்லாம் ஒரு கணத்தே மண்ணாகிப் போவதா?" என்று மனங்குமுறினார் ஜவஹர். மகாத்மாவிடம் தம் மனத்தில் பட்டதை வெளிப்படையாகவும் சொன்னார்.

" நீங்கள் சொல்வது முற்றும் நியாயமே; எனினும் நமது எதிரிகளுடன் பேசுவதால் நாம் எதையும் இழக்கப் போவதில்லையே " என்றார் காந்தி.

"கொஞ்சம் பொறுமையாக இருந்துப் பாருங்கள்."

ஜவஹர் இங்கே துடித்த அதே சமயத்தில் இங்கிலாந்திலே இன்னொருவர் மிக மிக துடித்தார். அவர் யார்? கடைந்தெடுத்த கன்சர்வேடிவ் பேர்வழி வின்ஸ்டன் சர்ச்சில்.

“ காந்தி என்னும் அரை நிர்வாணப் பக்கிரியை அழைப்பது அவமானம். நமக்கு சமமாக, சர்க்காருக்கு எதிராக சத்தியாக்கிரக போர் செய்யும் காந்தி நம் நாட்டுக்கு எதிரி; வைசிராயின் மாளிகைப் படிக்கட்டுகளை அவர் ஏறுவது எத்தகைய அவமானம்; மாட்சிமை பொருந்திய மன்னர் பெருமானின் பிரதிநிதிக்கு எதிராக வீற்றிருக்க அவருக்கு என்ன தகுதி? நம் பிரதிநிதிகளுக்குச் சரிசமமாக அந்த காந்தி பேசுவதை என்னால் சகிக்க முடியவில்லையே! காணவும் முடியவில்லையே! கண்ணை உறுத்துகிறதே!” என்று பிரலாபித்தார் சர்ச்சில்.

## முப்பதாம் அத்தியாயம்

# காந்தியடிகளும் இர்வினும்

லார்டு இர்வின் சமாதானம் விரும்பினார். வட்டமேஜை மகாநாடு மீண்டும் கூடினால் அதிலே காங்கிரஸ் கலந்துக் கொள்ளவேண்டும் என்று விரும்பினார். எப்படியாவது காந்தியுடன் சமரசம் காண முனைந்தார்; பேசத் தொடங்கினார்.

காங்கிரஸ் காரியக் கமிட்டி கூடியது. எங்கே ? டில்லி மாநகரிலே, டாக்டர் அன்சாரி மாளிகையிலே ஆலோசிப்பதற்காகக் கூடியது.

“ பூரண சுயராஜ்யமே நமது லட்சியம். அதை நழுவ விடலாகாது. அதற்குக் குறைந்த எதையும் ஏற்கலாகாது ! ” என்று கர்ஜித்தார் நேரு.

“ பர்தோலி சத்தியாக்கிரகிகளின் கதி என்ன ? பறிமுதல் செய்த நிலங்களை எல்லாம் திருப்பிக் கொடுக்கவேண்டும் இன்றேல் சமரசத்தை ஏற்கமுடியாது ” என்று உறுமினார் சர்தார் வல்லபாய் படேல்.

காந்தி என்ன செய்தார்? ஆறு நிபந்தனைகளை வெளியிட்டார். என்ன நிபந்தனை?

1) அரசியல் கைதிகள் எல்லோரையும் உடனே நிபந்தனையின்றி விடுவிக்க வேண்டும்.

2) அடக்கு முறையை உடனே நிறுத்த வேண்டும்.

3) பறிமுதல் செய்த சொத்துக்களை எல்லாம் உரியவரிடம் திருப்பிக் கொடுத்துவிடவேண்டும்.

4) அரசியலில் ஈடுபட்டதால் வேலையிழந்த சர்க்கார் ஊழியர்களுக்கு திரும்பவும் வேலை கொடுத்துவிட வேண்டும்.

5) உப்பு எடுக்கவும், கள்ளுக்கடைகள், அந்நியத் துணிக் கடைகள் முதலியவற்றின் முன் நின்று மறியல் செய்யவும் உரிமை கொடுத்தல் வேண்டும்.

6) போலீசின் வரம்பு மீறிய செயல் குறித்து விசாரித்தல் வேண்டும்.

இவையே அந்த ஆறு நிபந்தனைகள்.

இவற்றையெல்லாம் பிரிட்டிஷ் அரசாங்கம் நிறைவேற்றுதல் வேண்டும்'' என்றார் காந்தி.

ஏன்?

பிரிட்டிஷ் அரசாங்கத்தின் நல்லெண்ணத்தை நிரூபிப்பதற்காக. இது கண்டார் ஜவஹர். சீறினார்.

"மறியல் சுதந்திரமாம்! மண்ணாங் கட்டியாம்; என்ன இது? இதுவா பூர்ண சுயராஜ்யம்? இதற்காகவா சண்டை போட்டோம்? இதற்காகவா இவ்வளவு பேர் சிறை சென்றோம்? சொல்லொணாத துன்பங்களை எல்லாம் மேற்கொண்டோம்!'' என்று சீறினார்.

"கள்ளுக் கடைக்கும் சுயராஜ்யத்துக்கும் என்ன சம்பந்தம் கள்ளுக்கடை மறியல் செய்துவிட்டால் போதுமா ! அது தான் சுயராஜ்யமா?" என்றார் மனம் வெதும்பினார், கொதித்தார்.

அன்சாரி மாளிகைக்கும் வைசிராய் மாளிகைக்கும் இடையே உள்ள தூரம் ஐந்து மைல்.

மகாத்மா என்ன செய்தார் ? நடந்தே சென்றார்; நடந்தே திரும்பினார். பதினைந்து நாட்கள், காந்தி இர்வின் சமரசப் பேச்சு நடைபெற்றது.

"சத்தியாக்கிரகத்துக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்" என்றார் இர்வின்.

" சத்தியாக்கிரகத்தை நிறுத்தி வைக்கிறேன் " என்றார் காந்தி.

நீண்ட நேரம் விவாதம் நடைபெற்றது. விவாதம் எதிலே ? சொல் அளவிலேதான். " போலீசின் வரம்பு மீறிய செயல் குறித்து விசாரிக்க வேண்டும்" என்றார் காந்தி,

"முடியாது!" என்றார் இர்வின்.

காந்தி விடாப்பிடியாக இருந்தார். இப்படியாகப் பல நாள் பேசினார்கள்.

டாக்டர் அன்சாரி வீடு அல்லோ கல்லோலப்பட்டது.

எதிர்பாராத நண்பர் பலர் வந்தனர்; காந்திஜியைக் கண்டனர்; பேசினர்; காரியக் கமிட்டி அங்கத்தினரைப் பார்த்து பேசினர்.

காங்கிரசை எதிர்த்துப் பேசியவர். ஏகாதிபத்தியத்துடன் உறவு கொண்டவர் பலரும் இப்போது காங்கிரசுடன் நேசம்

பாராட்டத் தொடங்கினர். காங்கிரஸ் தலைவர்களைக் கண்டதும் புன்முறுவல் பூத்தனர்; பேசுவதற்கு ஆர்வத்துடன் ஓடி வந்தனர்.

லார்டு இர்வின் அண்ணலின் ஆறு நிபந்தனைகளை அப்படியே ஏற்றாரா? இல்லை. ஏற்றவை சிலவே, தள்ளியவை மற்றவை.

உப்பு சத்தியாக்ரகத்துக்கு காரணமாக இருந்த உப்பு வரியை நீக்கினாரா? இல்லை. அதற்கு பதில் கடற்கரை அருகே வசிக்கும் கிராம மக்களுக்கு உப்பு காய்ச்சும் உரிமை வழங்கினார். அதுவும் எப்படி? சொந்த உபயோகத்துக்கு வேண்டிய உப்பை மட்டும் தயார் செய்து கொள்ளலாம்.

மறியல் செய்யலாம். எப்படி? கடையிலிருந்து இருபது கஜ தூரம் விலகி நின்று மறியல் செய்யலாம். இதற்கும் உரிமை வழங்கினார் லார்டு இர்வின்.

"பர்தோலி சத்தியாக்கிரகத்தின் போது ஜப்தி செய்யப்பட்ட நிலங்களை வேறு எவரும் வாங்காமல் இருந்தால் திருப்பித் தரல் இயலும்".

"அரசியல் கைதிகள் விடுதலை பெறுவார்கள், ஆனால் பலாத்கார செயல் புரிந்தோர் விடுதலை பெறமாட்டார்!" என்றார் அடுத்த நிபந்தனைக்கு இர்வின்.

"அடக்கு முறை கைவிடப்படும். ஆனால் போலீசின் வரம்பு மீறிய செயல் குறித்து விசாரிக்க முடியாது!"

இதை காந்தி ஏற்றுக்கொள்ள மறுத்தார். போலீசின் வரம்பு மீறிய அட்டகாசங்களை விசாரிக்க வேண்டும் என மீண்டும் வற்புறுத்தினார் காந்தி.

இர்வினும் இதில் பிடிவாதமாக நின்றார். 'முடியாது' என்றார் திட்டவட்டமாக.

பேச்சு வார்த்தை முறிந்து விடும் போல் தோன்றியது.

திடீரென சமாளித்தார் இர்வின் "ஏன் முடியாது தெரியுமா?" என்றார்.

"ஏன்?" இது காந்தி

"போலீசின் வரம்பு மீறிய செயல்களை விசாரிக்கத் தொடங்கினால் பிறகு போலீசின் முறுக்குத் தளர்ந்து விடும். இன்னும் ஒரு சமயம் நீங்கள் சண்டை தொடங்கினால் போலீஸ் ஒத்துழைப்பு எங்களுக்குத் தேவை. ஆகவே இந்த விசாரணைக்கு நான் இணங்க முடியாது."

"சபாஷ்! அப்படிச் சொல்லுங்கள். இது சரி. இனி நான் உங்களை இந்த விஷயத்தில் வற்புறுத்த மாட்டேன்!" என்றார் அண்ணல்.

சத்தியாக்கிரகத்தை நிறுத்திவிட்டு வட்டமேஜை மகாநாட்டில் கலந்து கொள்ள இணங்கினார் காந்தி.

"சிறுப்பான்மையினருக்கும், பிரிட்டிஷ் நலன்களுக்கும், சமஸ்தானாதிபதிகளுக்கும் பாதுகாப்பு அளிக்கப்பட்ட சமஷ்டியே இந்தியாவுக்கு ஏற்ற அரசியல் திட்டம்" என்றார் இர்வின்.

"ஆம்!" என்றார் காந்தி.

"இராணுவம், வெளி விவகாரம் இரண்டும் நீங்கலாக" என்றார் இர்வின்.

"இருக்கட்டுமே" என்றார் அடிகள்.

இப்படியாக சமரசப் பேச்சு நிறைவு பெற்றது.

மார்ச் மாதம் ஐந்தாம் தேதி. விடியற்காலை இரண்டு மணி. வைசிராய் மாளிகையிலிருந்து திருமபினார் காந்தி.

அன்சாரி மாளிகையிலே இருந்த தலைவர் பலரும் தூங்கி விட்டனர். எல்லோரையும் எழுப்பினார் காந்தி.

''சமரசம் ஏற்பட்டு விட்டது.'' என்றார்.

'' சமாதானமா? எல்லாவற்றையும் ஒப்புக்கொண்டு விட்டீர்களா ?'' என்றார் நேரு ஆத்திரத்துடன்.

'' ஆம் ''

" அப்படி செய்திருக்கக் கூடாது '' என்றார் நேரு.

'' இப்பொழுது என்ன சொல்கிறீர்கள்? வைசிராய்க்கு போன் செய்யவா? மோதிலால் இருந்தால் இப்படி இருக்குமா?'' என்றார் காந்தி, அவ்வளவு தான்! சீறிய பாம்பு மீண்டும் பெட்டிக்குள் அடங்குவதுபோல் அடங்கிவிட்டார் நேரு. ஆனால் மனமோ அடங்கவில்லை. உள்ளம் துடித்தது. தூக்கம் வரவில்லை; இந்த அற்ப சமாதானத்திற்காகவா தடியடி பட்டோம்! இந்த குட்டி சுதந்திரத்திற்காகவா சிறை சென்றோம் ?'' என ஏங்கினார்; கண்ணீரும் சொரிந்தார்.

## முப்பத்தி ஒன்றாம் அத்தியாயம்

# ஒப்பந்தத்தின் உள்ளே !

மார்ச் மாதம் இறுதியில் காங்கிரஸ் மகாசபை கராச்சி நகரிலே கூடியது. சர்தார் வல்லபாய் பட்டேல் தலைமை வகித்தார். காந்தி இர்வின் ஒப்பந்தம் ஏற்றுக்கொள்ளப் பட்டது.

லண்டன் வட்டமேஜை மகாநாட்டில் கலந்துக்கொள்வது என்றும் முடிவு செய்தது.

காங்கிரஸ் பிரதிநிதியாக மேற்படி மகாநாட்டில் கலந்து கொள்ளுமாறு காந்தியை வேண்டியது.

இச் சமயம் லார்டு இர்வினின் பதவிக் காலம் முடிந்தது. அவர் இங்கிலாந்து போய்விட்டார்.

வில்லிங்க்டன் இந்திய வைசிராயாகப் பதவி ஏற்றார்.

இப்போது நிலைமை முற்றிலும் மாறியது காந்தி இர்வின் ஒப்பந்தம் காற்றிலே பறக்கவிட்டார் வில்லிங்க்டன். ஒப்பந்தத்தை அமுல் நடத்தும் எண்ணமே அவருக்கு இல்லை. சர்க்காரின் கெடுபிடி முன்னைவிட பன்மடங்கு ஆயிற்று. சமரசம் ஏற்பட்டு விட்டதாக எண்ணினார்களே ! அது வெறும் கானல் நீர் என்பது தெளிவாயிற்று. எனவே காந்தி என்ன செய்தார் ? அதிர்வெடி ஒன்று போட்டார் !

" வட்டமேஜை மகாநாட்டுக்கு வரமாட்டேன்" என்றார். அவ்வளவுதான். அரசாங்கம் அசைந்து கொடுக்கத் தொடங்கியது.

காந்தியை அழைத்தார் வில்லிங்க்டன் பேசுவதற்கு.

ஆகஸ்டு மாதம் சிம்லாவிலே லார்டு வில்லிங்க்டனைக் கண்டு பேசினார் காந்தி. அதாவது ஆகஸ்ட் மாதம் 25த் தேதி.

ஜவஹரும் காந்தியுடன் சிம்லா சென்றார். பிரிட்டிஷ் அதிகாரிகளை கண்டு பேசினார்.

வைசிராயும் அவரைச் சேர்ந்தவர்களும் மிகவும் இனிமையாகப் பேசினார்கள். ஆனால் அதன் ஊடே என்ன காணப்பட்டது ?

பிரிட்டிஷ் சர்க்காரின் இரும்புக் கரம் காணப்பட்டது.

"மீண்டும் ஏதாவது வாலாட்டினால் நறுக்கி விடுவோம்" என்று எச்சரிக்கை செய்கிற பாவனையில் இருந்தார்கள் அதிகாரிகள். மேலுக்கு தேன் கசிய பேசினார்கள்.

இவற்றையெல்லாம் கண்டு கொண்டார் ஜவஹர். வட்டமேஜை மகாநாடு முட்டை போடாது என்று உணர்ந்தார்.

காந்தியை எப்படியாவது வட்டமேஜை மகாநாட்டுக்கு அனுப்ப முயன்றார் வைசிராய். காந்தியும் இணங்கினார்.

ஆகஸ்ட் மாதம் 27ந் தேதி பம்பாய்க்குப் புறப்பட்டார் ஜவஹரும் காந்தியுடன் பம்பாய்க்கு பயணமானார்.

ஆகஸ்டு மாதம் 29ந் தேதி "ராஜபுதனா" என்ற கப்பலில் லண்டனுக்குப் புறப்பட்டார் காந்தி.

முப்பத்திரண்டாம் அத்தியாயம்

# இரண்டாவது வட்டமேஜை மகாநாடு ஏன்?

செப்டம்பர் மாதம் பன்னிரண்டாந் தேதி சனிக்கிழமை காந்தி லண்டன் சேர்ந்தார். லண்டன் மாநகரின் கீழ் திசையிலே ஒரு பெண்மணி. இந்தியாவின் நண்பர். மிஸ் மூரியல் லெஸ்டர் என்ற பெயர் கொண்டவர். காந்தியைத் தமது விருந்தினராக ஏற்றார்; உபசரித்தார்.

அப்போது இங்கிலாந்திலே இந்தியா மந்திரியாக இருந்தவர் ஸர். ஸாமுவேல் ஹோரர். கன்சர்வேடிவ் கட்சியினர். முதலில் அவரைச் சந்தித்து பேசினார் காந்தி.

"மிஸ்டர் காந்தி; உண்மையைச் ஒளிக்காமல் சொல்லி விடுகிறேன் கேளுங்கள். உடனடியாக சுதந்திரம் கொடுக்கிற எண்ணம் எங்களுக்கில்லை. டொமினியன் அந்தஸ்தும் வழங்கப் போவதில்லை. ஆனால் பையப்பைய அந்த லட்சியத்தை நோக்கிச் செல்வோம், அவ்வளவுதான்." என்றார்.

"சபாஷ் ! சர் சாமுவேல் ! உங்களது நேர்மையை நான் பாராட்டுகிறேன்!" என்றார் காந்தி.

உண்மை வெளியாயிற்று. பின் வட்டமேஜை மகாநாடு எதற்கு ? வகுப்புவாதத்துக்கு தூபம் போட.

வட்ட மேஜை மகாநாட்டிலே வகுப்புவாதிகள் குரைத்தார்கள் ; எலும்புத் துண்டுக்கு குக்கல் குலைப்பது போல குலைத்தார்கள்.

யானை குட்டி போட்ட கதையாக முடிந்தது இரண்டாவது மகாநாடு.

டிசம்பர் முதல் தேதி லண்டன் துறைமுகத்தில் கப்பல் ஏறினார் காந்தி இந்தியாவுக்குத் திரும்பினர்.

இந்தியாவிலே நிலைமை எப்படி?

வங்காளத்திலே பயங்கர இயக்கம் மீண்டும் தலைதூக்கியது. அடக்கு முறையை அவிழ்த்து விட்டது சர்க்கார்.

ஹிஜலி என்றோர் இடம். கல்கத்தாவிலிருந்து எழுபது மைல் தூரத்தில் இருந்தது. அங்கே ஒரு தனிச் சிறை ஒன்று அமைந்தது.

வங்கம் தந்த வாலிப வீரர் பலரை அச்சிறையில் தள்ளியது. பாதுகாவலில் வைத்தது. சிறையிலே கலகம் செய்தார்கள் என்று கூறி துப்பாக்கியால் சுட்டது. இருவர் இறந்தனர்; இருபது பேர் காயமுற்றனர். வங்க இளைஞர் பலரை தூக்கிலிட்டது; துன்புறுத்தியது; வதைத்தது; வாட்டியது.

o o o o

எல்லைப்புற மாகாணத்திலே டிசம்பர் மாதத் தொடக்கத்திலே தொண்டர் முகாம் ஒன்று அமைத்தார் எல்லை காந்தி, பெஷாவர் ஜில்லாவிலே. எதற்கு? தேசிய இயக்கத்துக்குத் தொண்டர் படை தயார் செய்ய. கண்டது அரசாங்கம், கொண்டது கிலி.

கான் சகோதரர்களை அழைத்தது பேசுவதற்கு. சகோதரர்கள் அழைப்பு வந்த உடனே ஓடினார்களா? இல்லை! "காங்கிரசுக்குத் துரோகம் செய்து பேசமாட்டோம்!" என்றார்கள். அவ்வளவுதான்.

"அப்படியா! பிடி அவர்களை, தள்ளு உள்ளே!" என்றார் விலிங்க்டன் துரை. கான் சகோதரர்கள் சிறையில் அடைக்கப்பட்டனர், டிசம்பர் மாதம் 24ந் தேதி.

o o o o

ஐக்கிய மாகாணத்திலோ நிலைமை மிக மிக மோசம். வரி கொடுக்க முடியாமல் தவித்தனர் விவசாயிகள். அரசாங்கமோ கிட்டி கட்டி வரி வசூல் செய்தது.

தேச பக்தர்கள் துடித்தார்கள்; கொதித்தார்கள். மீண்டும் போர் தொடங்கவேண்டுமென்று குதித்தார்கள்.

" காந்தி வரும் வரை காத்திருப்போம் !" என்றது காங்கிரஸ்.

அவசரப் பட்டுக் காரியத்தை கெடுத்து விடக்கூடாது என்பது காங்கிரஸ் தலைவர்களின் எண்ணம்.

சர்க்காரின் எண்ணமோ வேறு விதமாக இருந்தது.

' காந்தி வரும்வரை எதற்காக காத்திருக்க வேண்டும் ? இப்போதே வலுச் சண்டைக்கு இழுத்து காங்கிரசை அடித்து நொறுக்கிவிட வேண்டும்; சுட்டுப் பொசுக்கி விடவேண்டும்."

என்று எண்ணிய சர்க்கார் அதற்கேற்ற சந்தர்ப்பத்தை ஆவலோடு எதிர்நோக்கி நின்றது.

## முப்பத்தி மூன்றாம் அத்தியாயம்

# அவரும் காத்திருந்தார் சந்தர்ப்பமும் வந்ததே

அலகாபாத் ஜில்லாவில் விவசாயிகள் படும் துன்பம் கண்டது காங்கிரஸ் கமிட்டி. சீறி எழுந்தது.

' வரி கொடாதே என்று கூறப் போகிறோம்" என்றது.

" பதறாதே, சற்றுப் பொறு; அவசரப்பட்டு எதுவும் செய்து விடலாகாது. காரியக் கமிட்டியின் அனுமதி பெறாமல் வரிகொடா இயக்கம் தொடங்கக் கூடாது." என்று எச்சரிக்கை செய்தது ஐக்கிய மாகாண காங்கிரஸ். காரிய கமிட்டியின் அனுமதியை வேண்டியது இயக்கம் தொடங்க.

"பேசிப் பாருங்கள். ஒன்றும் பயன் விளையாவிட்டால் பிறகு வரி கொடா இயக்கம் தொடங்குங்கள்" என்றது.

அவ்வளவு தான் உடனே ஒரு மகாநாட்டைக் கூட்டியது அலகாபாத் காங்கிரஸ் கமிட்டி. அதுவும் விவசாயிகள் மகாநாடு. அம் மகாநாடு ஒரு தீர்மானத்தையும் நிறைவேற்றியது.

"விவசாயிகளின் கஷ்டங்களை உடனே தீர்க்க வில்லையானால் வரி கொடுக்க முடியாது" என்பது தான் தீர்மானம்.

வெறும் வாயை மெல்லுகிற பாட்டி அவல் கிடைத்தால் விடுவாளா ?

வலுச் சண்டைக்கு வழி பார்த்த விலிங்க்டன் வந்த சண்டையை விட்டு விடுவாரா ? சீறிப் பாய்ந்தார்.

அவசரச் சட்டங்களை அள்ளி வீசினார். ஐக்கிய மாகாண காங்கிரஸ் தலைவர்களைக் கைது செய்தார்; சிறையில் தள்ளினார்.

இந்த சமயத்திலே ஜவஹர் எங்கிருந்தார் ? பம்பாயில் இருந்தார். கமலாவுக்கு உடம்பு சுகமில்லை. வைத்திய வசதிக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்துகொண்டு இருந்தார்.

ஐக்கிய மாகாண காங்கிரஸ் தலைவர்கள் சிறையில் தள்ளப்பட்ட செய்தி கேட்டார். உடன் புறப்பட்டார் அலகாபாத்துக்கு. டிசம்பர் ஒன்றாந் தேதி.

"என்ன அவசரம் ? இன்னும் சில நாட்களில் காந்தி வந்து விடுவார். அவரைப் பார்த்த பின் போகலாமே" என்றனர் நண்பர்கள்.

"இரண்டே நாளில் வந்து விடுகிறேன்" என்று கூறினார் நேரு; புறப்பட்டு விட்டார்.

வரும் வழியிலேயே அவரை வரவேற்றது சர்க்கார். அலகாபாத் ஜில்லா மாஜிஸ்திரேட் ஓர் உத்தரவு பிறப்பித்தார். உத்தரவு ஜவஹரிடம் சேர்ப்பிக்கப்பட்டது. என்ன உத்தரவு ?

1) அலகாபாத் எல்லையைத் தாண்டி எங்கும் போகக் கூடாது. பொதுக் கூட்டங்களில் பேசக் கூடாது.

2) பத்திரிகைகளுக்கு அறிக்கை வெளியிடக் கூடாது.

3) துண்டுப் பிரசுரங்கள் வெளியிடலாகாது.

இது தான் உத்தரவு, அதைப் பெற்றுக்கொண்டார் ஜவஹா. ஊருகது வந்து சேர்ந்தார். சேர்ந்தவுடன் ஒரு கடிதம் எழுதினார் அலகாபாத் ஜில்லா மாஜிஸ்திரேட்டுக்கு.

"நான் என்ன செய்ய வேண்டும் ? எங்கே போக வேண்டும் என்பன போன்ற விஷயங்கள் எனக்குத் தெரியும். அது குறித்து எனக்கு யாரும் உத்தரவு போட வேண்டியதில்லை. எவருடைய உத்தரவையும் ஏற்று நடப்பவன் நான் அல்ல. என் பெயரைக் கூட சரியாக எழுதத் தெரியவில்லை தங்களுக்கு. ஜவஹிரிலால் என்று எழுதியிருக்கிறீர்கள். அது தவறு. ஜவஹர்லால் என்பது தான் சரி. இனி இந்த மாதிரி தவறு செய்யமாட்டீர்கள் என்று கருதுகிறேன். இங்கே எனது வேலைகளை கவனித்து விட்டு சீக்கிரத்தில் நான் பம்பாய் செல்லயிருக்கிறேன் காந்தியை சந்திப்பதற்காக."

இந்த கடிதத்தை நண்பர்களிடம் படித்துக் காட்டினார் உறையிலிட்டார். ஜில்லா மாஜிஸ்திரேட்டுக்கு அனுப்பி விட்டார்.

"எப்படி என் கடிதம்?" என்றார் ஜவஹர் ஸ்ரீ பிரகாசாவிடம்.

"பல்லை உடைத்துக் கையில் கொடுத்து விட்டீர்கள். ஆனால் உங்களை பம்பாய் போக விடமாட்டான்" என்றார் ஸ்ரீ பிரகாசா.

"எவனும் என்னைத் தடுத்தல் இயலாது. நான் போகத்தான் போகிறேன்." என்றார் நேரு.

வரி கொடா இயக்கத்துக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்தவர் நேருவே என்று அறிந்தது அரசாங்கம். அவரையும் சிறையில் தள்ள வலை வீசி விட்டுக் காத்திருந்தது.

டிசம்பர் மாதம் 26ந் தேதி காலை, அலகாபாத்திலே ரயில் ஏறினார் நேரு பம்பாய்க்குச் செல்ல.

கொஞ்சம் தூரம் சென்றது ரயில். அலகாபாத் எல்லையில் திடீரென்று நிறுத்தப்பட்டது.

போலீஸ் வான் ஒன்று வந்தது. நின்றது. அதிலிருந்து டி. எஸ் பி, இறங்கினார். குதிரை மீது வந்த போலீஸ் வீரர்கள் சல்யூட் செய்தார்கள். போலீஸ் சூப்பிரண்ட் பின் தொடர்ந்தார்.

நேரு இருந்த கம்பார்ட்மெண்டுக்குள் நுழைந்தார் டி. எஸ். பி. நேருவை கைது செய்தார், வானில் ஏற்றிக் கொண்டார்.

ரயில் வண்டி பம்பாய் நோக்கிச் சென்றது. போலீஸ் 'வான்' சிறை நோக்கிச் சென்றது.

## முப்பத்தி நான்காம் அத்தியாயம்

# கொட்டியது போர் முரசு

ஜவஹர் சிறை சென்ற இரண்டாம் நாள், மகாத்மா காந்தி பம்பாய் துறைமுகத்திலே வந்து இறங்கினார். நிலைமையை அறிந்தார். உடனே வைசிராயிக்குத் தந்தி கொடுத்தார். எதற்கு? நேரில் பேசுவதற்கு.

வில்லிங்க்டன் என்ன செய்தார்? நிபந்தனை விதித்தார். "அவசரச் சட்டம் பற்றி ஏதும் பேசக் கூடாது. வேறு ஏதாவது பேசவேண்டுமானால் பேசுவோம். வருக!" என்றார்.

"பேசுவதற்கு வேறென்ன இருக்கிறது? எதுவும் இல்லை!" என்று கூறிவிட்டார் காந்தி.

இனி என்ன? மீண்டும் போர், போர், சத்தியாக்கிரக போர்முரசு கொட்டவேண்டியது தான். வேறு வழியே இல்லை.

எனவே பம்பாயில் கூடிய்து காங்கிரஸ் காரியச் கமிட்டி, சத்தியாக்கிரகம் பற்றி தீர்மானித்தது.

"போரைத் தொடர்ந்து நடத்துங்கள்" என்று அறிவித்தது.

காங்கிரஸ் கமிட்டிகள் இத்தகைய போர் அறிவிப்பை எதிர்பார்க்கவில்லை. சமாதானப் பேச்சு நடைபெறும் என்றே எண்ணியிருந்தன.

ஆனால், வில்லிங்க்டன் தான் வலுச்சண்டைக்கு அழைக்கிறாரே! பின் போர் தொடங்க தயக்கம் ஏன்? எனவே காங்கிரஸ் கொட்டியது போர் முரசு. இரகசிய சுற்றறிக்கைகள் நாடு முழுவதும் பறந்தன. அகிம்சா வீரர்கள் போருக்குப் புறப்பட்டார்கள்.

## முப்பத்தி ஐந்தாம் அத்தியாயம்

# 1932 நிகழ்ச்சிகள்

1932ஆம் ஆண்டு ஜனவரி 4ந் தேதி விடியற்காலை. காந்தியைக் கைது செய்தது அரசாங்கம். ராஷ்டிரபதி வல்லபாய் பட்டேலையும் கைது செய்தது - சிறைக்குக் கொண்டு சென்றது.

பின் என்ன? மளமளவென்று அசுர வேகத்தில் அவசரச் சட்டங்களை அள்ளி வீசினார் வில்லிங்க்டன்.

'காங்கிரஸ் சட்ட விரோதமானது. காங்கிரசோடு ஒட்டிய ஸ்தாபனங்கள் எல்லாம் சட்ட விரோதமானவை'' என்று அறிவிக்கப்பட்டன.

காங்கிரஸ்காரருக்கு இடம் கொடுத்தால் தண்டனை! தண்ணீர் கொடுத்தால் தண்டனை! காங்கிரஸ்காரருடன் பேசினால் தண்டனை! இப்படி தண்டனை ஜாபிதாக்களைச் பிரசுரித்து - தினமும் தண்டனை பட்டியலை பெறுக்கிக் கொண்டே வந்தார் வைசிராய்.

அலகாபாத்திலே காங்கிரஸ் தலைமைக் காரியாலயம் ஆகிய சுயராஜ்ய பவனம் சீல் வைக்கப்பட்டது. காங்கிரஸ் கொடி கீழே இறக்கப்பட்டது. சுயராஜ்ய பவனத்திலே இருந்த காங்கிரஸ் ஆஸ்பத்திரி சாமான்களை எல்லாம் தூக்கி வெளியே எறிந்தார்கள்.

மறியல் செய்தால் தண்டனை! மறியல் செய்யத் தூண்டினால் தண்டனை! சத்தியாக்கிரகம் செய்யச் சொன்னால் தண்டனை. பத்திரிகைகளுக்கு வாய்ப்பூட்டு! காங்கிரசைப் பற்றிய செய்திகளைத் வெளியிடக்கூடாது.

அடக்கு முறைகளைக் கண்டித்து எழுதக்கூடாது இப்படியாக ஏராளமான பட்டியல்களை மேலும் மேலும் வெளியிட்டுக் கொண்டே இருந்தார் வைசிராய்.

ஆனால் பாரத மக்கள் என்ன செய்தார்கள்? விலிங்க்டன் பூச்சாண்டி கண்டு அஞ்சினார்களா? இல்லை. போரிலே குதித்தார்கள். தீவிரமாக இறங்கினார்கள்.

அலகாபாத்திலே ஜவஹரின் சகோதரிமார் விஜயலட்சுமியும், கிருஷ்ணாவும் போரிலே பங்கு கொண்டனர், சிறை சென்றனர். விஜயலட்சுமி கணவர் ஆர்.எஸ் பண்டிட்டும் சிறை சென்றார்.

பெண்கள்! கல்லூரி மாணவிகள்! மாணவர்கள்! ஆயிரக்கணக்கில் சிறை சென்றார்கள்.

மக்கள் தங்களுக்குத் தோன்றிய வகையில் எல்லாம் சட்டம் மீறினர். ஆக, நான்கே மாதங்களில் - அதாவது ஏப்ரல் இறுதிக்குள் என்பதாயிரம் பேர் சிறைச்சாலைகளை நிரப்பினார்கள்.

## முப்பத்தி ஆறாம் அத்தியாயம்

# எல்லையே கிடையாதா?

சிறைக்குள்ளே இருந்த வண்ணம் இந்தச் செய்திகளை எல்லாம் அறிந்தார் ஜவஹர். மக்களின் எழுச்சி கேட்டார்; மனம் மகிழ்ந்தார்.

சுயராஜ்ய பவனம் 'சீல்' வைக்கப்பட்ட செய்தி அறிந்தார்; சீறினார். காங்கிரஸ் கொடி கீழே இறக்கபட்ட செய்தி கேட்டார். 'அராஜகத்திற்கு எல்லையே கிடையாதா?' என்று ரத்தக் கண்ணீர் வடித்தார்,

'ஆனந்த பவனத்தையும் சீல் வைக்க எண்ணியிருக்கிறது சர்க்கார்.'' என்றொரு செய்தி வந்தது.

கேட்டார் ஜவஹர். கலங்கினார்; நகச்சுற்றின் மேல் உலக்கை விழுந்தது போல் துடித்தார்.

''ஆனந்த பவனம்! நான் துள்ளித் திரிந்து விளையாடிய ஆனந்த பவனம்! எனது தந்தை இருந்து வாழ்ந்த ஆனந்த பவனம்! அதை மூடி சீல் வைக்கப் போகிறதா அரசாங்கம்?

''எவ்வளவு நாற்காலிகள்! எவ்வளவு மேஜைகள்! எவ்வளவு சோபாக்கள்! அன்புடன் அளித்த பரிசுப் பொருட்கள் எவ்வளவு! ஆசையுடன் சேகரித்த அலங்கார பொருட்கள் தான் எத்தனை! இவற்றையெல்லாம் எவ்வளவு அருமையாகப் போற்றி வந்தோம்! பெருமையுடன் பேணி வந்தோம்! அருமை பெருமையுடன் நாங்கள் போற்றிய பொருள்களை எல்லாம் ஏலம் போடப் போகிறதா? எனது அன்னை! அந்தோ! அவர் எங்கு செல்வார்? எவருடைய வீட்டில் போய் வசிப்பார்? அரசி போல் வீற்றிருந்த அவர் ஆண்டி போல் எங்கு சென்று ஒண்டுவார்?.''

இவ்வாறு எண்ணி எண்ணி மனம் நொந்தார், வெந்தார்!

'சக்கரவர்த்தி என்றே- மேலாம்
தன்மை படைத்திருந்தோம்;
பொக்கென ஓர் கணத்தே எல்லாம்
போகத் தொலைத்து விட்டாய்.'
(பாரதியார் பாஞ்சாலி சபதம்)

என்று இடித்துக் கூறினான் வீமன். யாரைப் பார்த்து? தரும புத்திரைப் பார்த்து. வீமனைப் போல் இடித்துக் கூறியது ஜவஹரின் உள்ளம்.

ஆனால் ஜவஹர் இடித்துக் கூறிய உள்ளத்திற்கு தகுந்த பதிலடி கொடுத்தார்.

“போகட்டும், போகட்டும்! எல்லாமே போகட்டும்! இதுவும் போகட்டும். இன்னும் இருந்தால் அதுவும் போகட்டும். இந்த நாட்டிலே கோடிக்கணக்கான மக்கள் வறுமையில் வாடும்போது எனக்கு மாத்திரம் எதற்கு வீடு? எனக்கு மாத்திரம் எதற்கு சோபா? வேண்டாம், வேண்டவே வேண்டாம்; போகட்டும். அப்போது தான் நான் உண்மை ஏழை மக்களின் பிரதிநிதியாக முடியும். ஏழை மக்களின் பொருட்டு பாடுபட இயலும்” என்ருர்; மனம் தேறினார்.

அது சரி, ஆனந்த பவனத்தை எதற்காக சீல் வைக்க வேண்டும்? சர்க்காருக்குச் செலுத்த வேண்டிய வருமான வரிக்காக.

பெரிய நேரு இருந்த காலத்திலே அவர் செலுத்த வேண்டிய வருமான வரி பாக்கி இருந்தது. அதைச் செலுத்துமாறு நோட்டீஸ் அனுப்பியது அரசாங்கம்.

ஜவஹர் என்ன செய்தார்? வரி கொடுத்தாரா? இல்லை வரி கொடுக்க மறுத்தார்.

‘வரி கொடாதே’ என்று மக்களுக்குச் சொல்லிவிட்டு தான் மாத்திரம் வரி செலுத்தினால் அது முறையாகுமா? எனவே, வரி கொடுக்க மறுத்தார்.

வரி வசூல் செய்வதற்காகத்தான் ஆனந்த பவனத்தை ஜப்தி செய்ய எண்ணியது அரசாங்கம். ஆனால் அவ்வாறு ஜப்தி செய்யவில்லை. காரணம்?

ஜவஹரின் கார் இருந்தது. அதை ஜப்தி செய்து கொண்டு போனார்கள். ஏலம் போட்டார்கள்.

ரயில்வே கம்பெனி ஒன்றில் சில பங்குகள் இருந்தன. அவற்றை ஜப்தி செய்தார்கள். ஏலம் போட்டார்கள். விலிங்க்டன் 'ஏலம் போடுவதில் பேர் பெற்றார்.'

## முப்பத்தி ஏழாம் அத்தியாயம்

# இயற்கை தந்த இன்பம்

ஜவஹரின் உடல் நிலை கெட்டது. தினமும் மாலை வேளைகளில் காய்ச்சல் வந்தது. எனவே அவரை வேறு இடத்திற்குக் கொண்டு போக எண்ணினார்கள் அதிகாரிகள். பெரில்லி சிறைக்குக் கொண்டு போனார்கள்

நைனி சிறையை விட்டுச் செல்வது சிறிது கஷ்டமாகத் தான் இருந்தது ஜவஹருக்கு. ஏன், பழகிய முகங்கள். கண்ணைக் கவரும் கிளிகள்! அழகான கிளிகள் ஆனந்தமாகப் பறந்துவரும். பக்கத்திலே உள்ள தோப்பில் இருந்து ஓடிவரும். அவற்றைக் காண்பார் ஜவஹர் ஆனந்தம் கொள்வார். இத்தகைய சூழ்நிலையை விட்டுச் செல்வது என்றால் சிறிது சிரமம் தானே!

பெரில்லி சிறைக்குள்ளே குரங்குகள் ஏராளமாக வரும். அவற்றைக் கண்டு மகிழ்வார் ஜவஹர்.

குட்டிக் குரங்கு ஒன்று ஒரு முறை கைதிகளிடம் சிக்கிக் கொண்டது. கயிறு கொண்டு அதைக் கட்டி விட்டார்கள் கைதிகள். குட்டிக்குரங்கு கூச்சல் போட்டது. கேட்டது ஒரு பெரிய குரங்கு சீறிக் கொண்டு வந்தது. தாவிக் குதித்தது. கூட்டமாக நின்ற கைதிகள் பயந்து ஓடினார்கள். குட்டியைத் தூக்கிக் கொண்டு போய் விட்டது பெரிய குரங்கு.

பெரிய குரங்கின் வீரச் செயல் கண்டார் ஜவஹர்; மிக மகிழ்ந்தார். வீரச் செயல் புரிவதிலே ஆர்வமும் ஆனந்தமும் கொள்ளும் ஜவஹர் குரங்கின் வீரம் கண்டு மகிழ்ந்தது இயற்கையே.

கோடை காலம். கடுமையான வெயில். சிறையிலே உஷ்ணம் தாங்க முடியவில்லை. என்ன செய்வது? மிகவும் துன்புற்றார் ஜவஹர். நான்கு மாத காலம் அவதியுற்றார். அதன் பிறகு? மற்றொரு சிறைக்கு மாற்றியது அரசாங்கம். எங்கே? டேராடூன் சிறைக்கு.

டேராடூன் சென்ற பிறகு ஜவஹரின் உடல் நிலை குணமாயிற்று. மனத்திலே அமைதி ஏற்பட்டது இயற்கையின் வனப்பிலே ஈடுபட்டார். சிறை வாழ்வை மறந்தார்; மன ஆறுதல் பெற்றார்.

விஜயலட்சுமியின் கணவர் ஆர். எஸ். பண்டிட் அலகாபாத் சிறையில் இருந்தார். அவரைக் காணச் சென்றார் ஜவஹரின் தாயார். கமலாவும இந்திராவும் உடன் சென்றனர்.

சிறை வார்டன் என்ன செய்தான்? கண்ணியமற்ற முறையில் நடந்துகொண்டான். அவர்களை அவமதித்தான். மூவரும் வீடு திரும்பினர்.

அரசாங்கம் வார்டனின் செயலை கண்டிக்க வில்லை; மௌனம் சாதித்து அவனுக்கு சாதகமாக இருந்தது.

இச் செய்தி அறிந்தார் டேராடூன் சிறையிலிருந்த ஜவஹர். கோபங் கொண்டார்.

''என்னை எவரும் வந்து காணவேண்டாம்; நான் காணவும் மாட்டேன்'' என்று கூறினார்.

"அன்புடன் என்னைக் காண வந்து இந்த சிறைக் கோட்டான்களிடம் அவமானப்பட வேண்டாம். அதை என்னால் சகிக்கமுடியாது'' என்றார்.

ஒரு மாதமா ? இரண்டு மாதமா ? ஏழு மாத காலம் ! உறவினர் எவரையும் பாராதிருந்த இந்த ஏழு மாத காலமும் ரொம்பக் கஷ்டப்பட்டார் ஜவஹர்.

"அன்பு முகங்களைக் காண முடியவில்லையே !' என்று ஏங்குவார், வருந்துவார். அலகாபாத் சிறையிலே பெற்ற அவமானத்தை எண்ணுவார், மீண்டும் மனத்தை திடப்படுத்திக்கொள்வார்.

சகோதரி விஜயலட்சுமியிடமிருந்து ஒரு கடிதம் வரும் சகோதரி கிருஷ்ணாவிடமிருந்து மற்றொரு கடிதம் வரும்.

கடிதங்களைக் கண்டவுடனே மகிழ்வார் ஜவஹர்; கடிதத்தைக் கையில் எடுப்பார்; திருப்பித் திருப்பிப் பார்ப்பார்; ஆனந்தம் கொள்வார், மீண்டும் வைத்து விடுவார். கண்ணெதிரே சகோதரியைக் காண்பவர் போல் களிப்பெய்துவார். சீக்கிரத்தில் கவரை உடைக்க மாட்டார், கடிதத்தைப் படிக்கமாட்டார்.

ஏன் ? கடிதத்தில் என்ன செய்தி இருக்குமோ ? நல்ல சேதியோ அல்லது துன்பச் சேதியோ ?

"நல்ல செய்தி இருந்தால் மகிழ்ச்சி தான். துன்பச் சேதி இருந்தால்.........இந்த மகிழ்ச்சி போய் விடுமே !

" எனவே அவசரப்பட்டு எதற்காகக் கடிதத்தைப் பிரித்துப் பார்க்க வேண்டும் ?'' இதுவே ஜவஹரின் எண்ணம்.

முப்பத்தி எட்டாம் அத்தியாயம்

# வகுப்பு வாதம்; உண்ணாவிரதம்!

மூன்றாவது வட்டமேஜை மகாநாடு லண்டன் மாநகரிலே கூடியது. பிரிட்டிஷ் அரசாங்கம் தனது செல்லப் பிள்ளைகள் எல்லோரையும் அழைத்துக் கொண்டு சென்றது. செலவு எவருடையது? இந்திய அரசாங்கத்துடையது. யார் அப்பன் வீட்டுப் பணம்? இந்திய மக்களின் வரிப்பணம்.

வட்ட மேஜை மகாநாட்டிலே வகுப்பு வாத வாந்தி எடுத்தார்கள். செல்லப் பிள்ளைகள். 1932-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 17-ந் தேதி பிரிட்டிஷ் பிரதம மந்திரி ராம்சே மாக்டனால்டு என்ன செய்தார்?

வகுப்புத் தீர்ப்பு என்ற சதித் திட்டத்தை வெளியிட்டார். அப்போது மகாத்மா காந்தி எரவாடா சிறையிலே இருந்தார். மாக்டனால்டு தீர்ப்பு கண்டு மனங் கொதித்தார். உடனே ஒரு கடிதம் பிரிட்டிஷ் பிரதம மந்திரிக்கு எழுதினார்.

என்ன கடிதம்?

"வகுப்புத் தீர்ப்பு அநியாயமானது. அதை உடனே வாபஸ் பெற வேண்டும். இன்றேல் சாகும்வரை உண்ணா விரதம் இருப்பேன்."

இது தான் கடிதம். கடிதம் கண்டார் மாக்டனால்டு. பதிலும் எழுதினார்.

"சாகும் வரை உண்ணாவிரதம் இருக்க எண்ணியுள்ள செய்தி கேட்டு வருந்துகிறேன். பிரிட்டிஷ் அரசாங்கம் தனது முடிவை மாற்றல் இயலாது." இதுவே பதில்.

செப்டம்பர் மாதம் 12-ம் தேதி காந்தி — மாக்டனால்டு கடிதங்கள் வெளியிடப்பட்டன.

செய்தி அறிந்தார்கள் நாட்டு மக்கள். பெரிதும் கவலை கொண்டார்கள்,

"வேண்டாம்; வேண்டாம்!" என்று தடுத்தார்கள். பத்திரிகைகளில் அறிக்கை வெளியிட்டார்கள் பெரிய மனிதர்கள்.

எரவாடா சிறையில் காந்திக்கு தந்திகள் வந்து குவிந்தன.

"உண்ணாவிரதமிருக்க வேண்டாம். உயிரை விட வேண்டாம்" என வந்த தந்திகள் தான் எத்தனை, எத்தனை! அசைந்து கொடுத்தாரா காந்தி? இல்லை. சொன்ன சொற்படியே உண்ணாவிரதம் தொடங்கினார்.

செப்டம்பர் மாதப் 20-ந் தேதி செவ்வாய்க்கிழமை. பகல் 11 மணி 30 நிமிடம். எலுமிச்சம்பழ ரசமும் தேனும் அருந்தினார் காந்தி. உண்ணாவிரதம் தொடங்கினார்.

சிறையிலே இருந்த நேரு இச்செய்தி அறிந்தார். திடுக்கிட்டார்;

"உண்ணாவிரதம் இருப்பதாம்; உயிரை விடுவதாம். என்ன இது? எதற்காக இந்த உண்ணாவிரதம்? வகுப்புத் தீர்ப்பு என்ன அவ்வளவு பெரிய விஷயமா? சுயராஜ்யத்திற்கும் இதற்கும் என்ன சம்பந்தம்? என எண்ணினார் ஜவஹர். எனினும் காந்தி மீது அவர் கொண்டிருந்த அன்பு மேலோங்கியது.

"சிந்தை குழப்புகிறதே! என்ன செய்வதென்று எனக்குத் தோன்றவில்லையே! எனது இதய பீடத்திலே அவருக்கு

இடம் கொடுத்தேன்; ஏற்றி வைத்தேன்; போற்றி வந்தேன். பொக்கென ஒரு கணத்திலே எல்லாம் பொடிப் பொடியாகி விட்டனவே! எல்லாம் பாழ்! எல்லாம் பாழ்! சூனியமாக அல்லவோ காட்சி தருகிறது.''

''அவருடைய உருவம் என் கண்முன் தோன்றுகிறதே! தோன்றித் தோன்றி மறைகிறதே! மீண்டும் மீண்டும் தோன்றுகிறதே! மறுபடியும் அவரை நான் சந்திப்பேனா? பேசுவேனா? சிறையை விட்டு வெளி வந்ததும் எவரைப் போய் காண்பேன்? எவரிடம் மனந்திறந்து பேசுவேன்? எவரிடம் யோசனை கேட்பேன்? எனது ஐயப்பாடுகளை எவரிடம் சொல்வேன்? எனது துயரங்களை எவரிடம் சொல்லி ஆற்றுவேன்? நமக்கு ஒளி தந்த தலைவர் போய் விட்டால் என்ன செய்வோம்?''

இவ்வாறு வருந்தினார் ஜவஹர். புலம்பினார். சிந்தை கலங்கினார்.

ஐந்து நாள் வரை மகாத்மாவின் உயிர் ஊசலாடிக் கொண்டிருந்தது. எல்லோரும் கூடிக் கூடிப் பேசினார்கள். ஐந்தாவது நாள் ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டது. பூனா ஒப்பந்தம் என்று அதற்குப் பெயர். அந்த ஒப்பந்தத்தை ராம்சே மாக்டனால்டு ஏற்றார்.

காந்தி தமது உண்ணாவிரதத்தை முடித்துக் கொண்டார் எலுமிச்சப் பழ ரசம் அருந்தினார்.

இந்திய மக்கள் கவலை நீங்கப் பெற்றார்கள். பெருமூச்சு விட்டார்கள்.

முப்பத்தி ஒன்பதாம் அத்தியாயம்

# நாய்க்குட்டியும் நேருவும்

டேராடூன் சிறையில் தனிமையிலே இருந்தார் ஜவஹர். தனிமை மிகவும் கஷ்டமாகத்தான் இருந்தது. இம்முறை சிறை வாசம் அவரை வாட்டியது. பெரிதும் வாட்டியது.

பேச்சுத் துணைக்கு எவருமே இல்லை. எப்போதாவது ஒரு முறை வார்டன் வருவான். இரண்டொரு நிமிடம் பேசிக் கொண்டிருப்பான். போய் விடுவான். அதன் பிறகு? தனிமை, தனிமை, தனிமை!.

வானத்தைக் காண்பார் அதிலே தவழ்ந்து செல்லும் மேகக்கூட்டங்களைக் காண்பார். மரங்கள் மீது கருத்தைச் செலுத்துவார். அவற்றில் அமர்ந்திருக்கும் பறவைகளை நோக்குவார்.

பறவைகள் சுதந்திரமாக கூட்டங் கூட்டமாக பறந்து செல்லும் அழகை சிறையிலிருக்கும் நேரு பார்ப்பார். அவற்றின் பின்னே கண்கள் தாமே தொடரும். வெகு தூரம் பறந்து செல்லும் வரை பார்த்த வண்ணம் இருப்பார்.

ஒரு நாளா? இரண்டு நாளா? பல மாதங்கள் இப்படியே காலம் கடந்தது.

தனிமை இன்பம் தந்ததா? இல்லை துன்பமே தந்து வாட்டி வதைத்தது.

இதற்கும் ஒரு மாற்று வந்தது. நாய் ஒன்று; கவனிப்பார் இன்றி இருந்தது. அதைப் பார்த்தார் ஜவஹர். பேணி வளர்த்தார். குட்டி போட்டது அந்த நாய். மூன்று குட்டிகள் மூன்று குட்டிகளையும் எடுத்து வளர்த்தார்.

ஒரே ஒரு குட்டிக்கு உடம்பு சுகமில்லை. அதை நன்கு கவனித்தார் ஜவஹர். இரவு நேரங்களிலே பலமுறை எழுந்திருப்பார், அந்தக் குட்டி அருகே சென்று கவனிப்பார். குழந்தையைத் தாய் கவனிப்பது போல.

# நாற்பதாம் அத்தியாயம்

## தாய்க்காக....

ஆயிரத்து தொள்ளாயிரத்து முப்பத்தி மூன்றும் ஆண்டு, ஆகஸ்டு மாதம் 20ந் தேதி ஜவஹரை விடுவித்தது அரசாங்கம். ஏன்? ஸ்வரூபராணி நேருவுக்கு உடம்பு சுகமில்லை.

தாயின் சுகவீனம் கேட்டார் ஜவஹர். விரைந்து சென்றார். தாயைக் கண்டார். அருகில் இருந்தார்.

செல்வக் குமரனின் வருகையைக் கண்டார் ஸ்வரூபராணி. மனம் மகிழ்ந்தார். உடல் நிலை சிறிது தேறிற்று; குணமும் தெரிந்தது.

பூனாவுக்குச் சென்றார் ஜவஹர். எதற்காக? காந்தியை காண்பதற்காக. இரண்டு ஆண்டுகளுக்கு முன் பம்பாய் துறைமுகத்தில் அவரை சந்தித்தார், வழியனுப்பினார்,

இந்த இரண்டு ஆண்டுகளில் எவ்வளாவே மறுதல்கள் ஏற்பட்டு விட்டன. இந்தியா முழுவதும் போலீஸ் ஆட்சி நிலவியது. சிறைச் சாலைகளை நிரப்பிக் கொண்டு இருந்தார் வில்லிங்க்டன். அச்சம் உச்சத்தில் இருந்தது. சோர்வு! சோர்வு! எங்கும் ஒரே சோர்வு.

சிறையிலிருந்து வெளிவந்த ஜவஹர் இத்தகைய காட்சியைத் தான் கண்டார்.

இனி என்ன செய்வது? இதுவே கேள்வி. இது பற்றி காந்தியுடன் பேசினார் ஜவஹர். இரண்டு மூன்று நாள் காந்தியுடன் தங்கினார். பிறகு பம்பாய் சென்றார்; நண்பர்களைச் சந்தித்தார், பேசினார். சோஷலிசக் கருத்தை

நாட்டிலே பிரசாரம் செய்ய வேண்டுமென்று கூறினார். அலகாபாத்துக்குத் திரும்பினார். குடும்பக் காரியங்களைக் கவனித்தார்.

மோதிலால் நேரு இருந்த போது ஏராளமாகச் சம்பாதித்தார். செலவு செய்தார், அவர் இறந்த பிறகு? வருமானம் ஏது? செலவுக்கு என்ன செய்வது? அப்பா சம்பாதித்த சொத்தில் இருந்து எடுத்து செலவு செய்தார் ஜவஹர். அது எவ்வளவு நாளைக்கு வரும்? கொஞ்சங் கொஞ்சமாக எல்லாம் கரைந்தன. அப்புறம் என்ன செய்வது? சிக்கனத்தில் கருத்து செலுத்தினார் ஜவஹர். மோதிலால் நேரு இருந்த காலத்திலே எக்காட்சி வழங்கியது ஆனந்தபவனம்? ஆடம்பரக் காட்சியே வழங்கியது. அக்காட்சியைச் சிறிது சிறிதாகக் குறைத்து விட்டார். ஜவஹர்; அறவே ஒழித்து விட்டார்.

செலவு இனங்களைச் சுருக்கினார். வேண்டாத பொருள்களை எல்லாம் விற்றுவிட்டார். கமலாவிடம் ஏராளமான நகைகள் இருந்தன. அவற்றை எல்லாம் விற்று விட எண்ணினார் ஜவஹர்.

"உனது நகைகளை விற்று விட்டால் என்ன?" என்று கேட்டார்.

"எதற்காக விற்க வேண்டும்? இருக்கட்டுமே?" என்றார் கமலா.

"நீ தான் அவற்றை அணிவதில்லை, அப்புறம் எதற்கு?" என்றார் ஜவஹர்.

"குழந்தை இந்திராவுக்கு அணிவேன்" என்றார் கமலா.

"அப்பொழுது பார்த்துக் கொள்ளலாம். இப்பொழுது விற்றுவிடுவோம்" என்றார் ஜவஹர்.

"சரி; உங்கள் விருப்பம் போல செய்யுங்கள்" என்று கூறி விட்டார் கமலா.

நகைகளை எல்லாம் விற்றுவிட்டார் ஜவஹர். இவ்வளவும் எதற்காகச் செய்தார் ?

அன்னை ஸ்வரூபராணி நேருவுக்காக, அரசி போல் வாழ்ந்த அவர் 'பணம் இல்லையே' என்று கவலைப்படக் கூடாது என்பதற்காக, தளாத வயதில் செலவுக்கு சங்கடப் படலாகாது என்பதற்காக.

எல்லாம் தாய்க்காக.

## நாற்பத்தி ஒன்றாம் அத்தியாயம்

# தள்ளு ஜவஹரை சிறையில் !

1934-ம் ஆண்டு.

பிரிட்டிஷ் அரசாங்கம் சும்மா இருக்குமா? எப்படி இருக்கும் ? ஜவஹரைக் கண்காணித்துக் கொண்டே இருந்தது. மறுபடியும் சிறையில் தள்ளுவதற்கான சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் கொண்டே இருந்தது.

இது ஜவஹருக்கும் தெரியும். எனவே அவர் என்ன செய்தார் ? கவனிக்க வேண்டிய காரியங்களை எல்லாம் விரைவாக கவனித்தார். கல்கத்தா சென்று கமலாவின் உடல்நிலை பற்றி டாக்டர்களிடம் ஆலோசிக்க எண்ணினார். கல்கத்தாவுக்குச் சென்றார். மூன்று நாள் அங்கே தங்கினார், வைத்தியர்களைக் கலந்து ஆலோசித்தார் ; நண்பர்களைக் கண்டு பேசினார் ; பொதுக்கூட்டங்களில் பேசினார். புறப்பட்டார் அலகாபாத்துக்கு.

பீகாரிலே பூகம்பம். இயற்கையின் சீற்றம்; உயிர்கள் நாசம். பொருள் நாசம். வீடுகள் நாசம். லட்சக் கணக்கான மக்கள் துன்புற்றார்கள்.

பீகாருக்கு ஓடினார் ஜவஹர். நாசமடைந்த பகுதிகளுக்குச் சென்றார். துன்புற்ற மக்களைக் கண்டார், ஆறுதல் கூறினார். கண்ணீர் விட்டுக் கலங்கிய மக்களை கண்டார். கண்ணீர் துடைத்தார்.

பத்திரிகைகளில் அறிக்கை வெளியிட்டார். சர்க்காரின் செயலின்மை கண்டித்தார். பொது மக்களிடம் உதவி வேண்டினார்.

இனியும் சர்க்கார் சும்மா இருக்குமா? செயல் ஆற்றத் தொடங்கியது.

"ரொம்பவும் அபாயகரமானவர் இவர். இவரை வெளியே விட்டிருப்பது நல்லது அல்ல. உடனே சிறைக்குள் தள்ள வேண்டும். கல்கத்தாவிலே இவர் செய்த பிரசங்கத்தை ஒரு காரணமாகக் கொண்டு வழக்குத் தொடருவது நல்லது."

இவ்வாறு யோசனை கூறியது டில்லி அரசாங்கம், ஐக்கிய மாகாண அரசாங்கத்திற்கு. அப்புறம் கேட்கவா வேண்டும்? துள்ளி குதித்தது ஐக்கிய மாகாண அரசாங்கம். ஜவஹரை கைது செய்ய உத்தரவு பிறப்பித்தது.

பிப்ரவரி மாதம் 12ம் தேதி மாலை நேரம். ஜவஹரும் கமலாவும் தேநீர் அருந்தி விட்டு வாசல்புறத்தே நின்று கொண்டிருந்தார்கள், அப்பொழுது உள்ளே வந்தது போலீஸ் வண்டி.

வண்டியிலிருந்து இறங்கினார் இன்ஸ்பெக்டர்.

"வாருங்கள்! உங்களைத் தான் ரொம்ப நாளாக எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன்" என்றார் ஜவஹர்.

கமலா உள்ளே சென்றார், ஜவஹருக்கு வேண்டிய சாமான்களைத் தயாராக எடுத்து வைப்பதற்காக. சிறிது நேரத்தில் ஜவஹரும் உள்ளே சென்றார். ஜவஹரைக் கண்டதும் கமலா என்ன செய்தார்? கட்டிக் கொண்டார்; மயங்கி விழுந்தார்.

கமலாவைத் தூக்கினார் ஜவஹர். மயக்கம் தெளிவித்தார். ஆறுதல் கூறினார். விடைபெற்றார். புறப்பட்டார்.

ஜவஹரை ஏற்றிக்கொண்டு சென்றது போலீஸ் வேன்.

## நாற்பத்தி இரண்டாம் அத்தியாயம்

# இருண்ட சூழ்நிலை இடையே சிறு ஒளி

அலிப்பூர் சிறையிலே ஓர் அறை. நீளம் பத்து அடி, அகலம் ஒன்பது அடி. இந்த அறையிலே இருந்தார் ஜவஹர். தெருவிலே ஓடும் டிராம் வண்டிகளின் சப்தம் வந்து காதிலே விழும். தேநீர்க் கடைகளிலே ஒலமிடும் கிராமப்போன் சங்கீதம் வந்து காதைத் துளைக்கும். தெருவிலே போவாரும் வருவாரும் சள சள என்று பேசும் குரல் சிறிது கேட்கும்.

இவ்வளவும் போதாவென்று மற்றொன்றும் சூழும். அது என்ன? புகை, புகை, அடுப்பங்கரை புகை.

சிறைச்சாலைச் சமையல் அறையின் புகைப் போக்கி அருகே இருந்தது. அதனின்று எழும் புகை ஜவஹரின் அறைக்குள் வந்து சூழ்ந்துக் கொள்ளும். மூச்சுத் திணறச் செய்யும். நாள் முழுவதும் தொந்தரவு கொடுக்கும். தொந்தரவு! ஓயாத தொந்தரவு ! அப்பா ! அப்பா ! ரொம்பவும் சங்கடப்பட்டார் ஜவஹர்.

அறையை விட்டு வெளியே வர முடியுமா ? முடியாது. கை கால்களை வீசி நடக்க முடியுமா ? முடியாது. ஏன் ? அதற்கு அதிகாரிகள் அனுமதி தரவில்லையே !

எனவே நாள் முழுவதும் அந்த அறைக்குள்ளே அடைப்பட்டு கிடந்தார் ஜவஹர்.

மிருகக் காட்சி சாலையிலே இரும்பு கம்பிகள் போடப்பட்ட கூண்டுக்குள்ளே அடைக்கப்பட்டு அங்கும் இங்கும் சுற்றிவரும் கரடியை எண்ணிப் பார்த்தார் ஜவஹர். தம்மை அதனுடன் ஒப்பிட்டு பார்த்தார்: நகைத்தார்.

சிறைச்சாலை மதில்களின் பொந்து ஒன்றிலே கூடுகட்டி இருந்தது குருவி ஒன்று ; முட்டையிட்டது; குஞ்சு பொரித்தது தாய்க் குருவியையும் குஞ்சுகளையும் நோக்குவார் ஜவஹர். நீண்ட நேரம் கவனிப்பார் ; குஞ்சுகளிடம் சிந்தை பறி கொடுப்பார். தம்மை மறந்திருப்பார்.

இருண்ட சூழ்நிலையிலே இது ஒரு சிறிய ஒளியாக அமைந்தது.

இப்படியாக ஜவஹரின் சிறை வாழ்க்கை நத்தை போல் ஊர்ந்து சென்று கொண்டிருந்தது.

ஆனால் அதே சமயத்திலே சிறைச் சாலைக்கு வெளியே என்ன நடந்தது ? மாறுதல், மாறுதல், புரட்சிகரமான மாறுதல் !

நாற்பத்தி மூன்றாம் அத்தியாயம்

# சர்வதேச அரங்கும் தேசிய நிலையும்

சர்வதேச அரங்கிலே பெரிய, பெரிய மாறுதல்கள் தோன்றின.

1933ஆம் ஆண்டு, ஜனவரி மாதம் முப்பதாம் தேதி ஜெர்மன் குடியரசின் முதல்வர் ஆனார் ஹிட்லர் சர்வாதிகாரம் வலுத்தது.

ஆஸ்திரியாவிலே ஜனநாயகம் குழி தோண்டி புதைக்கப் பட்டது. சர்வாதிகாரி டால்ப்ஸ் தலை விரித்து ஆடினார். வியன்னா நகரிலே தொழிலாளர் குடியிருப்பின் மீது குண்டு மாரி பொழிந்தார். ஆடவர், பெண்டிர், சிறுவர் என்ற வேற்றுமையின்றி ஆயிரம் பேரைக் கொன்று குவித்தார்.

ஸ்பெயினிலே அதிகார வேட்டை நடந்துக் கொண்டு இருந்தது.

மஞ்சூரியாவின் மீது படை எடுத்தது ஜப்பான். சர்வதேச கண்டனங்களை எல்லாம் குப்பைத் தொட்டியில் போட்டது.

ஜினிவாவிலே சர்வதேச ஆயுத ஒழிப்பு மகாநாடு நடை பெற்றது. அம்மகாநாட்டை முறியடித்தார் ஹிட்லர். ஜெர்மன் பிரதிநிதிகள் மகாநாட்டை பகிஷ்கரித்தார்கள்; வெளியே சென்றார்கள்.

பொருளாதார மந்தம்; வேலையில்லாத் திண்டாட்டம் ஆகிய இரண்டு பூதங்களும் அமெரிக்காவைக் கவ்விக் கொண்டன; அச்சுறுத்தின.

ஐரோப்பிய வானிலே போர் மேகங்கள் இடித்தன; முழங்கின; மின்னல்கள் தெறித்தன; குழப்பமும் பீதியும் மக்களைக் கவ்விக் கொண்டன.

இதே சமயம் தேசீய நிலை எப்படி ?

நேருவைப் பின்பற்றி பீகாருச்குச் சென்றார் காந்தி. பூகம்பத்தால் சேதமுற்ற பகுதிகளை எல்லாம் பார்த்தார். சர்க்காருடன் ஒத்துழைத்து நிவாரண வேலைகளைச் செய்யுமாறு காங்கிரஸ்காரர்களுக்குக் கூறினார்.

டில்லியிலே டாக்டர் அன்சாரி தலைமையிலே பூலபாய் தேசாய் போன்ற காங்கிரஸ்காரர்கள் கூடினார்கள்; சட்ட சபைக்குள் செல்ல வேண்டும் என்று பேசினார்கள். 1934-ம் ஆண்டு நவம்பர் மாதத்திலே மத்திய சட்டசபைத் தேர்தல் நடைபெற இருந்தது. அதிலே போட்டியிட வேண்டும் என்றார்கள்.

இக்கருத்துக்கு மகாத்மாவின் ஆசி பெற வேண்டி பீகாருக்குச் சென்றார்கள். காந்தியுடன் பேசினார்கள். ஏப்ரல் மாதம் 7-ம் தேதி ஓர் அறிக்கை வெளியிட்டார் காந்தி. என்ன அறிக்கை? சத்தியாக்கிரகம் நிறுத்தப்பட்டது என்ற அறிக்கை.

சிறையிலே இருந்த ஜவஹர் இவற்றை எல்லாம் அறிந்தார். மனம் வருந்தினார்; துன்புற்றார்; சோர்வு அடைந்தார்.

## நாற்பத்தி நான்காம் அத்தியாயம்

# நடப்பும் கனவும்

சத்தியாக்கிரகம் நிறுத்தப்பட்டதாக காந்தி அறிவித்த உடனே என்ன நிகழ்ந்தது? சர்க்காரும் தனது கெடுபிடியைச் சிறிது தளர்த்தியது.

காங்கிரஸ் ஸ்தாபனத்தின் மீது விக்திகப்பட்ட தடையை வாபஸ் பெற்றது. எல்லா மாகாணங்களிலும் அல்ல; சில மகாணங்களில் தான். எல்லைப்புற மாகாணத்தில் தடை நீக்கப்படவில்லை. கொஞ்சம் கொஞ்சமாக சிறைக் கதவுகள் திறக்கப்பட்டன. காங்கிரஸ் தலைவர்கள் வெளியே வந்தார்கள்; தொண்டர்களும் வெளியே வந்தார்கள். ஆனால் எல்லைப்புற மாகாணத்தில் மட்டும் நிலைமை வேறு. கான் சகோதரர்கள் விடுதலை பெறவில்லை. செஞ்சட்டை ஸ்தாபனத்தின் மீதிருந்த தடை நீக்கப் படவில்லை. இது குறித்து அரசாங்கத்தைப் பாராட்டினார் இந்து மகாசபைத் தலைவர் ஒருவர்.

சிறையிலே இருந்த ஜவஹர் இதை அறிந்தார். சீறினார். வகுப்பு வாதம் நாட்டை அரித்துத் தின்பது கண்டு வருந்தினார்; கலங்கினார்; துன்புற்றார்.

ஒரு நாள் இரவு தூங்கும் போது கனவு கண்டார். எல்லைப்புற காந்தி அப்துல் கபார்கான் தாக்கப்படுதல் போலவும் தாம் அவரைப் பாதுகாக்கப் போரிடுவது போலவும் கனவு.

விழித்தார் ஜவஹர்; எழுந்தார்; அவரது தலையணை கண்ணீரால் நனைக்கப்பட்டிருந்தது கண்டார்.

மற்ெருரு நாள். இன்னொரு கனவு.

பலர் சூழ்ந்துகொண்டு அவரை அமுக்கிக் கொலை முயற்சி செய்வது போல் கனவு கண்டார்; கூச்சலிட்டார்.

கூச்சல் கேட்டார்கள் வார்டர்கள். ஓடிவந்தார்கள்; விசாரித்தார்கள்.

இவ்விதம் அடிக்கடி கனவு கண்டார் ஜவஹர்.

வைத்திய சிகிச்சைக்காக கல்கத்தா வந்திருந்தார் கமலா சிறைக்குச் சென்றார்; ஜவஹரைக் கண்டார்; பேசினார்.

கமலாவின் வருகை நேருவின் சோர்வைப் போக்கியது. சிறிது உற்சாகமாக இருந்தார் ஜவஹர்,

வெயில் காலம் வந்தது. சிறையிலே உஷ்ணம் தாங்க முடியவில்லை. மிகவும் அவதியுற்றார் நேரு.

மே மாதத்திலே ஒரு நாள்; காலையில் சிறை அதிகாரி வந்தார். "புறப்படுங்கள்" என்றார்.

"எங்கே?" என்று கேட்டார் ஜவஹர்.

"வேறு சிறைக்கு" என்ற பதில் வந்தது.

மகிழ்ச்சியுற்றார் ஜவஹர்

"இந்த வெம்மை நரகம் அலிப்பூர் சிறையிலிருந்து மாறுகிறோம்" என்பது பற்றி மகிழ்ச்சி.

"எங்கு கொண்டு போகிறீர்கள்?"

"டேராடூன்" என்ற பதில் வந்தது. மிக்க மகிழ்ச்சியுற்றார் நேரு. ஏன்? டேராடூன் மிகவும் குளிர்ந்த இடம். இயற்கைக் காட்சிகள் மலிந்த இடம். மனோரம்யமான இடம். மொத்தத்தில் ஜவஹருக்கு பிடித்தமான இடம்.

ஒன்பது மாதங்களுக்கு முன்பு இதே டேராடூன் சிறையில் இருந்தார் ஜவஹர். ஆனால் இப்போது மாறுதல். என்ன மாறுதல்?

தொலைவிலே உள்ள மலைகளும் மரங்களும் மனோரம்யமான காட்சி அளிக்கும். சிறையில் இருந்தபடியே அக்காட்சி கண்டு மனம் மகிழ்வார் ஜவஹர். அக்காட்சி இப்போது மறைக்கப்பட்டு விட்டது. பதினைந்து அடி உயரத்திற்கு சுவர் எழுப்பி விட்டார்கள் அதிகாரிகள். இயற்கைக் காட்சிகள் கண்டு இன்புற இயலாதபடி செய்து விட்டார்கள்.

மாட்டுத் தொழுவம் ஒன்று. அதை ஒட்டிய சிறு வராந்தா ஒன்று. அப்பால் ஒரு முற்றம். ஐம்பது அடி நீளம் இருக்கும்.

அந்த மாட்டுத் தொழுவத்திலே தான் ஜவஹர் சிறை வைக்கப்பட்டிருந்தார். இந்த இடத்தை விட்டு அப்பால் செல்ல அவருக்கு அனுமதி கிடையாது. இந்த முற்றத்திலே சில செடிகளை நட்டார் ஜவஹர். தண்ணீர் ஊற்றினார்; வளர்த்தார். அந்தப் பசுமையில் இன்பம் கண்டார்.

1934-ம் ஆண்டு ஜூன் மாதம், சிறையிலே தமது சுய சரிதத்தை எழுதத் தொடங்கினார் நேரு.

ஆகஸ்டு மாதம் 11ந் தேதி இரவு சிறை அதிகாரி வந்தார்.

"புறப்படுங்கள், அலகாபாத்துக்கு" என்றார்.

போலீஸ் பாதுகாவலுடன் புறப்பட்டது வண்டி அலகாபாத்துக்கு.

"உங்கள் மனைவிக்கு உடம்பு சுகமில்லை எனவே நீங்கள் சென்று பாருங்கள்; அருகில் இருங்கள். பதினொரு நாட்கள் இருக்கலாம். பன்னிரண்டாம் நாள் மீண்டும் சிறைக்கு வந்துவிட வேண்டும்" என்று கூறினார்கள் அதிகாரிகள்.

ஜவஹருக்கு விடுதலை அளித்தார்கள். பதினொரு நாள் விடுதலை.

## நாற்பத்தி ஐந்தாம் அத்தியாயம்

# தாயும் தாரமும்

ஆனந்த பவனத்துக்கு விரைந்து சென்றார் ஜவஹர். பவனம் எக்காட்சி வழங்கியது? துன்பக் காட்சி வழங்கியது.

அரண்மனை போன்ற அம்மாளிகையின் ஓர் அறையிலே படுத்தவண்ணம் இருந்தார் ஸ்வரூபராணி நேரு; மோதிலால் நேருவின் மனைவி; ஜவஹரின் தாய். முதுமையும் பிணியும் அவரை வாட்டின. கவலையும் ஏக்கமும் அவர்தம் உள்ளத்தை அரித்தன; எரித்தன.

மற்றோர் அறையிலே படுத்திருந்தார் கமலா நேரு. நோய் அவரது உடலை அரித்து தின்றுவிட்டது. துரும்பு போல் இருந்தார்.

தாயைக் கண்டார் ஜவஹர்; தாரத்தையும் கண்டார்.

ஜவஹரின் வருகை இருவருக்கும் சிறந்த மருந்தாயிற்று. கமலா நேருவின் உடல் நிலை சிறிது குணம் கண்டது. அம்மாதிரியே ஸ்வரூபராணியும் சிறிது மகிழ்ச்சியுடன் விளங்கினார்.

பதினொரு நாட்கள் உருண்டோடி விட்டன. போலீஸ் 'வான்' வந்துவிட்டது ஜவஹரை அழைத்துச் செல்ல.

போலீஸின் வருகை கண்டார் ஜவஹர். தமது சாமான்களை எல்லாம் எடுத்துக் கொண்டார்; எல்லாரிடமும் விடை பெற்றுக் கொண்டார்; போலீஸ் 'வானில்' புறப்பட்டார்.

செல்வக் குமரனைப் பிரிய மனமின்றி வருந்தினார் ஸ்வரூபராணி. படுக்கையை விட்டு எழுந்து ஓடி வந்தார், மகன் பின்னே.

கண்களில் நீர் ததும்பக் கைகளை அகல விரித்துக் கொண்டு ஓடி வந்தார் அவர். பெற்ற மனம் அல்லவா? அக்காட்சி கண்டார் ஜவஹர்; மனம் துடித்தார்; வாடினார்; வருந்தினார். நீண்ட நேரம் வரை அக்காட்சி அவரது மனத்திரையை விட்டு அகலவில்லை; நின்றுக் கொண்டே இருந்தது.

கமலாவின் உடல் நிலை எப்படி இருக்கிறது என்பது பற்றி தினமும் டாக்டர்கள் அறிக்கை அனுப்பினார்கள். அந்த அறிக்கை ஜவஹரிடம் கொடுக்கப்பட்டது.

இரண்டு வாரம் தான் இவ்வாறு நடைபெற்றது. பிறகு அறிக்கை கொடுப்பது நிறுத்தப்பட்டுவிட்டது.

கமலாவின் உடல்நிலை குணமாகிவிட்டதா? இல்லை மோசமாகிக் கொண்டுதான் இருந்தது. எனினும் அரசாங்கம் அறிக்கை கொடுக்க விரும்பவில்லை. எனவே அறிக்கை கொடுப்பதை நிறுத்தி விட்டது. அறிக்கை வராது போகவே கவலை அதிகமாயிற்று ஜவஹருக்கு. என்னவோ, ஏதோ என்று கலங்கினார்; ஏங்கினார்.

"ஏன் இவ்வாறு கலங்கவேண்டும்? நோய்வாய்ப்பட்டு இருக்கும் மனைவியைப் பிரிந்து தவிக்கவேண்டும்? ஒரு

வார்த்தை வாய் திறந்து சொன்னால் போதுமே! உடனே அரசாங்கம் விடுதலை செய்து விடுமே'' என்றனர் சிலர்.

அது என்ன உறுதி மொழி? அரசியலில் ஈடுபடுவது இல்லை என்ற உறுதி மொழி அளித்தால், ஜவஹரை விட்டு விடலாம் என்பது அரசாங்கத்தின் எண்ணம். அதை மறை முகமாக அறிவித்தது ஜவஹருக்கு.

ஜவஹர் உறுதிமொழி கொடுத்தாரா? இல்லை, இல்லை. "எதுவரினும் வருக; உறுதி மொழி கொடுப்பதில்லை" என்று தீர்மானித்தார். உறுதியாக நின்றார்.

ஒரு மாதம் சென்றது. அக்டோபர் மாதத்திலே ஒரு நாள். கமலாவைப் பார்த்து விட்டு வருவதற்காக ஜவஹரை அழைத்துச் சென்றார்கள் சிறை அதிகாரிகள்.

திரும்பி வரும்போது ஜவஹரின் காதருகே ஏதோ இரகசியமாகக் கூறினார் கமலா.

என்ன அது?

"உறுதி மொழி எதுவும் கொடுத்துவிடாதீர்கள்."

வீரத் தலைவனின் வீர மனைவி கூறிய வீர வாசகம் இதுவே.

எந்த சமயத்திலே?

உயிருக்கு மன்றாடும் நேரத்திலே — பிணியுடன் போராடும் சமயத்திலே — வீராங்கனையின் வாயிலிருந்து வெளிப்பட்ட தைரியம் மிக்க சொற்கள்.

## நாற்பத்தி ஆறாம் அத்தியாயம்

# என்ன கூறுவது ? எப்படி கூறமுடியும் ?

பதினொரு நாள் விடுதலை பெற்று ஜவஹர் வந்த செய்தி எங்கும் பரவியது. ஜவஹரின் நண்பர் பலர் இச் செய்தி அறிந்தனர்; ஓடோடி வந்தனர். ஜவஹரைக் கண்டனர்; மகிழ்ந்தனர்; பேசினர், பல்வேறு விஷயங்கள் பற்றிப் பேசினர். இடைக் காலத்திலே நிகழ்ந்த அரசியல் சம்பவங்கள் பலவற்றை அறிவித்தனர். அவை பற்றி அபிப்பிராயம் கூறுமாறு ஜவஹரைக் கேட்டனர். ஜவஹர் அபிப்பிராயம் கூறினாரா ? இல்லை. ஏன் ?

காங்கிரஸ் காரியக் கமிட்டி அங்கத்தினரை அவர் பார்க்க இயலவில்லை. அரசியல் விஷயங்கள் பற்றி அவர்களுடன் பேசவில்லை. முழு விபரங்களையும் அறியவில்லை. நாட்டு நடப்பு என்ன என்று அறியவில்லை

இப்படி இருக்கும்போது திடீரென்று அபிப்பிராயம் சொல்வது சரியாகாது.

அவரது சிறைவாசத்தின் போது நிகழ்ந்த செயல்கள் பல பற்றி மாறுபட்ட கருத்துக் கொண்டிருந்தார் அவர். அது பற்றி இதர தலைவர்களுடன் பேச வேண்டும். பேசாமல் திடீரென்று எதுவும் சொல்லிவிடக் கூடாது. அது மாத்திரமல்ல. சிறிது மனிதாபிமானத்துடன் நடந்து கொண்டிருக்கிறது சர்க்கார். நோய்வாய்ப்பட்டு அவதியுறும் கமலாவைக் காண அனுமதி அளித்திருக்கிறது. இந்த சந்தர்ப்பத்தை அரசியலுக்கு பயன்படுத்த எண்ணவில்லை

ஜவஹர். பெருந் தன்மையுடன் நடந்துகொள்ள விரும்பினார். எனவே அரசியல் சம்பந்தமாக எந்த விதமான அபிப்பிராயமும் கூறவில்லை, அறிக்கைகளும் வெளியிடவில்லை. ஆனால் ஒரு கடிதம் மட்டும் எழுதினார் காந்தி.

"செய்தி கேட்டேன் சிறையிலே. என்ன செய்தி? போரை நிறுத்திவிட்ட செய்தி. மிக வருந்தினேன். சில நாட்கள் சென்றன. தாங்கள் வெளியிட்ட அறிக்கையைக் கண்டேன்; திடுக்கிட்டேன். அதிர்ச்சியடைந்தேன்; என்றுமே அடையாத ஓர் அதிர்ச்சி. ஏன்? போர் நிறுத்தத்துக்குத் தாங்கள் கூறிய காரணங்கள். அவை என்னை கலக்கின குலுக்கின; வாட்டின; வருத்தின. துக்கம் தொண்டையை அடைத்தது. ஏதோ ஒன்று உடைந்துவிட்டது போல் எண்ணினேன். பல காலமாக பேணிப் போற்றி வந்த ஒன்று திடீரென்று வெட்டி எறியப்பட்டது போல உணர்ந்தேன்; நம்மை இணைத்திருந்த பாசபந்தம் துண்டித்து வீசப்பட்டது போல துடித்தேன். தனிமையில் நிற்பது போல் தவித்தேன். தனிமை, தனிமை! பாலைவனத்திடையே சிக்கித் தவிப்பது போன்ற தனிமை. தனிமை என்பது எனக்கு இன்று நேற்று ஏற்பட்டதல்ல. சிறு வயது முதலே தொடர்ந்து வருவதாகும். இடையிலே அதன் சுமை சிறிது குறைந்திருந்தது. இப்போது மீண்டும் அதிகமாகிவிட்டது, இவற்றை யெல்லாம் ஒருவாறு சமாளித்துக் கொண்டேன்; சிறிது தேறினேன். மீண்டும் மீண்டும் புதிய தாக்குதல்கள். பத்திரிகைகளையே பாராது இருந்து விட்டால் நல்லது என்று தோன்றியது ....."

இவ்வாறு எழுதினார் ஜவஹர். காங்கிரஸ் காரியக் கமிட்டித் தலைவர்களுக்கும் தமக்கும் உள்ள கருத்து வேற்றுமை பற்றியும் குறிப்பிட்டார். வேற்றுமை எது பற்றி சோஷலிஸம் பற்றி.

சுயராஜ்ய பவனத்தின் ஒரு பகுதியை வாடகைக்கு விட எண்ணியது காங்கிரஸ். இதை அறிந்தார் ஜவஹர்

கோபம் கொண்டார். காந்திக்கு எழுதிய கடிதத்திலே இது பற்றியும் குறிப்பிட்டார்.

"எனது தந்தையின் விருப்பத்துக்கு மாறாக நடப்பது என்னை வருத்துகிறது. சுயராஜ்ய பவனம் அவரது நினைவுச் சின்னமாகும். மிகப் புனிதமானது அது என்று கருதுகிறேன். நூறு ரூபாய் பெரிதா? அவரது நினைவு பெரிதா?"

கடிதம் கண்டார் காந்தி. ஜவஹருக்கு ஆறுதல் கூறும் முறையிலே மிக அழகானதொரு கடிதம் வரைந்தார். அந்தக் கடிதம் கிடைத்தது ஜவஹருக்கு. போலீஸ் 'வானும்' வந்தது, அவரை அழைத்துச் செல்வதற்கு, இப்படியாக பத்து நாள் விடுதலைக்குப் பின் சிறை புகுந்தார் ஜவஹர்.

## நாற்பத்தி ஏழாம் அத்தியாயம்

# பம்பாய் காங்கிரஸ் மகாநாடு

1934 ஆண்டு அக்டோபர் மாதம், காங்கிரஸ் மகாசபை பம்பாய் நகரிலே கூடியது. பாபு இராஜேந்திர பிரசாத் தலைமை வகித்தார். மகாத்மா காந்தி காங்கிரஸிலிருந்து விலகினார்.

நவம்பர் மாதத்திலே மத்திய சட்டசபைத் தேர்தல் நடைபெற்றது. இந்த தேர்தலில் காங்கிரஸ் போட்டியிட்டது. 44 ஸ்தாபனங்களைக் கைப்பற்றியது. மாளவியா கோஷ்டியினர் 11 ஸ்தாபனங்களைக் கைப்பற்றினர்.

இந்த சமயத்திலே வெளியே இருக்க விரும்பினார் ஜவஹர். அரசாங்கம் தம்மை விடுவிக்கும் என்று

எண்ணினார். ஆனால் அரசாங்கம் என்ன கருதியது ? வேறு விதமாகக் கருதியது.

“தொடக்கத்திலேயே காங்கிரஸுக்குப் பெருமித வெற்றி கிடைக்குமானால் அது மிகுந்த அபாயத்தை விளைவிக்கும். காங்கிரசுக்கு பலம் பெருகாமல் செய்வதே நமது கொள்கை. அதனால் இந்த சமாதானப் பிரியர்களின் பேச்சுக்கு இணங்கி விடலாகாது. காங்கிரஸ்கார்களை நமது எதிரிகளாகவே கருத வேண்டும். எனவே சிறிது எட்டவைத்துக் கொள்வதே நல்லது. அதே சமயத்தில் காங்கிரஸ் எதிரிகளை நாம் ஆதரிக்க வேண்டும்”

இவ்வாறு இரகசிய சுற்றறிக்கை அனுப்பியது டில்லி அரசாங்கம். அரசாங்கத்தின் கருத்து இப்படி இருக்கும் போது ஜவஹரை விடுவித்தால் என்ன நிகழும் ? காங்கிரசுக்கு பெரும் வெற்றியல்லவா ஏற்பட்டுவிடும் ? எனவே ஜவஹரை அரசாங்கம் விடுவிக்கவில்லை. இதற்கு அறிகுறியாக இரண்டு சம்பவங்கள் நடந்தன.

சுபாஷ் போஸின் தந்தை எமனுடன் போராடிக் கொண்டிருந்தார். வெளி நாட்டிலிருந்த சுபாஷ் தந்தை அருகில் இருக்க விரும்பினார் ; தாய் நாடு திரும்பினார். பம்பாய் துறைமுகத்திலேயே அவரைக் கைது செய்துவிட்டது அரசாங்கம். எல்லைப்புற காந்தி அப்துல் கபார் கானையும் கைது செய்து சிறையில் தள்ளிவிட்டது.

## நாற்பத்தி எட்டாம் அத்தியாயம்

# சிறை மாற்றம் !

போபாலி என்பது ஒரு மலை வாசஸ்தலம். அங்கே உள்ள ஆரோக்கிய விடுதி ஒன்றிலே சிலகாலம் தங்கினால் கமலாவின் உடல்நிலை சிறிது குணமாகலாம் என்று கருதினர் டாக்டர்கள். எனவே போபாலிக்குச் சென்றார் கமலா.

ஜவஹரை விடுவிக்க வேண்டும் என்ற கிளர்ச்சி நாட்டிலே வலுத்தது. மகாகவி தாகூரும், ஸர் தேஜ்பகதூர் சப்ரூவும் இக்கிளர்ச்சிக்கு ஆக்கம் தந்தனர். இங்கிலாந்திலே தொழிற் கட்சித் தலைவர்களான அட்லியும் லான்ஸ்பரியும் இந்தியா மந்திரியைக் கண்டனர்: ஜவஹரை விடுவிக்குமாறு வற்புறுத்தினர்.

ஆனால் இந்திய வைசிராய் என்ன சொன்னார்? ஜவஹரை விடுவிக்கக் கூடாது என்று சொன்னார்.

ஜவஹரை விடுவித்தால் சோஷலிஸ்டு இயக்கத்துக்கு பலம் பெருகிவிடும் என்று பூச்சாண்டி காட்டினார் இந்திய வைசிராய். எனினும் நோய்வாய்ப்பட்டிருக்கும் கமலாவை அடிக்கடி சந்திப்பதற்கு ஏற்ற சிறை ஒன்றுக்கு ஜவஹரை மாற்றி விடுவதாகக் கூறினார். அதன்படி அல்மோரா சிறைக்கு மாற்றப்பட்டார் ஜவஹர். அல்மோரா போபாலிக்கு அருகிலிருந்தது.

அல்மோரா சிறையிலே ஒரு கட்டடம்; மிகப் பழைய கட்டடம். மேலே இருந்து 'பொல பொல' என்று மண்ணும் சுண்ணாம்பும் உதிர்ந்துக் கொண்டே இருக்கும். இத்தகைய கட்டடத்திலே ஒரு பெரிய கூடம். சுமார் ஐம்பது அடி நீளம்,

பதினாறு அடி அகலம், பத்து பதினைந்து ஜன்னல்கள். காற்று வீசினாலும் சரி, மழை பெய்தாலும் சரி, பஞ்சம் இல்லாமல் உள்ளே வரும். அதிகமாக வந்து தொந்தரவு கொடுத்தால் என்ன செய்வது ? பாதுகாப்புக்காகத் தட்டிகள் தொங்கும்.

இத்தகைய சிறைக் கூடத்திலே தான் ஜவஹர் இருந்தார். சில சிட்டுக் குருவிகளும் அவருக்குத் துணையாக இருந்தன, கூடு கட்டி வசித்தன.

அங்கிருந்து நோக்கினால் தொலைவிலே இமய மலையின் பனிச் சிகரங்கள் காட்சி தரும். கொஞ்சம் சமீபத்திலே தாழ்வான மலைச் சிகரங்கள் தோற்றமளிக்கும்.

இந்த மலைச் சிகரங்களிடம் மனம் பறி கொடுப்பார் ஜவஹர். ஆவலுடன் அவற்றை நோக்குவார் ; ஆனந்தம் கொள்வார். ஆகாயத்திலே சஞ்சரிக்கும் மேகக் கூட்டங்களை காண்பார்; களிப்பெய்துவார்.

இவ்விதமாக ஒரு மாதகாலம் சென்றது. கமலாவை காண்பதற்காக அழைத்துச் சென்றார்கள் அதிகாரிகள்.

போபாலிக்குச் சென்றார் ஜவஹர். கமலாவைக் கண்டார். நீண்ட நேரம் பேசிக்கொண்டிருந்தார். பிறகு சிறைக்குத் த் ரும்பினார்.

கமலாவின் உடல்நிலை குணமடையவில்லை. நாளுக்கு நாள் மோசமாகிக்கொண்டே வந்தது. எனவே அவரை ஐரோப்பாவுக்கு அனுப்புவது என்று முடிவு செய்தார்கள் டாக்டர்கள். மே மாதத்திலே ஐரோப்பாவுக்குப் புறப்பட்டார் கமலா. அவரை வழியனுப்புவதற்காக ஜவஹரின் அன்னையும் சகோதரி கிருஷ்ணாவும் வந்திருந்தனர். அல்மோரா சிறையிலிருந்து ஜவஹரும் வந்திருந்தார். வருத்தத்தை விழுங்கிவிட்டு உதட்டிலே புன்முறுவலை வரவழைத்துக் கொண்டனர்.

கமலாவை ஏற்றிக்கொண்டு வளைந்து வளைந்து சென்றது கார் அடிவாரத்தை நோக்கி. அதையே கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தார் ஜவஹர், நீண்ட நேரம் நின்றார். பிறகு அன்னையிடமும் சகோதரியிடமும் விடை பெற்றுக் கொண்டார். போலீஸ் வானிலே ஏறினார்.

அப்போது அவருடைய முகம் துக்கத்தினால் களையிழந்து காணப்பட்டது. கண்கள் நீர் சொரியவில்லை. ஆனால் ஏக்கத்தைக் கொட்டின. மெதுவாக நடந்தார்; சோர்வு அவரை ஆட்கொண்டது. திடீரென முதுமை தோற்றமளித்தார் ஜவஹர். கொஞ்ச நேரத்தில் அல்மோரா சிறைக்குள் வந்து சேர்ந்தார் அவர்.

அதன் பிறகு? ......... வேதனை! சொல்லொணாத வேதனை! ஒவ்வொரு நிமிஷமும் வேதனை.

"எப்போது விடுதலை பெறுவோம்" என ஏங்கினார் ஜவஹர்.

ஆயிரத்து தொள்ளாயிரந்து முப்பத்தி ஐந்தாம் ஆண்டு செப்டம்பர் மாதம் நாலாம் தேதி திடீரென சிறைக்கதவுகள் திறக்கப்பட்டன. விடுதலை! விடுதலை! ஜவஹரும் விடுதலை. ஏன்?

ஜெர்மனியிலே பேடன் வீலர் ஆரோக்கிய மாளிகையில் இருந்தார் கமலா. அவருடைய உடல் நிலை மிக மோசமாகி விட்டது. ஆபத்தான கட்டம். இந்நிலையிலாவது மனைவி அருகில் இருக்க வேண்டி ஜவஹரை விடுவித்தது அரசாங்கம்.

ஓடி வந்தார் ஜவஹர், ஆனந்த பவனத்துக்கு. வேண்டிய பொருள்களை எடுத்துக் கொண்டார். கராச்சிக்கு சென்றார். விமானம் ஏறினார். பாக்தாத், கெய்ரோ, அலெக்சாண்ட்ரியா முதலிய நகரங்கள் வழியாக ஜெர்மனி சேர்ந்தார். செப்டம்பர் மாதம் ஒன்பதாம் தேதி மனைவியை சந்தித்தார்.

நாற்பத்தி ஒன்பதாம் அத்தியாயம்

# துணை இழந்த அன்றில் !

ஜவஹரைக் கண்டார் கமலா; முகம் மலர்ந்தார்; மகிழ்ந்தார்; புன்முறுவல் பூத்தார்; வரவேற்றார்.

மனைவியின் அருகில் அமர்ந்தார் ஜவஹர்; ஆறுதலான மொழிகள் கூறினார்; அன்புடன் பேசினார். மனைவியின் நிலை அவரது மனத்தைக் கலக்கியது; குலுக்கியது; வாட்டியது; வருத்தியது.

“இனி நீண்டநாள் உயிர் வாழ மாட்டார் கமலா. எந்த நேரத்திலும் அவர் இறந்து விடல் கூடும்” என்று அறிந்தார்.

“இவ்வளவு நாள் பாரா முகமாய் இருந்து செய்ய வேண்டிய கடமையைச் செய்யாதிருந்து விட்டேனே!” என்று புலம்பினார்.

“தவறு செய்து விட்டேனே” என்று தவித்தார்.

சென்ற காலத்திய தவறுகளுக்காக பிராயச்சித்தம் செய்ய விரும்பினார். பன்மடங்கு அதிகமாக நேசிக்கத் தொடங்கினார்.

பேடன் வீலர் ஆரோக்கிய நிலையத்திற்கு நடந்தே செல்வார் ஜவஹர். மனைவியைக் காண்பார். சிறிது நேரம் பேசிக் கொண்டிருப்பார். பிறகு தமது இருக்கை திரும்புவார். மீண்டும் மாலையில் நடந்து செல்வார். மனைவி அருகில் அமர்ந்திருப்பார். ஏதாவது ஒரு புத்தகத்தைப் படித்துச் சொல்வார். கமலா கேட்பார்.

சென்ற கால சம்பவம் ஏதாவது நினைவுக்கு வரும், அது பற்றி அவ்விருவரும் பேசுவர்; மகிழ்வர்.

இவ்வாறு ஒரு மாத காலம் மனைவி அருகில் இருந்தார் ஜவஹர். கமலாவின் உடல்நிலை சிறிது குணம் கண்டது.

"ஒரு முறை லண்டன் வந்து போகவேண்டும்" என்று வற்புறுத்தினார்கள் நண்பர்கள்.

'சரி,' என்றார் ஜவஹர். லண்டனுக்குப் புறப்பட்டார். அப்போது சுவிட்ஜர்லாந்திலே படித்துக் கொண்டிருந்தார் இந்திரா. தாய் தந்தையரைக் காண்பதற்காக அவரும் வந்திருந்தார்.

அருமை மகளையும் அழைத்துக் கொண்டு லண்டன் சென்றார் ஜவஹர். பத்து பன்னிரண்டு நாள் லண்டனில் தங்கியிருந்தார்; நண்பர் பலரைச் சந்தித்தார். புதிய உணர்ச்சி பெற்றார்; உற்சாகம் கொண்டார். மீண்டும் ஜெர்மனிக்குத் திரும்பினார்.

பனிக்காலம் வந்தது. கிறிஸ்துமஸ் பண்டிகையும் நெருங்கியது. கமலாவின் உடல் நிலை. மறுபடியும் மோசமாயிற்று.

'இனி நான் இங்கிருக்க முடியாது. வேறு ஏதாவது ஒரு ஆரோக்கிய வாசஸ்தலத்துக்குப் போக விரும்புகிறேன். என்றார் கமலா.

கமலாவின் விருப்பப்படியே லாஸேன் என்ற இடத்துக்குச் சென்றார்கள். லாஸேன் என்பது சுவிட்ஜர்லாந்தில் உள்ளது. அங்கு சென்றதும் கமலாவின் உடல்நிலை சிறிது குணமாயிற்று.

"இப்போது ஆபத்து ஏதுமில்லை" என்றார்கள் டாக்டர்கள்.

"அப்படியானால் பாரிசுக்கும் லண்டனுக்கும் போய் வருகிறேன்" என்று கூறிவிட்டுப் புறப்பட்டார் ஜவஹர்.

1936 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்திலே காங்கிரஸ் மகாசபை கூடப்போகிறது. ராஷ்டிரபதி (தலைவர்) ஆகத் தேர்ந்தெடுக்கப்பட்டார் ஜவஹர். இச்செய்தி அவருக்கு அறிவிக்கப்பட்டது.

"இந்தியாவுக்குப் புறப்பட்டு வருக" என்று வற்புறுத்தினார்கள் நண்பர்கள்

"மனைவி அருகில் இருப்பதா? அல்லது இந்தியா செல்வதா ?"

இவ்வாறு யோசித்தார் ஜவஹர். மனைவி அருகில் இருக்க விரும்பினால் பதவியை ராஜிநாமா செய்ய வேண்டும். பதவி வேண்டுமானால் மனைவியை விட்டுச் செல்ல வேண்டும். என்ன செய்வது ? எதைச் செய்வது ? இது தான் கேள்வி.

" இந்தியாவுக்குப் புறப்படுங்கள். ஏப்ரல் மாதத்துக்குப் பிறகு மறுபடியும் என்னைக் காண வரலாம் " என்றார் கமலா.

" சரி " என்றார் ஜவஹர். பிப்ரவரி மாதம் 28-ந் தேதி விமானத்தில் புறப்பட்டு இந்தியா சேர்வது என்று முடிவு செய்யப்பட்டது. விமான டிக்கட்டும் வாங்கப்பட்டுவிட்டது.

ஜவஹரின் உள்ளத்திலே ஏதோ ஒரு வேதனை வாட்டிக் கொண்டிருந்தது.

புறப்படுவதற்கு இன்னும் நான்கே நாட்கள். டாக்டர்கள் ஜவஹரைத் தனியே அழைத்தனர்.

" உங்கள் பிரயாணத் தேதியைத் தள்ளிப் போடுங்கள். இன்னும் பத்து நாட்களுக்குப் பிறகு போகலாம் " என்றனர்.

பிரயாணத் தேதியைத் தள்ளிப் போட்டார்.

பிப்ரவரி மாதம் 28-ந் தேதி விடியற்காலம். கமலாவின் மூச்சு சிறிது சிறிதாக நின்று கொண்டிருந்தது. ஜவஹரும் இந்திராவும் அருகில் இருந்தனர்; கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டே இருந்தனர்.

கமலா காலமானார்.

## ஐம்பதாம் அத்தியாயம்

# அழைப்பும் மறுப்பும்

ஐரோப்பிய வானிலே யுத்த மேகங்கள் உலவின; இடித்தன; முழங்கின; எந்த நேரத்திலும் பெரும் போர் மூளும் என்ற பயத்தை எழுப்பின.

ஜெர்மனியிலே ஹிட்லரின் எழுச்சி! வார்சேல்ஸ் ஒப்பந்தம் காற்றில் பறக்க விடப்பட்டது. போர் முயற்சியில் ஈடுபட்டார் ஹிட்லர்; சங்கநாதம் முழங்கினார்.

இத்தாலியிலே முசோலினி! வாத்து நடை பயின்றார்! போர் முரசு கொட்டினார்! அபிசீனியா மீது பாய்ந்தார்.

ஸ்பெயின் தேசத்திலே குடியரசுக்கு சோதனை; பாசிஸ்டு சக்திகள் ஜனநாயகத்துக்கு எதிராக அணிவகுத்து நின்றன.

ஜினிவாவிலே இருந்த சர்வ தேச சங்கம் குற்றுயிராய் கிடந்தது. எதுவும் செய்ய வல்லமையற்றதாய் விளங்கியது, பாசிஸ்டு வெறியர்களின் ஆட்டகாசத்தைக் கண்டிக்கவும் நடுங்கியது!

இவற்றையெல்லாம் நேரில் கண்டார் ஜவஹர். எந்த நேரத்திலும் யுத்தம் மூளும் என்று உணர்ந்தார். அப்படி யுத்தம் நேரும் ஆனால் அப்போது இந்தியா என்ன செய்யவேண்டும் என்பது பற்றிச் சிந்தித்தார். முடிவும் கண்டார். என்ன முடிவு? முற்போக்கு சக்திகளின் முகாமிலே இருக்கவேண்டும் என்பதே முடிவு.

இந்த முடிவுடன் இந்தியாவுக்குப் புறப்பட்டார் ஜவஹர். வரும் வழியிலே ரோமாபுரியில் இறங்கியது அவருடைய விமானம். அப்போது மாலை நேரம். இத்தாலிய அதிகாரி ஒருவர் வந்தார், நேருவைக் கண்டார். கடிதம் ஒன்றைக் கொடுத்தார். அது ஒரு அழைப்புக் கடிதம். எவரிடமிருந்து? முசோலினியிடம் இருந்து.

கடிதம் கண்டார் ஜவஹர். முசோலினியைக் காண ஓடினாரா? இல்லை, மறுத்து விட்டார்.

சில நாட்கள் முன்புதான் நண்பர் ஒருவர் ஜவஹருக்குக் கடிதம் எழுதினார், முசோலினியை சந்திப்பது நல்லது என்று. பிறகு லாஸேனில் இருந்த இத்தாலிய தூதர் ஒருவர் ஜவஹரைச் சந்தித்தார். முசோலினியைக் காணுமாறு கூறினார்.

“இத்தாலிய சர்வாதிகாரி ஏன் இவ்வாறு வற்புறுத்தி என்னை அழைக்க வேண்டும்?” என யோசித்தார் ஜவஹர். “இதில் ஏதோ சூது இருக்கிறது” என்று கருதினார்.

எனவே மறுத்தார்; முசோலினியின் ஆசை நிறைவேறாமலே போயிற்று. ஜவஹரின் விமானம் இந்தியா நோக்கிப் பறந்தது.

## ஐம்பத்தி ஒன்றாம் அத்தியாயம்

# இந்தியா - நிலைமை

இந்தியாவிலே நிலைமை எப்படி? காங்கிரசில் மிதவாதம் தலைதூக்கி நின்றது; போராட்ட சக்திகள் குறைந்தன. மாகாண சுய ஆட்சியை ஏற்று நடத்த வேண்டும் என்று விரும்பினார்கள் மூத்தவர்கள். போராட்டத்தைத் தொடர்ந்து நடத்த விரும்பினார்கள் இளைஞர்கள்.

"சட்ட சபை மூலமே சுயராஜ்யம்" என்று கூறினார்கள் சட்ட சபைவாதிகள்.

"புரட்சி மூலமே சுயராஜ்யம்" என்று கூறினார்கள் முற்போக்குவாதிகள். சமரசம் வேண்டிய கிழவர்கள் ஒரு பக்கம்; போராட்டம் விரும்பிய இளைஞர்கள் மற்றொரு பக்கம் என இரண்டு முகாம்களாகப் பிரிந்து நின்றது காங்கிரஸ். முற்போக்கு சக்திகளின் மேடையாக விளங்கியது காங்கிரஸ் சோஷலிஸ்டுக் கட்சி. ஜவஹரின் எண்ணத்தை ஓரளவு பிரதிபலித்தது: ஜவஹருக்கு ஆதரவாகவும் நின்றது.

"இந்தியாவின் இன்னல் போக்கும் மருந்து சோஷலிசமே" என்பது ஜவஹரின் கருத்து; ஆனால் காங்கிரஸ் முதியவர்கள் இதை ஏற்கவில்லை.

"காங்கிரஸ் ஸ்தாபனம் சோஷலிஸ்டுக் கட்சியாக விளங்கவேண்டும்" என்று விரும்பினார் ஜவஹர். காங்கிரஸ் முதியவர்கள் இதையும் அனுமதிக்கவில்லை. இடம் கொடுக்கவில்லை.

எனினும் லட்சுமணபுரி காங்கிரசுக்குத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார் ஜவஹர்.

''எந்தக் கொள்கைகளுக்காகவும் லட்சியத்திற்காகவும் நீங்கள் பாடுபடுகிறீர்களோ, அந்தக் கொள்கை, அந்த லட்சியத்திற்காக உங்களைத் தலைவராகத் தேர்ந்தெடுத்து இருக்கிறார்கள்'' என்று கடிதம் எழுதினார் காந்தி ஜவஹருக்கு.

''நம்மிடையே கருத்து வேற்றுமை இருப்பது உண்மை ஆயினும் நமது திட்டத்தில் புரட்சிகரமான மாறுதல், ஏற்படுத்தாதவரை நாம் ஒத்துப் போவது சாத்தியமே!'' என்று எழுதினார் பாபு ராஜேந்திர பிரசாத்.

இவ்விதம் இருக்கும்போது எதற்காக ஜவஹரை ராஷ்டிரபதியாக்க வேண்டும்? காங்கிரஸ் வலது சாரியினரையும் இடது சாரியினரையும் ஒருங்கே அழைத்துச் செல்லும் ஆற்றல் ஜவஹருக்கே உண்டு. எனவே ஜவஹர் ராஷ்டிரபதி ஆனார். காங்கிரஸ் சோஷலிஸ்டுகளின் ஆதரவு ஜவஹருக்கு உண்டு; அதாவது இடது சாரிகளின் ஆதரவு; காந்தியின் ஆதரவும் ஜவஹருக்கு உண்டு. அதனால் வலது சாரிக்காரர்கள் வாயை மூடிக் கொண்டு இருந்தார்கள். எனவே ஜவஹர் ராஷ்டிரபதி (தலைவராக) தேர்ந்தெடுக்கப்பட்டார்.

சோஷலிஸத்திலே நம்பிக்கையும் உறுதியும் கொண்ட ஜவஹர் தம் தலைமை உரையில் காங்கிரஸ் கட்சியில் ஏற்பட்டிருந்த சோர்வை வெகுவாகக் கண்டித்தார்.

கூட்டாட்சி என்ற போர்வையில் ஆங்கில அரசு ஏவ்வாறு இந்நாடு சமஸ்தான மன்னர்களுக்கு அதிகப் படியான இடங்களை ஒதுக்கி, அவர்களை பகடையாக வைத்து காங்கிரஸின் கோரிக்கைகளை தகர்த்தது என்று விளக்கினார். மாகாணங்களில் கவர்னரே அதிக பலம் பொருந்தியவர்; மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மந்திரிகளும் அல்ல; முதன் மந்திரியும் அல்ல. கவர்னர் வேண்டாமென நினைத்தால் சட்டசபைகளைக் கலைக்கலாம்.

இதே போல் தான் மத்திய ஆட்சியிலும் வைசிராய்தான் வலிமையுடையவர். மற்றவர் எல்லாம் கோபுரம் தாங்கும் பொம்மைகளே! ஒரு நாடு அடிமையாகவும் சுதந்திரமாகவும் ஒரே சமயத்தில் இருக்க முடியாது.

இதை தெளிவுபடுத்தினார் ஜவஹர். இதனால் 1935ஆம் ஆண்டு அரசியல் சட்டப்படி நடைபெறும் தேர்தலில் போட்டியிட வேண்டுமென்ற கருத்தை தெரிவித்தார். ஆனால் அவர்கள் பதவி ஏற்கக் கூடாது என்று வற்புறுத்தினார்,

தாம் சோஷலிஸ கருத்துக்களே கொண்டவராயினும், கதர், மற்ற கிராமத் தொழில்களை எதிர்ப்பவரல்ல என்பதற்கு எடுத்துக்காட்டாக அவை நிச்சயமாக ஆக்கம் பெறத்தக்க திட்டங்களும் எடுத்துரைத்தார்.

காங்கிரஸ் கமிட்டியில் நேருவுக்கு ஆதரவு கொடுத்தவர்கள் மூவரே! நரேந்திர தேவர், ஜெய்பிரகாஷ் நாராயண், அச்சுத்பட்டவர்த்தன் ஆகியவரே. சுபாஷ்சந்திர போஸ் அப்போது சிறையில் இருந்தது நேருவின் துர்பாக்கியமே. மற்றவர் எல்லோரும் மூத்த அரசியல் வாதிகள்.

'ஜவஹர் மெல்லமாக செயல்படுவது நல்லது' என்று கூறினார்கள்.

ஜவஹரின் முற்போக்கு நோக்கங்களை மிகவும் எதிர்த்தவர் சர்தார் வல்லபாய் பட்டேல்.

அடுத்து பெய்ஸ்பூர் காங்கிரஸ் மகாநாட்டில் தலைவகிக்க நேருவுக்கு எதிராக போட்டியிட்டார் பட்டேல். ஆனால் காந்தியின் எண்ணப்படி தாம் போட்டியினின்று விலகினாலும், ஜவஹர் திட்டங்களை எதிர்ப்பதோடு நில்லாமல், அறிக்கையும் வெளியிட்டார்.

ஐம்பத்திரண்டாம் அத்தியாயம்

# தேர்தலும் விளைவும்

பிரஜா உரிமைச் சங்கத்தை ஏற்படுத்தினார் நேரு. அதில் கடுமையாக உழைத்தார். அவருடைய நூல் 'சுய சரிதை' வெளியாயிற்று. அது காங்கிரஸிக்கு நல்ல ஆக்கம் கொடுத்தது.

தேர்தலில் வெற்றி பெறும் காங்கிரஸ் கட்சியினர் அரசு பீடத்தில் உள்ளிருந்தபடியே எவ்வாறு ஒவ்வொரு நடவடிக்கையையும் தடுத்து நிறுத்தி வைக்கவேண்டும் என்றும் திட்டம் வகுத்துக் கொடுத்தார்.

தேர்தல் பிரசாரம் மேற்கொண்டார். 1936ஆம் ஏப்ரல் முதல் 1937 பிப்ரவரி வரை இந்தியா முழுவதும் சூறாவளி பிரயாணம் செய்தார். இடைவிடா பிரசாரமும் செய்தார்.

இந்த பயணம் செய்யும்போது பஞ்சாபில் நேருவை விவசாயிகள் கூட்டம் சூழ்ந்துக்கொண்டது. 'பாரத மாதாவுக்கு ஜே" என்று அவரை வரவேற்றனர் 'இதன் அர்த்தம உங்களுக்குத் தெரியுமா?' என்று கேட்டார் நேரு.

ஒருவரும் பதிலுரைக்கவில்லை.

" நீ போற்றி வணங்கும் அந்த மாதா யார்?" என்றார் மீண்டும்.

''அதுவா ? நிலம்!'' என்றார் ஒரு விவசாயி.

"யாருடைய நிலம்? உன் கிராம மண்ணா ? உன் மாகாண மண்ணா ? அல்லது உலக மண்ணா ?''

மீண்டும் மௌனம்.

' நீங்களே இதை எங்களுக்கு விவரித்து சொல்லிக் கொடுங்களேன்'' என்று வேண்டினர் விவசாயிகள்.

பாரத மாதா நம் தாய். அவள் நம் தாய்நாடு. நாமெல்லோரும் அவர்களுடைய பிள்ளைகளும் பெண்களுமே. நீங்கள் 'பாரத மாதாவுக்கு ஜே' என்று கூறி வாழ்த்தும் போது, உங்களை வாழ்த்திக் கொள்கிறீர்கள்'' என்றார்.

இவர் தந்த விளக்கம் அந்த எழுத்தறிவில்லாத விவசாயிகளின் மனத்தில் ஆழப் பதிந்தது.

1937ல் அகில இந்திய காங்கிரஸ் அங்கத்தினர்களும், சட்டசபையில் இருந்த காங்கிரஸ்காரர்களும் ஒரு மகாநாடு கூடினர். அமோக வெற்றி பெற்ற இந்த கட்சியின் அங்கத்தினர், மந்திரிகளாக தேர்ந்தெடுக்கப்பட்டால் எப்படி நடந்து கொள்ளவேண்டும் என்பதை பற்றி விரிவாக எடுததுக் கூறி ஒரு திட்டமும் வகுத்துக் கொடுத்தார் ஜவஹர்.

## ஐம்பத்தி மூன்றாம் அத்தியாயம்

# இழப்புக்கள், ஒன்று, இரண்டா?

முகம்மது அலி ஜின்னா பாரதத்தில் முஸ்லீம்களின் உரிமைக்குரல் ஆனார். எப்படியும் முஸ்லீம்கள் இந்தியாவில் சிறுபான்மையோர், எனவே அவர்கள் தனியே தான் இயங்கவேண்டும் என்று கூறினார். இதற்காக 'முஸ்லீம் லீக்' என்ற கட்சியைத் தோற்றுவித்து, அதன் தலைவரும் ஆனார்.

காங்கிரஸ் கட்சிக்கு இது எதிர் கட்சியாகியது. நேருவின் கொள்கைகளை காங்கிரஸ் கமிட்டி ஏற்க மறுத்த போது, அதை தமக்கு சாதகமாக ஆக்கிக்கொண்டார் ஜின்னா.

இதே 1938 ஆண்டு உலகம் முழுவதும் போர் அச்சம் குடி கொண்டது. சீனாவுக்கும் ஜப்பானுக்கும் தகராறு.

சீனாவின் செயலை ஜவஹரை ஆதரித்தவர் ஆதரித்தனர். அத்துடனா? ஒரு மருத்துவ குழாம் ஒன்றை சீனாவுக்கு அனுப்பியது காங்கிரஸ்.

இதே சமயம் சுபாஸ் போஸ் ஜப்பானுக்கு எதிராக சீனாவுக்கு உதவி செய்தது தவறு; மிக மிகத் தவறு என்று கருதினார். "ஆசியாவிலுள்ள எல்லா நாடுகளும் இந்திய சுதந்திரத்திற்கு ஆதரவு தந்தே தீரும். சிற்சில ஆசிய நாடுகளில் வெவ்வேறு அரசியல் கொள்கை இருந்தாலும் அது அவர்கள் நல்லெண்ணத்தை மாற்றாது. எனவே காங்கிரஸின் செய்கை தவறானதே!" என்று தம் எண்ணத்தை வெளிப்படையாகவே கூறினார் சுபாஷ். இந்த கருத்தை நேரு ஏற்கவில்லை.

காங்கிரஸ் தலைவர் போட்டி வந்தது. காங்கிரஸின் மேலிடம் ஒருவரைத் நிறுத்தியது. அவரை எதிர்த்து, ஏன், காங்கிரஸின் மேலிடத்தையே எதிர்த்து தலைவர் போட்டிக்கு நின்றார் போஸ். திரிபுராவில். பலன் என்ன? போஸ் அமோகமான வெற்றி பெற்றார். இது கண்டு காங்கிரஸ் மேலிடம் சும்மா இருக்குமா? 1939ஆம் ஆண்டு அவர் போக்கு பிடிக்காமல் அவர் மீது நடவடிக்கை எடுத்தது. இன்னும் மூன்று ஆண்டுகளுக்கு அவர் எந்த தேர்தலிலும் நிற்கக் கூடாது என்று தடையும் விதித்தது. இது ஓர் இழப்பு அல்லவா?

நேருவுக்கு மற்றொரு பேரிழப்பும் ஏற்பட்டது. 1938ஆம் ஆண்டு அவர் அன்னை ஸ்ரூபாராணி நோய்வாய்பட்டார். அவருக்கு மூன்றாம் முறையாக பாரிசுவ வாயு நோய் கண்டது. முதல் இரண்டு முறை அவருக்கு இந்த வாத நோய் பாதிப்பு ஏற்பட்டபோது அவரை காப்பாற்றியது அவர் தம் மகன்பால் கொண்ட அன்பே. இம்முறை அது வரம்புக்கோட்டை தாண்டிவிட்டது. ஓரிரவு இந்த நோயின்

கடுமை மிக மிக அதிகரித்தது. நேருவும் அவருடைய இரு சகோதரிகளும் தாயின் பக்கத்திலே இருந்தனர்.

மறு நாள் விடியற்காலை மோதிலால் நேரு மறைந்து ஏழு ஆண்டுகளுக்கு பின், ஸ்வரூபா ராணி தம் கணவரை பின் தொடர்ந்தார்.

"அன்னையும் காலமாகி விட்டார்!" என்று வேதனையோடு முனகினார் நேரு.

o o o o

தேசிய கமிட்டியை நிறுவியது காங்கிரஸ். ஜவஹரே அதன் தலைவரானார்.

ஆனால் - திட்டங்கள் வெறும் திட்டங்களாகவே இருந்தன. செயல் முறையில் வரவில்லை.

காங்கிரஸின் உள்கட்சியிலோ பூசல், பூசல், பூசல்!

இது கண்டு வெதும்பினார் நேரு. ஐரோப்பாவை சுற்றுப் பிரயாணம் செய்யச் சென்றார்.

## ஐம்பத்தி நான்காம் அத்தியாயம்

# 1939

காந்திக்கும் சுபாஷ் போஸுக்கும் ஏற்பட்ட கருத்து வேற்றுமை விசுவரூபமெடுத்தது. இந்த வேற்றுமை தகராறாயிற்று. பிளவு, நடவடிக்கை என பற்பல ஒன்றை யொன்று தொடர்ந்தன.

சுபாஷ் முற்போக்குவாதி. அவர் கருத்துக்கள் முதியவர்களைக் கலக்கின.

சுபாஷ் போஸுக்கும் காந்திக்குமிடையே சமரசம் செய்ய முயன்றார் ஜவஹர்; முடியவில்லை. இரு தரப்பிலும் விட்டு கொடுக்கும் எண்ணம் இல்லை. சமரச பேச்சு முறிந்தது.

சீனாவுக்குச் சென்றார். ஜவஹர் சியாங்கே ஷேக்குடன் நெருங்கிய தொடர்பு கொண்டார்.

இரண்டாம் உலகப் போர் தொடங்கியது. நேரு அப்போது சீனாவில் சுங்கிங்கில் இருந்தார். அங்கிருந்த நாட்களில் ஐந்து முறை ஏர் ரைடு (Air Raid) விமான தாக்குதல் நடந்தது. அதன் விபரீதங்களை கண் கூடாகக் கண்டார் நேரு.

செப்டம்பர் மூன்றாம் தேதி. இரண்டாம் உலகப்போர் மூண்டது.

லார்டு லின்லித்கோ அப்போது இந்தியாவின் வைசிராயாக இருந்தார். இரண்டாவது உலகப் போர் மூண்டவுடன், இந்தியாவும் பிரிட்டனுடன் சேர்ந்து ஜெர்மனியுடன் போர் செய்யும் என்று அறிக்கை விடுத்தார். இந்த அறிக்கையை விடுமுன் இந்தியத் தலைவர்களையும் சட்டசபை அங்கத்தினர்களையும் கலந்தாலோசிக்காமலே இந்தியாவை போரில் ஈடுபடுத்தினார். அறிக்கையில் என்ன கூறினார்? 'ஜனநாயகத்தையும் சுதந்திரத்தையும் காக்கவே இப்போர்' என்றார்.

"யாருடைய சுதந்திரத்திற்காக?" என்ற கேள்வியை எழுப்பினார் நேரு.

இது உலகெங்கும் எதிரொலித்தது.

இந்தியா திரும்பினார் நேரு.

## ஐம்பத்தி ஐந்தாம் அத்தியாயம்

# தனி நபர் சத்தியாகிரகம்

ஆங்கிலேயரின் போக்கு இந்திய மக்களுக்குப் பிடிக்காவிட்டாலும், மனித வர்க்கத்தின் சுதந்திரத்தை அழிக்கும் போரை ஆதரிக்கவில்லை. என்றாலும் இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு, சுதந்திரம் பெற முயற்சி செய்தது காங்கிரஸ்.

காந்தியடிகள் ஏற்கெனவே அரசியலிலிருந்து ஒதுங்கி விட்டார். அன்றைய நடப்புகளை கவனித்தது காங்கிரஸ் காரியக் கமிட்டி.

காரிய கமிட்டி ஒரு சப் கமிட்டியை நியமித்தது. அதில் நேரு, அசாத், படேல் அங்கத்தினர்.

1940ஆம் ஆண்டில் காங்கிரஸ் லின்லித்கோவுடன் சமரசம் பேச ஒப்புக்கொண்டது. அதன்படி வைசிராயும் செப்டம்பர் மாதம் 'மனம் விட்டு பேசி முடிவு செய்ய' நேருவையும், காந்தியையும் மற்ற தலைவர்களையும் அழைத்தது,

நேருவின் வேகம் லின்லித்கோவை தடுமாற செய்தது.

ஜின்னா - இந்திய நாடு வேறு: முஸ்லீம்களின் பகுதி இந்தியாவின் மூன்றில் ஒரு பங்கு: அதுவே பாகிஸ்தான். இந்தியா ஒரு முழுமையான தனி நாடு அல்ல என்று முட்டுக்கட்டை போட்டார்.

பிறகு என்ன ? பேச்சு முறிந்தது.

இராம்கர் என்ற இடத்தில் கூடிய காங்கிரஸ் சட்ட மறுப்பு இயக்கத்தை தொடர்ந்து நடத்துவதென்று தீர்மானித்தது.

அதன்படி ஒவ்வொரு இடத்திலும் இன்ன இன்ன தேதிகளில் நடத்துவது என்று தீர்மானிக்கப்பட்டது.

அதன்படி அக்டோபர் மாதம் 17ந் தேதி, வினோபா பாவே தனி நபர் சத்தியாகிரகத்தைத் தொடங்கினார். வார்தாவுக்கு சிறிது தூரத்தில் ஓர் ஊரில் போர் எதிர்ப்பு பிரசாரம் செய்தார். நான்கு நாட்கள் கழித்து கைது செய்யப்பட்டார்.

ஜவஹர், முறையும் வரவிருந்தது நவம்பர் ஏழாம் தேதியன்று. ஆனால் அக்டோபர் மாதத்தின் கடைசி நாளன்று நேருவை சியோக்கி ரயில் நிலையத்தில் கைது செய்தது. அவர் காந்தியடிகளை அப்போது தான் பார்த்து விட்டு திரும்பிக் கொண்டிருந்தார்.

கோரக்பூரில் அவர் செய்த சொற்பொழிவுகள் அரசுக்கு எதிரானவை என்பதே குற்றச்சாட்டு.

கோரக்பூரில் நடந்த விசாரணையில் நேரு "தனி நபரை அடக்கலாம்: அழிக்கலாம். ஆனால் பாரத மக்களை அழிக்க முடியாது. பாரத சக்தி என்றும் இருக்கும், என்றும் இளமையுடையது ஒரு நாளும் செயலற்று போய்விடாது!" என்று எச்சரித்தார்.

நேரு எட்டாவது முறையாக சிறையிலடைக்கப்பட்டார் நான்காண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட்டார்.

# ஐம்பத்தி ஆறாம் அத்தியாயம்

# 1941உம் 1942உம்

டிசம்பர் மாதத்திலே பேர்ல் துறைமுகத்தைத் தாக்கியது ஜப்பான். இதனால் சம்பந்தபடாமல் இருந்த அமெரிக்கா ஜெர்மனியரின் கூட்டணியை எதிர்த்து போரில் இறங்கியது. எனவே எங்கும் நெருக்கடி, நெருக்கடி, நெருக்கடி.

இந்தியாவிலே நேருவும் இதர காங்கிரஸ் தலைவர்களும் விடுவிக்கப்பட்டார்கள். நேருவுக்கு சிறைவாசம் நான்கு ஆண்டுகளில் இருந்து ஓராண்டு சில மாதங்களாகக் குறைக்கப்பட்டது.

காங்கிரஸ் கமிட்டி கூட்டம் பர்தோலியில் நடந்தது. இங்கும் காந்தியடிகள் அகிம்சையே கடைபிடிக்கவேண்டும் என வற்புறுத்தினார். அகிம்சை இந்திய உள்நாட்டு அரசியலுக்கு மட்டுமே உதவக்கூடியது என்று நேருவுக்கும் அவர்தம் நண்பர்களுக்கும் கருத்து ஏற்பட்டிருந்தது. உலகத்திற்கு இது எப்படி பொருந்தும்? அதுவும் போர் நடக்கும்போது?

காந்தியடிகள் தம் கருத்தை மாற்றிக்கொள்ள தயாராக இல்லை.

இதனிடையே இந்திய தேசீய படைத் தலைவரானார் சுபாஷ். இரங்கூனை ஜப்பானியர் கைப்பற்றினர்.

இந்தியாவுக்கு மார்ஷல் சியாங்கேஷேக்கும் மாடம் சியாங்கேஷேக்கும் விஜயம் செய்தனர். அவர்களை சந்தித்தார் நேரு.

அவர்களும் அண்ணலிடம் ‘சட்ட மறுப்பு இயக்கம் இந்த நெருக்கடி நேரத்திற்கு உவந்தது அல்ல’’ என்று வாதாடினர்.

ஆனால் காந்தியடிகள் தம் கொள்கையைச் சிறிதும் விட்டுக் கொடுக்கவில்லை.

இரங்கூன் வீழ்ந்ததும் பிரிட்டிஷ் பிரதமர் சர்ச்சில் ஒரு அறிக்கை வெளியிட்டார். ஸர் ஸ்டாபர்ட் கிரிப்ஸ் என்பவரை இந்தியாவுடன் சமரச ஒப்பந்தம் செய்ய அனுப்புவதாக வெளியிட்டார்.

அந்தப் பேச்சு வார்த்தையில் கலந்துக் கொண்டார் ஜவஹர். கிரிப்ஸ் சமரச பேச்சு காங்கிரஸுக்கு உகந்ததாக இல்லை. எனவே பேச்சு முறிந்தது.

ஆகஸ்ட் மாதத்தில் பம்பாயில் கூடிய அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில் ஒரு தீர்மானம் நிறைவேறியது. அது என்ன ? வரலாறு பிரசித்தி பெற்ற 'வெள்ளையனே வெளியேறு' என்பதே அது.

இந்த இயக்கம் மக்கள் இயக்கமாக மாறியது. அகிம்சையில் நம்பிக்கையுள்ள ஒவ்வொருவரும் ஒரு தாளில் 'செய் இன்றேல் செத்து மடி!'' என்ற வாக்கியத்தை எழுதி உடையில் குத்திக் கொண்டனர்.

இயக்கத்தின் வேகம் இங்கிலாந்தை உலுக்கியது. எனினும் அமெரிக்க பிரஸிடெண்ட் ரூஸ்வெல்ட் இந்தியாவுக்குச் சாதகமாக பேசியதை, கேட்க மறுத்தது அரசு.

அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்தது. காந்தி, நேரு, காங்கிரஸ் கமிட்டி அங்கத்தினரையெல்லாம் உடனுக்குடன் கைது செய்தது.

ஜவஹர் இம்முறை மிக நீண்ட கால சிறைவாசம் அனுபவித்தார். அவர் 1945 ஜூன் மாதம் 15ஆம் தேதி தான் விடுதலை பெற்றார். ஆமதாபாத் கோட்டை சிறையிலிருந்தனர் அனைவரும். இதுவே ஜவஹரின் ஒன்பதாவது சிறை வாசம் அதாவது 1041 நாட்கள் சிறைவாசம்.

## ஐம்பத்தி ஏழாம் அத்தியாயம்

# சிம்லா மகாநாடு

1946 ஜூன் மாதம் 15-ந் தேதி. நேருவும் இதர தலைவர்களும் விடுவிக்கப்பட்டனர். சிம்லாவில் நடந்தது ஒரு மகாநாடு. இந்த மகாநாட்டில் கலந்துக்கொள்ளும்படி நேரு, ஆஸாத், ஜின்னா ஆகியோரை அழைத்தார் வைசிராய் வேவல். வகுப்புவாதத்தை விசிறி, அதை வைத்தே இட ஒதுக்கீடு என்ற பழைய முறையையே ஆதரித்தார் வைசிராய்.

சிம்லா மகாநாட்டின் போக்கு அவ்வளவாக உற்சாக மூட்டவில்லை. எனினும் இவ்வளவு தடைகளிடையே ஒரு சிறிய நம்பிக்கை மிளிர்ந்தது நேருவின் மனத்தில்.

மகாநாடு முடிவதற்கு சில நாட்களுக்கு முன் இங்கிலாந்தில் லேபர் (தொழிலாளர்) கட்சி வெற்றிபெற்றது. அட்லி பிரதமராகப் பொறுப்பேற்றார். இந்தக் கட்சி இந்தியாவிடம் பரிவு கொண்டிருந்தது. எனவே நமக்கு சீக்கிரத்தில் சுதந்திரம் கிடைக்கும் என நம்பினார் நேரு.

ஆனால் மகாநாடு வெற்றி பெறவில்லை ; முறிந்தது.

நேதாஜியின் படை இந்தியா நோக்கி வருவதாக இருந்தது. அதற்குள் தாய்வான் ரேடியோ அவர் விமான விபத்தில் இறந்ததாக ஒலிபரப்பியது.

நேதாஜியின் இந்திய தேசீய இராணுவப் படையைச் சேர்ந்த மூவர் மீது வழக்கு தொடுத்தது பிரிட்டிஷ் அரசாங்கம். இந்திய தேசீய இராணுவ வீரர்களுக்காக கோர்ட்டில் தோன்றி பரிந்து பேசினார் நேரு.

## ஐம்பத்தி எட்டாம் அத்தியாயம்

# வாழ்க இந்தியா !

1946 ஜவஹரின் 'பாரத தரிசனம்' புத்தக உருவில் வெளிவந்தது. மார்ச் மாதம் 17-ந் தேதி தென்கிழக்கு ஆசியாவில் சுற்றுப் பிரயாணம் செய்யப் புறப்பட்டார் நேரு.

வைசிராயை சந்தித்து, பிரிட்டிஷ் மந்திரி சபையின் திட்டம் பற்றிய தமது கருத்தை தெளிவு படுத்தினார்.

இதன் பயனாக இடைக்கால சர்க்கார் அமைக்க, ஆகஸ்டு 12-ந் தேதி ஒப்புக் கொண்டார்.

முஸ்லீம் லீக் இதற்கு கடுமையான எதிர்ப்பு தெரிவித்தது. எங்கும் கொலை! கொள்ளை! அராஜக செயல்கள்! தாம் இடைக்கால சர்க்காருக்கு மறுப்பு தெரிவித்ததை மறந்தது. 'தம்மை வேண்டுமென்றே நிராகரித்தது காங்கிரஸ்' என்று குற்றஞ் சாட்டியது. 'பாகிஸ்தான் இன்றேல் ஐக்கிய இந்தியா எங்கே?' என்று அப்பாவி இந்தியர்களை கொன்று குவித்தனர் ஆத்திரத்தில்.

டிசம்பர் 4-ந் தேதி நேரு இங்கிலாந்து சென்றார். பிரிட்டிஷ் மந்திரிகளைக் கண்டு பேசினார். இந்தியா திரும்பினார்.

இந்தியாவை துண்டாடக் கூடாது என்பது அண்ணலின் எண்ணம். மௌண்ட்பாட்டன் பிரபு 'காங்கிரஸ், முஸ்லீம் லீக் இருவரும் ஒரு முடிவுக்கு வரவில்லையென்றால் ஒன்றும் செய்ய முடியாது' என்று திட்டவட்டமாகக் கூறிவிட்டார்.

அன்று காந்தி அடிகளின் மௌன நாள். நேரு, சர்தார், இராஜாஜி ஆகியோர் வைசிராயைச் சந்தித்து இந்தியாவை துண்டாட ஒப்புக் கொண்டனர்.

அரசியல் நிர்ணய சபை ஏற்படுத்தப்பட்டது. ஏன்? இந்தியாவுக்கேற்ற அரசியல் திட்டத்தை அமைக்க.

1947 மார்ச்சு 23-ந் தேதி டில்லியில் கூடிய ஆசிய மகாநாட்டைத் துவக்கி வைத்தார் ஆசிய ஜோதி.

கடைசியில் 1947-ஆம் ஆண்டு ஆகஸ்டு பதினைந்தாம் தேதி பாரதத் தாய் சுமார் இருநூறு ஆண்டுகளுக்குப் பின், சுதந்திரம் பெற்றாள்.

சுதந்திர இந்தியாவின் தலைமகன் நேரு, முதல் பிரதமர் ஆனார். அவருக்கு அப்போது வயது 58. தாம் இடைவிடாது போராடிய தர்ம போராட்டம் வெற்றி பெற்றதைக் கண்டு மகிழ்ந்தார்.

டெல்லியிலே நம் நாட்டு கொடி பறப்பதைக் கண்டு ஆனந்தப்பட்டார்.

போராட்ட வீரர், இந்த தர்ம போரில் உயிரிழந்த போர் வீரர்களுக்கு அஞ்சலி செலுத்தினார்.

'வாழ்க பாரதம்!
வாழ்க நேரு!'

என்ற மகிழ்ச்சிக்குரல் விண்ணையே தொட்டது.

நேருவின் அரிய கருத்துக்கள்

'' ஏகபோகங்கள் சோஷலிசத்தின் எதிரிகள் ''

இலட்சக்கணக்கான சகோதர மக்களின் நன்மைக்காக ஆயிரக்கணக்கானோர் உருவாக்கும் பெரிய பெரிய கட்டிடங்களில் நடைபெறும் நிர்மாண பணிகள், வ.ன வணக்கத்திற்குரியன; நிர்மாண பணிகள் நடக்கும் கட்டிடங்களே ஆலயங்கள். ஏன்? அவை நம் நாட்டின் முன்னேற்றத்திற்கு வழிகாட்டி, சிறப்பான வாழ்க்கையை மக்களுக்கு அமைத்துக் கொடுக்கின்றன. தொழிலாளர்கள் இரத்தமும் வியர்வையும் சிந்தி, தம்மையே அர்ப்பணித்துக் கொள்ளும் இவ்விடங்கள் புனிதமானவை. இங்கே உண்டு துன்பம்; ஆனால் தோல்வி இல்லவே இல்லை. இவையே புதிய சகாப்தத்தின் ஆலயங்கள், மசூதிகள், மாதா கோவில்கள்.

— நேரு

## பார்வை நூல்கள்

நேருவின் சுயசரிதம்.

With no Regrets — Krishna Huthesingh.

காங்கிரசின் வரலாறு.

A Descriptive Bibliography
by Dr. Jagadish Saran Sarma.

மகாத்மா காந்தி வாழ்க்கை — லூயி பிஷர்.

Jawaharlal Nehru — Frank Moraes.

Freedom at Midnight — Frank Moraes.

பாரத தரிசனம் — ஜவஹர்லால் நேரு.



தேசீய எழுத்தாளர் அமரர் சக்திதாசன் சுப்ரமணியனை அறிமுகம் செய்யத் தேவையில்லை. 1934-ஆம் ஆண்டு 'சுதந்திரச் சங்கு' என்ற பத்திரிகையில் ஆரம்பித்த எழுத்துத் தொண்டு, அவர் தம் இறுதி நாள் வரை தொடர்ந்தது.

நம் நாட்டு சுதந்திரப் போராட்டத்தில் பெரும் பங்கு கொண்டவர். அண்ணல் காந்தி, ஆசிய ஜோதி, சர்தார் வல்லபாய் பட்டேல், நேதாஜி, இராஜன் பாபு ஆகிய பெருந் தலைவர்களுடன் 'நவ சக்தி'யின் ஆசிரியர் என்ற முறையில் நெருங்கிய தொடர்பு கொண்டவர். இந்திய சுதந்திரப் போராட்டத்தின் ஒவ்வொரு நிகழ்ச்சியையும் நேரிற் கண்டு, தம் பத்திரிகையில் விமர்சித்தவர். 1947 ஆம் ஆண்டு டில்லியிலேயே தங்கி, எல்லா நிகழ்ச்சிகளை நேரிற் கண்டு அலசி பார்த்தவர்.

இந்த நூலில், மனித குல மாணிக்கத்தின் வாழ்க்கை, கொள்கைகள் ஆகியவற்றை படம் பிடித்துக் காட்டுகிறார். சோஷலிஸ்ட் நேருவின் வாழ்க்கைப் போராட்டத்தை நமக்கு சுவையாக விவரிக்கிறார்.

சிறந்த ஆராய்ச்சியாளராகிய அமரர் சக்திதாசன் சுப்ரமணியன் நாற்பதுக்கும் மேற்பட்ட அரிய நூல்களை தமிழ் இலக்கியத்திற்கு சமர்ப்பித்தவர். இத்தகைய சிறப்புடைய மூதறிஞர், இந்தியாவின் தலைமகன் நேருவைப் பற்றி எழுத தகுந்தவர் அன்றோ ?